ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

முதலாழ்வார்களுள்

பேயாழ்வார் அருளிச்செய்த

மூன்றாந்திருவந்தாதி.

பெருமாள்கோயில்

பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசாரியர் ஸ்வாமி

அருளிய

"திவ்யார்த்த தீபிகை" யென்னும்

உரையுடன்,

சென்னை M. R. கோவிந்தசாமி நாயுடுவால்,

மாடல் அச்சுக்கூடத்தில்,

அச்சிடுவிக்கப்பட்டது.

சுக்கில௵

1929.

(Registered Copy Right.)

ஸ்ரீமத். உ. வே. (காஞ்சீபுரம்) பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் ஸ்வாமிகள் அருளிச்செய்த க்ரந்தங்கள்.

		ரூ.	அ.
திருப்பல்லாண்டு, பெரியாழ்வார் திருமொழி விரிவுரை	...	3	0
திருப்பாவையின் விரிவுரை	...	1	0
ஷை காலிகோ பைண்ட்	...	1	4
நாச்சியார் திருமொழி விரிவுரை	...	1	8
ஷை காலிகோ பைண்ட்	...	1	12
பெருமாள் திருமொழி விரிவுரை	...	1	4
ஷை காலிகோ பைண்ட்	...	1	8
திருச்சந்த விருத்தத்தின் ஷை	...	1	10
திருமாலை, திருப்பள்ளியெழுச்சி, அமலனாதிபிரான், கண்ணிநுண் சிறுத்தாம்பு—இவற்றின் விரிவுரை	...	1	0
ஷை காலிகோ பைண்ட்	...	1	4
பெரிய திருமொழி விரிவுரை 1,2 பத்துக்கள்	...	3	0
முதல் திருவந்தாதி விரிவுரை	...	1	8
இரண்டாந்திருவந்தாதி விரிவுரை	...	1	4
திருவெழுகூற்றிருக்கையும், திருமடல்களும் விரிவுரை	...	2	4
திருவாசிரியம், பெரிய திருவந்தாதி ஷை	...	2	0
இராமாநுச நூற்றந்தாதி ஷை	...	0	12
கூரத்தாழ்வான் வைபவம்	...	0	4
ஸ்ரீவசநபூஷணஸாரம் (மூலத்துடன் கூடியது.)	...	1	0
ஷை காலிகோ பைண்ட்	...	1	4
முகுந்தமாலையின் தெளிவுரை	...	0	6
ஆளவந்தார் ஸ்தோத்ரத்தின் தெளிவுரை	...	0	12
ஷை காலிகோ பைண்ட்	...	1	0
ஸுதர்சநசதகம் மிகத்தெளிவான தமிழுரை	...	1	0
நமஸ்காரதத்துவம்	...	0	2
ஸ்தோத்ரவ்யாக்யான சோதநம்	...	0	3
ப்ரணவாதிகாரதத்துவம்	...	0	4
வாத்ஸல்யார்த்த விவரணம்	...	0	2
விதவாவபந வித்வம்ஸநம்	...	0	4
உபந்யாஸரத்நமாலா (க்ரந்த லிபி) ஸம்ஸ்க்ருத பாஷை	...	0	6
பாதுகாஸஹஸ்ராவதார தத்துவம் ஷை ஷை	...	0	4

தெலுங்குலிபிப் பிரசுரங்கள்.

ஸ்ரீவரதராஜஸ்தவம் ஸ்ரீஸ்தவம் இவற்றின் விஸ்தாரமான மணிப்ரவாள வியாக்கியானம்	...	1	8
அதிமாநுஷஸ்தவத்தின் ஷை	...	0	12
திருப்பல்லாண்டு விரிவுரை	...	0	4
ஆசார்ய ஹ்ருதய மூலம்	...	0	3
ரஹஸ்ய மூலம்	...	0	6

இன்னும் பல புஸ்தகங்களும் உள்ளன.

ஸ்ரீ:

பேரருளாளன் பெருந்தேவித்தாயார் திருவடிகளே சரணம்.



ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பொதுத் தனியன்கள்.

(நம்பெருமாள் அருளிச்செய்தது.)

శ్రీశైలేశదయాపాత్రం ధీభక్త్యాదిగుణార్ణవమ్ ।
యతీన్ద్రప్రవణం వన్దే రమ్యజామాతరం మునిమ్ ॥

[ஸ்ரீசைலேச தயாபாத்ரம் தீபக்த்யாதி குணார்ணவம்.
யதீந்த்ரப்ரவணம் வந்தே ரம்யஜாமாதரம் முநிம்.]

(ஆழ்வான் அருளிச்செய்தவை.)

లక్ష్మీనాథసమారమ్భాం + వన్దే గురుపరమ్పరామ్ ॥
యోనిత్యమచ్యుతపదామ్బుజ + రామానుజస్య చరణౌ శరణం ప్రపద్యే.

[லக்ஷ்மீநாதஸமாரம்பாம் + வந்தே குருபரம்பராம்.
யோ நித்யமச்யுத + ராமாநுஜஸ்ய சரணௌ சரணம் ப்ரபத்யே.]

(ஆளவந்தார் அருளிச்செய்தது.)

మాతా పితా యువతయః + ప్రణమామి మూర్ధ్నా ॥

[மாதா பிதா யுவதய: + ப்ரணமாமி மூர்த்நா.]

(ஸ்ரீபராசரபட்டர் அருளிச்செய்தது.)

భూతం సరశ్చ + శ్రీమత్పరాఙ్కుశమునిం ప్రణతోస్మి నిత్యమ్.

[பூதம் ஸரச்ச + ஸ்ரீமத்பராங்குசமுநிம் ப்ரணதோஸ்மி நித்யம்.]

ஸ்ரீ:

பேயாழ்வார் அருளிச்செய்த

மூன்றாந் திருவந்தாதி.

இது—மயர்வற மதிநல மருளப்பெற்ற ஆழ்வார்களுள் மூன்றாமவரான பேயாழ்வாரருளிச்செய்ததும், நாலாயிரப்பிரபந்தத்தில் மூன்றாவது ஆயிரமாக ஸ்ரீமந்நாதமுனிகளால் வகுக்கப்பட்ட இயற்பாவில் மூன்றாவது பிரபந்தமுமாகும். பொய்கையாழ்வாருடைய திருவந்தாதிப் பிரபந்தத்திற்கு அடுத்ததான (இரண்டாந்) திருவந்தாதிப் பிரபந்தத்திற்கு அடுத்தபடியாக இத்திருவந்தாதி அவதரித்ததுபற்றி மூன்றாந்திருவந்தாதி யென்று இதற்குத் திருநாமமிட்டு வழங்கலாயினார் முன்னோர்.

இப்பிரபந்த மருளிச்செய்த பேயாழ்வாருடைய திருவவதார வரலாறு முதலியன முதற்றிருவந்தாதியுரைத் தொடக்கத்தில் விவரிக்கப்பட்டுள்ளன; அங்கே கண்டுகொள்க

பொய்கையாழ்வார் முதல் திருவந்தாதியிலே ஸ்ரீமந்நாராயண னுடைய ஸ்வரூபரூபகுண விபூதிகளை நிர்ஹேதுகமான எம்பெருமா னருளாலே தோன்றிய பரபக்திதசையை அடைந்துள்ள ஜ்ஞாந விசேஷத்தாலே ஸாக்ஷாத்கரித்தநுபவித்து அத்திருமாலுக்கு சேஷமான விபூதியை ஸ்வதந்த்ரமென்றும் அந்யசேஷமென்றும்

பிரமிக்கிற அஜ்ஞாநவிருள் நீங்கும்படி பூமிமுதலிய பதார்த்தங்களைத் தகளி முதலியனவாக உருவகப்படுத்திக்காட்டி, உபய விபூதியுக்தனான எம்பெருமானே சேஷியென்றும் அவனுக்கு சேஷமாயிருப்பதே ஆத்மஸ்வரூபமென்றும் அவனது திருவடிகளிற்செய்யுங் கைங்கரியமே புருஷார்த்தமென்றும் அதனைக் கைப்படுத்தித்தரும் உபாயமும் அவன் திருவடிகளே யென்றும் நிஷ்கர்ஷித்துப் பேசினர்.

பூதத்தாழ்வார் இரண்டாந்திருவந்தாதியில்—கீழே பொய்கையாழ்வாரோடு கூடவிருந்து எம்பெருமானது திருக்குணங்களை யநுபவித்ததனால் அவனது அருளாலே வந்த தமது பரபக்தியானது பரஜ்ஞாநதசையை அடையும்படி பரிபக்வமாகி வளர, பரஜ்ஞாநதசையையடைந்த அந்த ப்ரேமவிசேஷத்தாலே எம்பெருமானுடைய தன்மைகளை முழுவதும் ஸாக்ஷாத்கரித்தநுபவித்தார்.

இத்திருவந்தாதியில் பேயாழ்வார்—கீழ் இரண்டு ஆழ்வார்களோடு கூடவிருந்து எம்பெருமானுடைய திருக்குணங்களை யநுபவித்ததனால் அவனது இன்னருளாலே பரமபக்தி தலையெடுத்து வளரப்பெற்று, கடலைக்கண்டவன் அதனுள் உண்டான முத்து மணி மாணிக்கம் முதலியவற்றைத் தனித்தனி கண்டு உகக்குமா போலே, லக்ஷ்மி சங்கு கௌஸ்துபம் முதலியவற்றுக்கு இருப்பிடமாய் அவயவ ஸௌந்தர்யாதிகள் அலையெறிகிற பெரும் புறக்கடலாகிய எம்பெருமானை ஸாக்ஷாத்கரித்து 'இன்னது கண்டேன் இன்னது கண்டேன்' என்று வகுத்துரைத்து, அக்காட்சியினாலே தமக்குண்டான ஜ்ஞாநவைசத்யத்தினால் ஸ்வரூப உபாய புருஷார்த்தங்களுக்கு உரிய அர்த்த விசேஷங்களையும் பன்னியுரைக்கிறார்.

கீழ் இரண்டு ஆழ்வார்கள் வையந்தகளி யென்றும் அன்பே தகளி யென்றும் இரண்டு திருவிளக்கு ஏற்றிக்காட்ட, இவர் கண்டேன் கண்டேன் என்கிறார் காணும். "மன்னிய பேரிருள் மாண்டபின் கோவலுள் மாமலராள் தன்னொடு மாயனைக்கண்டமை காட்டுந் தமிழ்த்தலைவ" ரிறே இவர்.

எம்பெருமானை உபயவிபூதியுக்தனென்றார் பொய்கையார்; அவன் நாராயண சப்தவாச்யனென்றார் பூதத்தார்; நாராயண சப்தத்தோடே ஸ்ரீமத்பதத்தையுங் கூட்டிக்கொள்ள வேணுமென்கிறாரிவ்வாழ்வார் என்று பூர்வர்கள் ரஸமாக நிர்வஹிக்கும்படி. இது—ஒவ்வொரு திருவந்தாதியிலும் முதற்பாசுரத்திற்கு உள்ளீடான பொருளை உபஜீவித்து அருளிச்செய்யும்படியாம்.

ஸ்ரீ:

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

மூன்றாந் திருவந்தாதி.

தனியன் உரை.

[குருகைகாவலப்பனருளிச்செய்த தனியன்.]

(இருவிகற்ப நேரிசை வெண்பா.)

சீராரும் மாடத் திருக்கோவ லூரதனுள்
காரார் கருமுகிலைக் காணப்புக்கு—ஓராத்
திருக்கண்டே னென்றுரைத்த சீரான் கழலே
உரைக்கண்டாய் நெஞ்சே யுகந்து.

பதவுரை.

சீர் ஆரும் மாடம்	அழகுபொருந்திய மாடங்களையுடைய	திருக் கண்டேன் என்று உரைத்த	'திருக்கண்டேன்' என்று தொடங்கி நூறுபாசுர மருளிச்செய்த
திருக் கோவலூர் அதனுள்	திருக்கோலலூரில்	சீரான்	சீர்மைபொருந்திய பேயாழ்வாருடைய
கார் ஆர் கரு முகிலை	கார்காலத்துக் காளமேகம்போன்ற எம்பெருமானை	கழலே	திருவடிகளையே
காண புக்கு	ஸேவிக்கப் புகுந்து	நெஞ்சே	எனது நெஞ்சமே!
ஓரா	நெஞ்சென்னும் உட்கண்ணாலே அநுஸந்தித்து	உகந்து உரை	மகிழ்ந்து பேசு;
		(கண்டாய்—முன்னிலையசை.)	

* * *—பேயாழ்வாருடைய திருவடிகளே சரணமென்று உறுதிகொண்டிருக்குமாறு தமது நெஞ்சுக்கு உபதேசிப்பதாம். ஓடித்திரியும் யோகிகளாய்ப் பதியே பரவித்தொழுந் தொண்டரா யிருந்த முதலாழ்வார்கள் மூவரும் ஒருநாளிரவு ஒன்று கூடினது திருக்கோவலூரிலேயாதலால் "சீராருமாடத்திருக்கோவலூரதனுள்" எனப்பட்டது. திருக்கோவலூராயனைக் கவிபாடுகின்ற திருமங்கையாழ்வார் "மழைமுகிலேபோல்வான் தன்னை" என்றருளிச் செய்ததை உட்கொண்டு 'காரார் கருமுகிலை' எனப்பட்டது. மழைக்காகத் திருக்கோவலிடைகழியிலே ஒதுங்கி அங்கேயொரு மழைமுகிலைக் கண்டுகளித்த பேயாழ்வாருடைய திருவடிகளையே அநுஸந்திக்கவேணு மென்றதாயிற்று. ... ... *

தனியன் உரை முற்றிற்று.

ஸ்ரீ:

ஆழ்வார் எம்பெருமானார் ஜீயர் திருவடிகளே சரணம்.

பேயாழ்வார் அருளிச்செய்த

மூன்றாந்திருவந்தாதி.

[பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம் அண்ணங்கராசார்யர் இயற்றிய திவ்யார்த்த தீபிகையுடன் கூடியது.]

திருக்கண்டேன் பொன்மேனி கண்டேன் * திகழு
மருக்க னணிநிறமுங் கண்டேன் *—செருக்கிளரும்
பொன்னாழி கண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன் *
என்னாழி வண்ணன்பா லின்று. (க)

இன்று	எம்பெருமானுடைய நிர்ஹேதுக கடாக்ஷம்பெற்ற இப்போது
என் ஆழி வண்ணன் பால்	கடல்வண்ணனான எம்பெருமானிடத்திலே
திரு	பெரிய பிராட்டியாரை
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்;
பொன் மேனி	அழகிய திருமேனியையும்
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்;
திகழும்	விளங்குகின்ற
அருக்கன்	ஸூர்யன்போன்று
அணி	உஜ்வலமான
நிறமும்	ப்ரகாசத்தையும்
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்;
செரு	யுத்தபூமியிலே
கிளரும்	பராக்ரமங்காட்டுகின்ற
பொன் ஆழி	அழகிய திருவாழியையும்
கை	திருக்கையிலே
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்;
புரி சங்கம்	வலம்புரிச்சங்கையும் (மற்றொரு திருக்கையிலே)
கண்டேன்	ஸேவிக்கப் பெற்றேன்.

* * *—முதலாழ்வார் மூவரும் ஒருவரையொருவர் அறியாமல் தேசஸஞ்சாரம் செய்துகொண்டிருக்கையில், இம்மூவரையும்,

ஓரிடத்திலே சேர்த்து ஆட்கொண்டு இவர்கள் முகமாக உலகத்தை வாழ்விக்க வேணுமென்கிற குதூஹலங்கொண்ட எம்பெருமானுடைய திருவுள்ளம் நிறைவேறுதற்காக, ஒருநாள் ஸூர்யன் அஸ்தமித்தபின்பு பொய்கையாழ்வார் திருக்கோவலூரையடைந்து அங்கு ம்ருகண்டு மஹர்ஷியின் திருமாளிகையிற்சென்று அதன் இடைகழியிற் பள்ளிகொண்டிருக்கையில் பிறகு பூதத்தாழ்வாரும் அங்கே வந்துசேர, " வைஷ்ணவோ வைஷ்ணவம் த்ருஷ்ட்வா தண்டவத் ப்ரணமேத் புவி " என்கிற சாஸ்திரமுறைப்படி ஒருவரையொருவர் வந்தனை வழிபாடுகள் செய்தவுடன் 'இவ்விடம் ஒருவர் படுக்கலாம், இருவர் உட்கார்ந்திருக்கலாம்' என்று பொய்கையார் விண்ணப்பஞ்செய்ய, அவ்விதமே இருவரும் அங்கு உட்கார்ந்திருக்கையில், பேயாழ்வாரும் அவ்விடத்திற்கே வந்துசேர, ஒருவரையொருவர் தண்டன்ஸமர்ப்பித்து உபசரித்துக்கொண்டபின் 'இவ்விடம் ஒருவர்படுக்கலாம், இருவர் இருக்கலாம், மூவர் நிற்கலாம்' என்று பொய்கை பூதத்தாரிருவரும் சொல்ல, அவ்விதமே மூவரும் அவ்விடத்திலே நின்றுகொண்டு பரஸ்பரம் பகவத்குணங்களைச் சொல்லுதலும் கேட்டலுஞ் செய்து களித்திருக்கையில்,—உலகளந்த மூர்த்தி அவர்கள் திறத்திலே திருவருள் செய்யும் பொருட்டுப் பெருத்த இருளையும் கனத்தமழையையு முண்டாக்கி, பெரிய வடிவத்தோடு அவர்களிடையே சென்றுநின்று பொறுக்க முடியாத மிக்க நெருக்கத்தைச் செய்தருள, அதன்மேல் இவர்கள் 'இதுவரையிலும் இல்லாத நெருக்கம் இப்போது உண்டானதற்குக் காரணமென்கொல்? பிறரெவரேனும் இங்கு வந்து புகுந்தவருண்டோ?' என்று சங்கிக்கையில்—பொய்கையாழ்வார் பூமியாகியதகழியில் கடல்நீரையே நெய்யாகக்கொண்டு ஸூரியனை விளக்காக ஏற்ற, பூதத்தாழ்வார் அன்பாகிய தகழியில் ஆர்வத்தை நெய்யாகவும் சிந்தையைத் திரியாகவுங்கொண்டு ஞான தீபத்தை ஏற்ற, இவ்விரண்டு ஒளியாலும் இருளற்றதனால் இப்பேயாழ்வார் எம்பெருமானைத் தாம் ஸேவிக்கப் பெற்றமையை இப்பாசுரத்தாலே வெளியிடுகிறார்.

'எம்பெருமானைக்கண்டேன்' என்று சொல்லிவிட்டால் அவனிடத்திலுள்ளவையெல்லாம் கண்டமை சொல்லப்பட்டதாக ஆகு

மாயினும், தம்முடைய மகிழ்ச்சியின் மிகுதியினால் 'அதுகண்டேன் இதுகண்டேன்' என்று சிலவற்றைப் பிரித்துப் பிரித்துப் பேசுகின்றார்.

புருஷகாரபூதையான பிராட்டியைக் கண்டேன்; அவளுடைய சேர்க்கையினாலே நிறம்பெற்ற திருமேனியைக் கண்டேன்; மரதக கிரியிலே உதித்து ஒளிவிட்டுக்கிளருகிற பாலஸூர்யனைப்போலே விளங்காநிற்பதாய் இருவருடைய ஒளியும் தன்னிலே கலசி விளங்காநின்றுள்ளதான அழகிய நிறத்தையும் கண்டேன்; இந்தச் சேர்த்திக்கு என்னதீங்கு வருகிறதோவென்று அஸ்தாநே பய சங்கைபண்ணி யுத்தஸந்நத்தனாய் கண்டார்மேலே சீறிவிழாநின்றவனாய், ச்யாமளமான அவன்வடிவுக்குப் பரபாகமாம்படி பொற்கென்ற நிறத்தையுடையனான திருவாழியாழ்வானையுங் கண்டேன்; கைத்தலத்திலிருந்துகொண்டே பெருமுழக்கத்தாலே சத்துருக்களை உயிர்மாளப்பண்ணும் ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வானையுங் கண்டேன் என்றாராயிற்று.

நூல் இயற்றுவார் மங்கல மொழி முதலிலே வகுத்துக் கூறுவராதலால் 'திரு' என்று தொடங்கினர். பொன்மேனிகண்டேன்= "ஹிரண்ய வர்ணாம் ஹரிணீம்" என்கிற சுருதியின்படி பொன்னின் நிறம் போன்ற நிறமுடையளான பிராட்டியின் நித்யஸம்ச்லேஷத்தாலே அப்படியே பொன்னிறமாகப் பெற்றதாம் எம்பெருமானுடைய கரியதிருமேனியும். அன்றியே, பொன்போல் விரும்பத்தக்க மேனி என்றுமாம். 'அர்க்க:' என்னும் வடசொல் அருக்கன் எனத்திரிந்தது. "உருவுகரிதாய் முகம் செய்தாய் உதய பருப்பதத்தின்மேல், விரியுங்கதிரே போல்வானை விருந்தாவனத்தே கண்டோமே" என்ற நாச்சியார் திருமொழிப்பாசுரம் இங்கு நினைக்கத்தகும். செருக்கிளரும் பொன்னாழி="ஸஹஸ்ர ஸூர்ய ... ஸுதர்சனம் ..." என்ற ஸ்ரீகுணரத்நகோச ஸ்ரீஸூக்தியை அநுஸந்திப்பது. "கருதுமிடம் பொருது—கைவந்த சக்கரத்தன்" என்ற திருவாய்மொழியுங் காண்க.

"புரிசங்கம் கை கண்டேன்" என்றும், "புரிசங்கு அம் கை கண்டேன்" என்றும் பிரிக்கலாம். புரி என்றது வலம்புரி என்றபடி.

அன்றியே, ஸ்புரிக்கின்ற—விளங்குகின்ற சங்கமென்றுமாம். புரி—புரிந்துபார்க்கிற [எங்கே யெங்கேயென்று சுற்றுமுற்றும் சிறிப் பார்க்கிற] சங்கு என்றுமாம். சேஷத்வத்தாலே எப்போதும் வணக்கத்தையுடைய சங்கு என்றுமாம்.

ஈற்றடியில் எம்பெருமானை ஆழிவண்ணன் என்றது மிகப் பொருந்தும்: பிராட்டி, சங்கு, கௌஸ்துபமணி முதலியவை கடலில் தோன்றினவாதலால், அப்படிப்பட்ட வஸ்துக்களை இன்று இக்கடலிலே காணப்பெற்றேனென்கிறார் போலும். .... (க)

இன்றே கழல்கண்டேன் ஏழ்பிறப்பும் யானறுத்தேன் *
பொன்தோய் வரைமார்பில் பூந்துழாய் *—அன்று
திருக்கண்டு கொண்ட திருமாலே * உன்னை
மருக்கண்டு கொண்டேன் மனம். (உ)

பொன் தோய்	பொன்மயமான பூஷணங்கள் சேரப்பெற்றதும்	என் மனம்	அடியேனுடைய மனமானது
வரை	மலைபோன்றதுமான	உன்னை	உன்னிடத்தே
மார்பில்	திருமார்பிலே (சாத்தப்பட்டிருந்த)	மருக்கண்டு கொண்டு	பொருந்தப் பெற்றதனால்
பூந்துழாய்	திருத்துழாயை	யான்	அடியேன்
அன்று	கடல்கடைந்த வக்காலத்தில்	இன்றே	இன்று
திரு	பெரியபிராட்டியார்	கழல்	உனது திருவடிகளை
கண்டு கொண்ட	அநுபவிக்கும்படியாகப் பெற்ற	கண்டேன்	கண்டு அநுபவிக்கப் பெற்றேன்;
திருமாலே	லக்ஷ்மீநாதனே !,	ஏழ்பிறப்பும்	ஜந்மபரம்பரைகளையெல்லாம்
		அறுத்தேன்	(இனிமேல் தொடராதபடி) ஒழித்திட்டேன்.

* * *—எம்பெருமானை விசேஷணங்களுடனே கண்டேனென்றார் கீழ்ப்பாட்டில்; அவனைக் கண்டபோதே விரோதிவர்க்கமெல்லாம் வேரற ஒழிந்தன வென்கிறார் இப்பாட்டில். பிராட்டி தானே ஆசைப்பட்டுவந்து ஏறும்படியான விலக்ஷணமான திருமார்புடைத்த திருமாலே! எனது மனமானது உன்னிடத்திலே

பொருந்தி ஸேவிக்கப்பெற்றதனால், இதுவரையில் பாழேகழிந்த பலபிறவிகளுக்குள்ளே இன்றே உனது திருவடிகளை ஸேவிக்கப் பெற்றவனானேன்; உன்னுடைய அநுபவத்திற்கு விரோதியா யிருந்த ஜந்மபரம்பரைகளேயும் இன்றோடு அறுத்துவிட்டேன்; (அதாவது—இனிமேல் நமக்கு நித்யாநந்தமே யொழியப் பிறவி யில்லை யென்று நிச்சயித்துவிட்டேன் என்கை.)

கீழ்ப்பாட்டில் 'பொன்மேனிகண்டேன்' என்று திருமேனி யிலே வாய்வைத்தார்; சிறுகுழந்தைகள் தாயின்முலையிலே வாய் வைப்பதுபோல சேஷபூதர் இழியுந்துறை திருவடியே யாகை யாலே முந்துறமுன்னம் திருமேனியிலே வாய்வைத்தோமே யென்று அநுதபித்தவர்போல இதில் "இன்றே கழல் கண்டேன்" என்கிறார் என்னலாம்.

பொன்தோய்வரைமார்பில்='பொன்' என்று பிராட்டியைச் சொல்லிற்றாய், 'பிராட்டி வந்துசேர்ந்த வரைமார்பிலே' என்று பொருள் கொள்ளலாமாயினும், இந்த வாக்கியத்திலேயே திருக் கண்டுகொண்ட" எனவருதலால், 'பொன் தோய்' என்பதற்குப் பொன்மயமான ஆபரணங்கள் தோயப்பெற்ற எனப் பொருள் கொள்வதே பொருந்தும். பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத் தில் "பொன்தோய் இத்யாதி" என்று ப்ரதீகமெடுத்து—"பிராட்டி தானே ஆசைப்பட்டு வந்து ஏறும்படியான மார்புடைத்த ச்ரியः பதியே!" என்று பொருளருளிச் செய்திருப்பது 'பொன்தோய்' என்றதன் பொருளன்று; "பொன்தோய் வரைமார்பில் பூந்துழாய் திருக்கண்டு கொண்ட திருமாலே" என்ற வளவுக்கு அருளிச்செய்த தாத்பர்யமாம் அது. திருத்துழாயணிந்த திருமார்வையுடையனைத் திருப்பாற்கடல் கடைந்தபோது பிராட்டியானவள் அத்திரு மார்பிலே வந்து சேர்ந்து அத்திருத்துழாயை அநுபவிக்கப் பெற்றா ளென்ற விதனால், பிராட்டிதானே ஆசைப்பட்டுவந்து மேல் விழும் படியான போக்யதையை யுடையவன் என்பது பெறப்படும். கடல் கடைந்தகாலத்துத் திருமார்பிலே திருவாபரணங்களணிந்து கொண் டிருந்தமைபற்றிப் பொன்தோய் என்று திருமார்புக்கு அடைமொழி கொடுக்கப்பட்டது. மார்பிலிருந்த பூந்துழாயைத் திருவானவள்

கண்டு கொண்டாளென்றால் அவள் மார்பிலேவந்து சேர்ந்தா ளென்றதாமென்க.

மருக்கண்டுகோண்டு = மருவி கண்டுகொண்டு என்னுமிரண்டு சொற்கள் ஒருமுழுச்சொல்லாயிற்றென்ப. ... ... (உ)

மனத்துள்ளான் மாகடல் நீருள்ளான் * மலராள்
தனத்துள்ளான் தண்டுழாய் மார்பன் *—சினத்துச்
செருநருகச் செற்றுகந்த தேங்கோத வண்ணன் *
வருநரகம் தீர்க்கும் மருந்து. (ங)

மா கடல் நீர் உள்ளான்	பெரிய திருப்பாற் கடல் நீரிலே திருக்கண் வளர்ந் தருள்பவனும்
மலராள் தனத்து உள்ளான்	பிராட்டியின் திருமுலைத் தடத்திலே அடங்கிக் கிடப்பவனும்
தண் துழாய் மார்பன்	குளிர்ந்த திருத்துழாயைத் திருமார்பி லணிந்தவனும்,
செருநர்	சத்துருக்க ளானவர்கள்
உக	அழியும்படி
சினத்து	சீற்றத்தினாலே
செற்று	த்வம்ஸம்பண்ணி
உகந்த	மகிழ்ந்தவனும்
தேங்கு ஓதம் வண்ணன்	தேங்கின கடல் போன்ற வடிவை யுடையவனும்
வரு நரகம் தீர்க்கும் மருந்து	தப்பாமல் நேரக்கூடிய ஸம்ஸாரமாகிற நரகத்தைப் போக்கவல்ல மருந்து போன்ற வனுமான ஸர்வேச்வரன்
மனத்து உள்ளான்	என்மனத்திலே வந்து சேர்ந்து விட்டான்.

* * *—கீழ்ப்பாட்டில் ஆழ்வார் தம்முடைய திருவுள்ளம் எம்பெருமானளவிலே பொருந்தினபடியைப் பேசினார்; இப்பாட்டில், அப்பெருமான்தானே தம்முடைய மனத்தில்வந்து பொருந் தினமையைப் பேசுகிறார். இப்பாட்டில், மனத்துள்ளான் என்பது வினை முற்றாக நிற்கக்கடவது. மாகடல் நீரிலும் மலராள்தனத்திலு மிருந்தவன் அவ்விடங்களை விட்டிட்டு என்மனத்திலே வந்து புகுந்தானென்கிறார்.

ஆச்ரிதரக்ஷணத்திற்காகத் திருப்பாற்கடலிலே கிடந்து அவ் விடம்போலே பெரியபிராட்டியார் திருமுலைத்தடத்தையும் ஒரு

ஸ்தானமாகவுடையனாய், அவள் மேல்விழுந்து அநுபவிக்கும்படியாகக் குளிர்ந்த திருத்துழாயாலே அலங்க்ருதமான திருமார்பையுடையனாய், ஆச்ரிதர்களுக்கு விரோதிகளாயுள்ளவர்கள் உருவழிந்து ஒழியும்படியாகச் சீறி அவர்களைத் தொலைத்து 'ஆச்ரித விரோதிகள் தொலையப் பெற்றோம்' என்று திருவுள்ளமுவந்தவனாய், அந்த உவப்பினால் புகர்பெற்று விளங்குகின்ற வடிவையுடையனாய், அநுபவித்தே தீரவேண்டும்படியான ஸம்ஸாரநரகத்தைக் கடப்பதற்கு அருமருந்தானவன் என்னுடைய நெஞ்சிலேயுள்ளான் என்றாராயிற்று.

மற்றவிசேஷணங்களைப்போலே மனத்துள்ளான் என்பதையும் ஒரு விசேஷணமாக்கி,...இப்படிப்பட்ட எம்பெருமான் வருநரகம் தீர்க்கும் மருந்தாயிருப்பன் என்று முடிக்கவுங் கூடுமாயினும் மனத்துள்ளானென முடிப்பதே நன்கு பொருந்தும்.

செருநர்—பகைவர். 'சினத்து' என்பதைச் செருநர்க்கு விசேஷணமாக்கவுமாம்; கோபத்தையுடைய பகைவர் என்றவாறு. ... ... (௩)

மருந்தும் பொருளும் அமுதமும் தானே *
திருந்திய செங்கண்மா லாங்கே *—பொருந்திய
நின்றுலக முண்டுமிழ்ந்து நீரேற்று மூவடியால் *
அன்றுலகம் தாயோ னடி. (௪)

திருந்திய	இவனே பரமபுருஷனென்று தெளிவாகக் கண்டுகொள்வதற்குக் காரணமான	நின்று பொருந்திய	நிலைநின்று பொருந்தினவனும்
செம் கண்	செந்தாமரை போன்ற திருக்கண்களையுடைய	உலகம்	உலகங்களை
மால்	ஸர்வேச்வரனும்	உண்டு	பிரளயங் கொள்ளாதபடி திருவயிற்றிலே வைத்துக் காத்தவனும்
ஆங்கே	உலகத்தைக் காத்தருள்வதாகிய அக்காரியமொன்றிலேயே	உமிழ்ந்து	பிறகு வெளிப்படுத்தினவனும்
		அன்று	முன்பொரு காலத்தில்

நீர் ஏற்று	(மாவலியிடத்தில்) யாசித்துப் பெற்று	மருந்தும்	மருந்துபோலே ஸம்ஸாரவியாதியைத் தொலைப்பன வாயும்
மூ அடியால் உலகம் தாயோன்	மூவடியாலே உலகங்களை யெல்லாம் தாவியளந்தவனுயுமுள்ள எம்பெருமானுடைய	பொருளும்	பணம்போலே வேண்டியவற்றைப் பெறுவிப்பனவாயும்
அடி தானே	திருவடிகளே	அமுதமும்	அமிருதம்போலே போக்யமாயுமிருக்கின்றன.

* * *—இடைவிடாது அநாதிகாலமாக நம்முடைய ரக்ஷணத்தொழிலிலேயே ஊன்றியிருக்கிற எம்பெருமானது திருவடிகளே உபாயமும் உபேயமுமாம் என்கிறது இப்பாட்டு. அன்று உலகம் தாயோனுடைய அடிதானே மருந்தும் பொருளும் அமுதமும் என்று இயைக்க.

மருந்து என்றது—உலகத்தில் ஔஷதமானது வியாதிகளைப் போக்குவதுபோல எம்பெருமானுடைய திருவடிகளும் நம்முடைய விரோதிகளைப் போக்கவல்லது என்றபடி. பொருள் என்றது—உலகத்தில் பணமானது பலபல பண்டங்களை வாங்குவதற்கு ஸாதனமாவதுபோல, எம்பெருமானுடைய திருவடிகளும் நமக்கு இஷ்டங்களைப் பெறுவிக்கவல்ல உபாயம் என்றபடி. அமுதம் என்றது—இப்படி இஷ்டங்களைப் பெறுவிப்பதற்கும் அநிஷ்டங்களைத் தொலைப்பதற்கும் உபாயமாக நிற்கும் மாத்திரமேயல்லாமல் ஸ்வயம் போக்யமாயும், ஆனதுபற்றியே ப்ராப்யமாயுமிருக்கு மென்றபடி.

திருந்திய செங்கண்மால்—நாம் திருந்துவதற்குப் பாங்கான திருக்கண்களை யுடையவன் என்கை. இவனே பரமபுருஷனென்று நாம் நிஸ்ஸம்சயமாக அறுதியிடலாம்படி, தன்னுடைய ஸர்வேச்வரத்வத்தைக் கோட்சொல்லித் தருகின்ற திருக்கண்கள் படைத்தவன். "கரியவாகிப் புடைபரந்து மிளிர்ந்து செவ்வரியோடி நீண்டவப் பெரியவாய கண்கள்."

'ஆங்கே பொருந்திய' என்றது—எப்போதும் அடியவர்களைக் காத்தருள்வதாகிற காரியமொன்றிலேயே எம்பெருமான் பொருந்தியிருக்கின்றமையைச் சொன்னபடி. இதனையே விவரிக்கிறார் உலகமுண்டுமிழ்ந்து நீரேற்று மூவடியா லன்றுலகந் தாயோன் என்று. பிரளயம் வந்தவாறே அதில் உலகங்களெல்லாம் அழியாதபடி அவற்றைத் திருவயிற்றிலே வைத்து நோக்கியும், பிறகு வெளிப்படுத்தியும், மஹாபலி போல்வாருடைய அபிமானத்தில் நின்றும் மீட்டுத் தன்னடிக் கீழ்ப்படுத்தியும் இவை போல்வன பல காரியங்களினால் தன்னுடைய ரக்ஷகத்வத்தைப் பிரகாசப்படுத்திக் கொண்டே யிருக்கிற எம்பெருமானுடைய திருவடிகளே உபாயோபேயங்க ளென்றதாயிற்று.

திருந்திய என்பதற்கு வேறொரு வகையாகவும் பொருள் கொள்ளலாம்; "இவ்வாத்மாக்கள் திருந்தாவிட்டால் இவற்றைத் திருத்தப் பாராதே இவற்றுக் கீடாகத் தன்னைத் திருத்திக்கொண்டிருக்கும் ஸர்வேச்வரன்" என்ற பெரியவாச்சான்பிள்ளை யருளிச் செயலின் அழகு காண்மின். ... ... (௪)

அடிவண்ணம் தாமரை அன்றுலகம் தாயோன் *
படிவண்ணம் பார்க்கடல் நீர்வண்ணம் *—முடிவண்ணம்
ஓராழி வெய்யோன் ஒளியுமஃதன்றே ✝
ஆராழி கொண்டாற் கழகு. (௫)

அன்று உலகம் தாயோன்	முன்பு உலகங்களைத் தாவியளந்த பெருமானுடைய
அடி வண்ணம்	திருவடிகளின் நிறம்
தாமரை	தாமரைபோலே சிவந்திராநின்றது;
படி வண்ணம்	திருமேனியின் நிறம்
பார் கடல் நீர் வண்ணம்	பூமியைச் சூழ்ந்த கடல் நீரின் வண்ணம்போல் கறுத்துக் குளிர்ந்திராநின்றது;
முடி வண்ணம்	கிரீடத்தினுடைய நிறம்
ஓர் ஆழி வெய்யோன்	ஒற்றைச்சக்கரமுடைய தேரிலேறின ஸூர்யனுடைய நிறம் போன்றது;
ஒளியும்	(அப் பெருமானுடைய) தேஜஸ்ஸும்

அஃது அன்றே	அந்த ஸூர்யப்ரகாசம் போன்றதே யன்றோ ;	ஆர் ஆழி கொண்டாற்கு அழகு	அழகு பொருந்திய திருவாழியைக் கையில் கொண்டுள்ள பெருமானுடைய அழகு இப்படிப் பட்டதாயிராநின்றது.

* * *—முதலாழ்வார்கள் உலகளந்த சரிதையிலே மிகவும் ஆழ்ந்திருப்பர்களென்பது ப்ரஸித்தம். உலகளந்த வரலாறு ப்ரஸ்துதமானால் அதிலே உள்குழைந்திருப்பர்கள். கீழ் "அன்றுலகந் தாயோன்" என்று உலகளந்த செய்தி ப்ரஸ்துதமாகையாலே அதிலே தோற்று அவனழகை யநுபவிக்கிறாரிதில்.

மஹாபலி தாரை வார்த்துத் தத்தம் பண்ணினவாறே உலகங்களை யளந்துகொண்ட பெருமானுடைய திருவடிகளின் நிறமானது தாமரைபோலே சிவந்திராநின்றது ; திருமேனியின் நிறமோ கடல் நீர்போலே இருண்டு குளிர்ந்திரா நின்றது ; திருவபிஷேகமோ "கதிராயிர மிரவி கலந்தெரித்தாலொத்த நீண்முடியன்" என்கிற படியே ஆதித்யன்போலே யிராநின்றது; தேஜஸ்ஸுக்கோ ஒப்பே இல்லை ; ஒருகால் ஒப்புச்சொல்ல வேணுமானால் அந்த ஆதித்ய னுடைய தேஜஸ்ஸையே ஒப்புச்சொல்ல வமையும். கையுந் திருவாழியுமான எம்பெருமானுடைய அழகு இப்படிப்பட்டதாங் கிடீர்.

ஓராழி வெய்யோன்=1. " ஸப்தயுஞ்ஜந்தி ரதமேகசக்ரம் " என்று வடமொழி வேதத்திலும், 2. "ஒரு காலுடைய தேரொருவன்" என்றும் 3. "தனியாழித் தேரார் நிறைகதிரோன்" என்றும் தமிழ் வேதத்திலும் கூறியபடியே ஒற்றைச் சக்கரம்பூண்ட தேரை யேறி நடத்துமவன் ஸூர்யன் என்க. ... . (ரு)

அழகன்றே யாழியாற்கு ஆழிநீர் வண்ணம் *
அழகன்றே யண்டம் கடத்தல் *—அழகன்றே
அங்கைநீ ரேற்றாற்கு அலர்மேலோன் கால்கழுவ *
கங்கைநீர் கான்ற கழல். (சூ)

---

1. தைத்திரீய—அரண்யகம்.
2. பெரிய திருமொழி 5—7—8.
3. சிறிய திருமடல்.

ஆழியாற்கு	திருவாழியை யுடைய ஸர்வேச்வரனுக்கு
ஆழி நீர் வண்ணம்	கடல் நீரின் நிறம் போன்ற நிறமானது
அழகு அன்றே	மிகவுமழகிய நிறமன்றோ ;
அண்டம் கடத்தல்	மேலுலகங்களை அளந்து கொண்டது
அழகு அன்றே	அழகன்றோ ;
அங்கை	உள்ளங்கையிலே
நீர் ஏற்றற்கு	மாவலி தானம் பண்ணின நீரைப் பெற்றுக் கொண்ட பெருமானுக்கு
அலர் மேலோன்	பிரமன்
கால் கழுவ	திருவடிகளை விளக்க, (அப்போது)
கங்கை நீர்	கங்காதீர்த்தத்தை
கான்ற	வெளிப்படுத்திய
கழல்	அத்திருவடி
அழகு அன்றே	அழகன்றோ.

* * *—எம்பெருமானுடைய திருமேனி யழகையும் சில திவ்ய சேஷ்டிதங்களையுஞ் சேர்த்து அநுபவிக்கிறார்.

ஆழியாற்கு ஆழிநீர்வண்ணம் அழகன்றே=எம்பெருமானுக்குப் பல திருநாமங்களுண்டு; அவற்றுள் 'கடல்வண்ணன்' என்பதும் ஒன்று; இதனை யறிந்தவர்களெல்லாரும் எம்பெருமானைக் கடல் வண்ணனென்று மாத்திரம் வாயாற் சொல்லி விடுகிறார்களேயன்றி, இதனால் எம்பெருமானுடைய அழகிய திருநிறம் சொல்லப்படு கின்றதென்று ரஸித்து அநுபவிப்பாரில்லையே!, எத்தனையோ நாமங்களை வாயாற் சொல்லிவிடுதல்போலக் கடல்வண்ண னென்ப தையும் வெறுமனே சொல்லிவிடுகிறார்களேயன்றி இந்த அழகுக் குடலான சிறந்த திருநாமமென்று உள்குழைந்து நிற்பாரில்லையே!, (இவ்வழகிய திருநிறத்துக்கு மேலே சில அலங்காரங்களும் வேணுமோ? ஸ்வயமே அழகிய வடிவன்றோ?) என்பதாக விரித் துக்கொள்க.

அழகன்றே அண்டங்கடத்தல்—எம்பெருமான் ஓங்கி உலகளந்த வரலாற்றைப் பேசுமவர்கள் 'ஓஹோ! வெகு ஸாமர்த்தியமாக அளந் தான்; வருத்தம் சிறிதுமின்றி அநாயாஸமாகக் காரியஞ் செய் தான்' என்று இந்த சக்தி விசேஷத்தைச் சொல்லிப் புகழ்கின்

றனரேயன்றி, 'வல்லார் ஆடினாற்போலே வெகு அழகாகச்செய்த காரியமன்றோ உலகளந்த செயல்' என்று அழகிலே ஈடுபட்டுப் பேசுவாரில்லையே! என்கை.

அங்கை நீரேற்றாற்கு அலர்மேலோன் கால்கழுவக் கங்கைநீர் கான்ற கழல் அழகன்றே=உலகளந்த காலத்தில் ஸத்யலோகத்தளவுஞ் சென்ற திருவடியைப் பிரமன் தன் கைக்கமண்டல தீர்த்தத்தினால் விளக்க, அத்திருவடியினின்று கங்கை பெருகிற்றென்றும் அதனைச் சங்கரன் சடையினில் தாங்கிப் பரிசுத்தியடைந்தானென்றும் உலகர் சொல்லுகையாலே, 'எம்பெருமானுடைய திருவடியானது பரமபரிசுத்தையான கங்கைக்குப்பிறப்பிடமாகையாலே மிகப் பரிசுத்தமானது' என்று இத்தனை சொல்லுகிறார்களேயல்லது, 'செவ்விய திருவடியினின்று வெண்ணிறமான கங்கைநீர் பெருகப்பெற்ற பரபாக சோபையாகிற அழகிலே ஈடுபட்டுப் பேசுவாரில்லையே! என்கை. எம்பெருமானுடையவை யெல்லாம் மிகவுமழகியவையென்றே அநுஸந்திக்க வேணுமென்பது கருத்து. (௬)

கழல்தொழுதும் வாநெஞ்சே கார்க்கடல்நீர் வேலை *
பொழிலளந்த புள்ளூர்திச் செல்வன் *—எழிலளந்தங்
கெண்ணற் கரியானை எப்பொருட்கும் சேயானை *
நண்ணற் கரியானை நாம். (எ)

நெஞ்சே	ஓ மனமே!,
கார் கடல் நீர்	கறுத்த கடலின் நீரோடே கூடின
வேலை	கரையை யுடைத்தான
பொழில்	பூமியை
அளந்த	அளந்து கொண்டவனும்
புள் ஊர்தி	கருடனை வாஹநமாக வுடையவனும்
செல்வன்	ஐச்வரிய முடையவனும்
எழில் அளந்து எண்ணற்கு அரியானை	அழகை எல்லைகண்டு நினைப்பதற்கும் முடியாதவனும்
எப் பொருட்கும் சேயானை	எல்லா வஸ்துக்களுக்கும் நெடுந்தூரத்தி லிருப்பவனும்
நண்ணற்கு அரியானை	(யார்க்கும் தம் முயற்சியாலே) கிட்டமுடியாதவனுயிருப்பவனுமான எம்பெருமானுடைய
கழல்	திருவடிகளை
நாம் தொழுதும்	நாம் வணங்குவோம்;
வா	நீயும் உடன் படுவாயாக,

* * *—கீழ்ப்பாட்டில் எம்பெருமானுடைய அழகிலே தோற்ற ஆழ்வார் தம் திருவுள்ளத்தை நோக்கி ‘அவன் திருவடிகளிலே நாம் அடிமைசெய்து வாழும்படி அநுகூலிக்கப் பாராய்’ என்கிறார்.

கடல் சூழ்ந்த உலகங்களையெல்லாம் அளந்தவனும், தனது பெருமேன்மைக் குறிப்பாகப் பெரிய திருவடியை வாஹநமாகக் கொண்டிருப்பவனும், உபய விபூதி நாயகத்வமாகிற ஐச்வரியம் மிக்கவனும், தன்னழகை இவ்வளவென்று பரிச்சேதித்து நெஞ்சால் நினைத்துப் பார்க்கவும் முடியாதபடி அழகு விஞ்சியிருப்பவனும், எந்த வஸ்துவோடும் ஒப்பிட்டுச் சொல்லவொண்ணாதபடி எல்லா வஸ்துக்களுக்கும் அப்பாற்பட்ட வைலக்ஷண்யத்தையுடையவனும், எப்படிப்பட்டவர்க்கும் ஸ்வயத்நத்தால் கிட்டுகைக்கு அருமையாயிருப்பவனுமான பரமபுருஷனுடைய திருவடிகளைத் தொழுவோம், வா நெஞ்சமே! என்றாராயிற்று.

“எழிலளந்தும் எண்ணற்கரியானை” என்றும் “எழிலளந் தங்கு எண்ணற்கரியானை” என்றும் பாடபேதங்கள். (அங்கு—அசைச்சொல்.) ... ... (எ)

நாமம் பலசொல்லி நாராயணா வென்று *
நாமங்கையாற் றொழுதும் நன்னெஞ்சே!—வா * மருவி
மண்ணுலக முண்டுமிழ்ந்த வண்டறையுந் தண்டுழாய் *
கண்ணனையே காண்கநங் கண். (அ)

நல் நெஞ்சே	நல்ல மனமே!,	உண்டு உமிழ்ந்த	ஒருகால் உள்ளே அடக்கிவைத்துப் பிறகு வெளிப்படுத்தினவனும்
நாராயணா என்று பல நாமம் சொல்லி	நாராயணன் முதலாகவுள்ள பல திருநாமங்களைச் சொல்லி	வண்டு அறையும் தண் துழாய்	வண்டுகள் படிந்து ஒலிசெய்யப் பெற்ற குளிர்ந்த திருத்துழாய் மாலையையுடையவனுமான
அம் கையால்	அழகியகையினாலே	கண்ணனையே	கண்ணபிரானையே
நாம் தொழுதும்	நாம் தொழுவோம்;	நம் கண்	நமது கண்கள்
மருவி வா	இதற்கு நீயும் உடன்பட்டுவா;	காண்க	கண்டு களித்திடுக.
மண் உலகம்	பூமி முதலிய லோகங்களை		

* * *—இந்திரியங்களெல்லாவற்றாலும் எம்பெருமானை அநுபவிக்கவேணு மென்கிறார். நாராயணாதி ஸஹஸ்ரநாமங்களைச் சொல்லுவதிலே வாய் ஊன்றியிருக்கவேணும்; கைகள் அஞ்சலி பண்ணுவதிலே அவகாஹித்திருக்கவேணும்; கண்கள் அப்பெருமானையே ஸேவித்துக் கொண்டிருக்கவேணும். மனத்தின் துணையின்றி ஒரு இந்திரியமும் ஒரு காரியமும் செய்யமாட்டாதாகையாலே இவையித்தனைக்கும் நெஞ்சு உடன்பட்டிருக்கவேணும் என்றதாயிற்று.

"வண்டறையுந் தண்டுழாய்க்கண்ணனை" என்றதனால்— தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாய் மாலையில் மதுவைப்பருகி ரீங்காரம் செய்கின்ற வண்டுகளின் ஒலியே செவிக்கு விஷயமாகவேணுமென்பதும் அந்தத் திருத்துழாயின் பரிமளமே மூக்குக்கு விஷயமாகவேணு மென்பதும் தொனிக்குமென்றுணர்க. "ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முராரிபும்" என்ற முகுந்தமாலை ச்லோகம் இங்கு ஸ்மரிக்கத்தகும். ... ... (அ)

கண்ணுங் கமலங் கமலமே கைத்தலமும் *
மண்ணளந்த பாதமும் மற்றவையே—* எண்ணிற்
கருமா முகில்வண்ணன் கார்க்கடல்நீர் வண்ணன் *
திருமாமணி வண்ணன் தேசு. (கூ)

கரு மா முகில் வண்ணன்	கரிய பெரிய மேகம் போன்ற வடிவை யுடையவனும்
கார் கடல் நீர் வண்ணன்	கரியகடல் நீரின் நிறம்போன்ற நிற முடையவனும்
திரு மா மணி வண்ணன்	அழகிய நீலமணி போன்ற நிற முடையவனு மான எம்பெருமானுடைய
தேசு	அழகை
எண்ணில்	ஆராய்ந்து நோக்குமளவில்,

கண்ணும்	திருக்கண்களும்
கமலம்	தாமரைப் பூப் போன்றவை;
கைத் தலமும்	திருக்கைத்தலங்களும்
கமலமே	அத்தாமரைப் பூப் போன்றவையே;
மண் அளந்த பாதமும்	உலகளந்த திருவடிகளும்
அவையே	அத்தாமரைப் பூப் போன்றவையே.

* * *—கீழ்ப்பாட்டில் "கண்ணனையே காண்க நங்கண்" என்று விரும்பிய ஆழ்வாருடைய கண்ணுக்கு எம்பெருமான் ஸேவைஸாதிக்க, ஸேவித்து அவனுடைய வடிவழகைப் பேசியநு பவிக்கிறாரிதில். கார்காலத்து மேகம்போலவும் கருங்கடல்நீர்போல வும் நீலமணிபோலவும் விளங்குகின்ற நிறமுடையனான எம்பெரு மானுக்குத் திருக்கண்கள் திருக்கைத்தலம் திருவடி எல்லாம் தாம ரையே என்னலாம்படியிருக்கின்றன வென்கிறார்.

"கண்ணும் கைத்தலமும் மண்ணளந்த பாதமும் கமலமே" என்று ஏகவாக்கியமாகச் சொல்லியிருக்கலாமே; அங்ஙனன்றி "கண்ணுங்கமலம் கமலமே கைத்தலமும், மண்ணளந்த பாதமும் மற்றவையே" என்று மூன்றுவாக்கியமாகச் சொல்லுவானேன்? மூன்று அவயவங்களுக்கும் தாமரையொன்றே உபமாநமாகச் சொல்லப்படுகையாலே ஒரேவாக்கியமாக அமைந்தால் நன்று யிருக்குமே என்று சிலர் நினைப்பர்; ஆநந்தமாக அநுபவம் செல்லு மளவில் சொல்லிலக்கணம் சிக்ஷிக்கப்புகுமவர்கள் அரஸிகர்களா வர்: வடமொழியில் ஒரு ச்லோகமுண்டு;—"ஆஸ்வாதநவே த்யாயாம் ஶப்தஶாஸ்த்ரவிரஸிகா: । நீவீவிஸ்ரம்ஸவேத்யாயாம் வஸ்த்ரவிசாரகா:" [அதாவது—அநுபவபரீவாஹமாக ஆநந்தம் தலைமண்டைகொண்டு பேசும்போது பொருளின்பத்தில் ஆழ்ந்து அகங்குழைய வேண்டியிருக்க, அதில் கரையாதே சொல்லைப் பிடித்துக்கொண்டு மன்றுமவர்கள்—சிருங்கார கேளி ஸமயத்தில் 'இந்தப் புடவை என்னவிலை? எவ்வூரில் நெய்வித்தது? என்ன எடையிருக்கும்?' என்று உப்புப்புளிப்பில்லாத விசாரங்கள் பண் ணுவாரைப்போலே அரஸிகர்களாவர் என்றபடி.]

"தோள்கண்டார் தோளேகண்டார் தொடுகழற் கமலமன்ன தாள்கண்டார் தாளேகண்டார் தடக்கைகண்டாருமஃதே" என்றாற் போலே ஒவ்வொரு அவயவத்திலும் வேறொன்றறியாதே மருண்டு நிற்குமவர்களுடைய பாசுரங்களை நாமோ சிக்ஷிப்போம்? திருக் கண்ணழகிலே ஈடுபட்டுக் '**கண்ணுங் கமலம்**' என்றுபேசி நெடும் போது கழித்தபின் திருக்கையழகிலே கண்வைத்துக் '**கமலமே கைத்தலமும்**' என்றார். அதற்குப்பிறகு நெடும்போது கழித்துத்

திருவடியழகிலே தோற்று 'மண்ணளந்த பாதமும் மற்றவையே' என்றார். ஒருபோதும் அழகு குன்றாமலிருக்கிற எம்பெருமானுடைய திவ்யாவயவத்திற்கு ஒருநொடிப்பொழுதில் அழகு மாறும் படியான தாமரையை ஒப்புச்சொல்லத்தகுமோ? தகாது தகாது; ஆனாலும் ஒப்பற்ற அவயவத்திற்கு அத்தாமரையல்லது வேறொன்றும் ஒப்பாக வாய்திறக்கவும் போராமையாலே இந்த அஸ்வாரஸ்யந் தோற்ற "பாதமும் மற்றவையே" என்றார். "கைவண்ணந்தாமரை வாய் கமலம்போலும் கண்ணிணையுமரவிந்தம் அடியுமஃதே" என்ற திருநெடுந்தாண்டகமும் காண்க. "ஜலஜாக்ஷ சரவிந்தமொத்தநம் வக்ஷ்வாணிதஹம்" என்றருளினர் ஸுந்தரபாஹு ஸ்தவத்திலும் ஆழ்வான்.

திருமாமணி வண்ணனுடைய தேசு—தேஜஸ்ஸானது, எண் இல்—எண்ணமுடியாதது,—இப்படிப்பட்டதென்று சிந்திக்கவும் முடியாதது என்று பொருள் கூறுதலுமாம். 'தேஜஸ்' என்னும் வடசொல் தேசு எனத்திரிந்தது. ... ... (கூ)

தேசுந் திறலுந் திருவு முருவமும் *
மாசில் குடிப்பிறப்பும் மற்றவையும்—பேசில் *
வலம்புரிந்த வான்சங்கங் கொண்டான் பேரோத *
நலம்புரிந்து சென்றடையும் நன்கு. (ய)

வலம் புரிந்த வான் சங்கம் கொண்டான்	வலது பக்கத்தில் சுழித்திருக்கிற சிறந்த சங்கை ஏந்தியுள்ள பெருமானுடைய	திறலும்	பராக்ரமமும்
பேர் ஓத	திருநாமங்களை அப்யஸிக்க வேணுமென்று	திருவும்	செல்வமும்
பேசில்	சொன்னமாத்திரத்தில்	உருவமும்	அழகிய ரூபமும்
தேசும்	தேஜஸ்ஸும்	மாசு இல் குடி பிறப்பும்	குற்றமற்ற நற்குலமும்
		மற்றவையும்	மற்றுமுள்ள நன்மைகளும்
		நலம் புரிந்து நன்கு சென்று அடையும்	தாமே ஆசைப்பட்டு நன்றாக வந்து சேரும்.

* * *—எம்பெருமானுடைய ஒப்புயர்வற்ற அழகை எல்லாரும் பேசி விடலாகுமோ? பலவகை நன்மைகளைப் பெற்ற

மஹான்களே யன்றோ அவ்வழகைப் பேசவுரியார் என்று சிலர் நினைக்க, அப்பெருமானுடைய திருநாமத்தை ஸங்கீர்த்தநம் பண்ண நினைத்த மாத்திரத்திலே எல்லாவகை நன்மைகளும் தன்னடையே மேல்விழுந்து வந்து சேருங்கிடீர் என்கிறார்.

கண்டவர்களெல்லாரும் நன்கு மதிக்கும்படியான தேஜஸ்ஸும், எதிரிகளை வாய்மாளப் பண்ணவல்லமிடுக்கும், கண்டார் நெஞ்சையுங் கண்ணையும் கவரும்படியான வடிவழகும், குற்றமற்ற நற்குடிப்பிறப்பும், மற்றும் நன்மையாகச் சொல்லப்படுமவைகளும் தானேவந்து சேரும்; யாரிடத்திலென்னில்; சங்குதங்கு தடங் கையனை எம்பெருமானுடைய திருநாமங்களைக் கற்கவேணு மென்பாரிடத்து.

இழிகுலத்திற் பிறந்திருந்தாலும் பகவத் பக்திவைபவத் தாலே அவ்விழிகுலம் நீங்கித் தொழுகுலம் உண்டாகு மென்பது இரண்டாமடியில் விளங்கும். "பண்டைக் குலத்தைத் தவிர்ந்து" என்றார் பெரியாழ்வாரும். ... ... (௧௦)

நன்கோதும் நால்வேதத் துள்ளான் * நறவிரியும்
பொங்கோ தருவிப் புனல்வண்ணன்—* சங்கோதப்
பாற்கடலான் பாம்பணையின் மேலான் * பயின்றுரைப்பார்
நூற்கடலான் நுண்ணறிவி னான். (௧௧)

- நன்கு ஓதும் நால்வேதத்து உள்ளான் — நன்றாக ஓதப்படுகிற நான்கு வேதங்களாலும் பிரதி பாதிக்கப்படுபவனும்
- நறவு இரியும் — தேன் தோற்றும்படியான போக்ய தையை யுடைய தாய்
- பொங்கு ஓதம் அருவி புனல் — கடல் போலவும் அருவிநீர்போலவு முள்ள தான
- வண்ணன் — திருமேனியை யுடையவனும்
- சங்கு ஓதம் பால் கடலான் — சங்குகளோடே கூடின அலைகளை யுடைத்தான திருப்பாற் கடலில் கண் வளர்ந்தருள்பவனும்
- பாம்பு அணையின் மேலான் — சேஷ சயனத்தின் மேல் துயில் பவனும்

பயின்று உரைப்பார் நூல் கடலான்	ஓதியுணர்த்துகின்ற வைதிகர்களின் கடல்போன்ற சாஸ்த்ரங்களால் பிரதிபாதிக்கப் படுபவனுமான எம்பெருமான்		நுண் அறிவினன்	(தம் முயற்சியாலே அறிவார்க்கு) அறிய முடியாதவன்.

* * *—எம்பெருமானுடைய திருநாம ஸங்கீர்த்தநம் பண்ணினால் எல்லாவகை நன்மைகளும் வந்துகூடு மென்றார் கீழ்ப்பாட்டில்; எம்பெருமானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை உள்ளபடியே உணருகையாகிற நன்மையும் உண்டாகுமோ என்று கேள்விபிறக்க, எம்பெருமானுடைய ஸ்வரூப ஸ்வபாவங்களை உணர்வது மாத்திரம் அருமையான தென்கிறார் இதில்.

நால் வேதங்களாலே பிரதிபாதிக்கப் பட்டவனாய், 'தேன் தோற்றது' என்னும்படியான போக்யதையையுடைய விலக்ஷண திவ்யமங்கள விக்ரஹமுடையனாய், திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மேல் திருக்கண் வளர்ந்தருளுமவனாய், மநு முதலிய மஹர்ஷிகளினால் வேதங்களுக்கு உபப்ரும்ஹண [வியாக்கியான]மாக இயற்றப்பட்ட ஸ்ம்ருதீதிஹாஸ புராணங்களினால் பிரதிபாதிக்கப்பட்டவனான எம்பெருமான், **நுண்ணறிவினன்**=நுட்பமான அறிவையுடையவன், அதாவது—அவனை அறிவது மிகவும் நுட்பமானது—அஸாத்யமானது என்றபடி.

"நுண்ணறிவினன்" என்பதற்கு—ஸூக்ஷ்மமான ஜ்ஞாநத்தாலே அறியக்கூடியவன், (நம் போன்றவர்களுடைய ஸ்தூலமான ஜ்ஞாநத்தாலே அறியக்கூடாதவன்) என்றும் பொருள் கொள்ளலாம். இரண்டாமடியில், ஓதம் + அருவி, 'ஓதமருவி' என்றாக வேண்டுவது 'ஓதருவி' என்றானது தொகுத்தல். ... (கக)

அறிவென்னுந் தாள்கொளுவி ஐம்புலனுந் தம்மில் *
செறிவென்னுந் திண்கதவஞ் செம்மி—* மறையென்றும்
நன்கோதி நன்குணர்வார் காண்பரே * நாடோறும்
பைங்கோத வண்ணன் படி. (கஉ)

மறை	வேதத்தை
என்றும்	இடைவிடாது
நன்கு ஓதி	நன்றாக அத்யயநம் பண்ணி
அறிவு என்னும்	ஜ்ஞாநமாகிற
தாள் கொளுவி	தாழ்ப்பாளையிட்டு
ஐம்புலனும்	பஞ்சேந்திரியங்களையும்
தம்மில் செறிவு என்னும்	(வெளிச்செல்லாமல்) உள்ளே அடக்கிவைப்பதாகிற
திண் கதவம் செம்மி	திடமான கதவை யடைத்து
நன்கு உணர்வார்	நன்றாக த்யாநிக்குமவர்கள்
பைங்கோதம் வண்ணன் படி	அழகிய கடலின் நிறம்போன்ற நிறமுடையனான எம்பெருமானது தன்மைகளை
நாள் தோறும்	தினந்தோறும்
காண்பர்	ஸாக்ஷாத்கரிப்பர்கள்.

* * *—எம்பெருமான் ஒருவராலும் அறியக்கூடாதவன் என்றால், 'ஆகாசத்தாமரை, மலடிபிள்ளை முதலானவைபோல் பரப்ரஹ்மமும் அடியோடு இல்லாத வஸ்து' என்றதாய்விடுமே என்று சிலர் சங்கிக்க, அப்படி அடியோடு அறியக்கூடாதவனல்லன் எம்பெருமான்; நாம் சொல்லுகிற வழியாலே அறிவார்க்கு அறியலாம் என்கிறார் இதில்.

வேதங்களை ஓதியுணர்ந்து அவற்றின் பொருள்களையும் நன்குணர்ந்து, வெளிவிஷயங்களில் இந்திரியங்களைப் போகவொட்டாமல் தடுத்து அவனைக் காணப்புகுந்தால் காணலாம்.

நல்ல ஞானம் பெற்றவர்களுடைய இந்திரியங்கள் பட்டிமேயமாட்டாவாகையால் அறிவைத் தாழ்ப்பாளாக உருவகப்படுத்தினர். பசுமை+ஓதம்=பைங்கோதம். நன்னூலில் பண்புப் பகுதியின் விகாரங்களை யுணர்த்துகின்ற "ஈறுபோதல்" என்னுஞ் சூத்திரத்தில் "இனமிகல் இனையவும் பண்பிற்கியல்பே" என்றது நோக்குக. வேறுவழிகளு முண்டு. 'பை இங்கு ஓதம்'+பைங்கோதம். 'இங்கு' என்றது—தங்குகின்ற என்றபடி. பசுமை தங்கிய ஓதமென்கை. சந்தியில் இகரம் கெட்டது. .... (கஉ)

படிவட்டத் தாமரை பண்டுலகம் நீரேற்று *
அடிவட்டத் தாலளப்ப நீண்ட—முடிவட்டம் *
ஆகாய மூடறுத்து அண்டம்போய் நீண்டதே *
மாகாயமாய் நின்ற மாற்கு. (கங)

பண்டு	முன்னொரு காலத்தில்,
உலகம் நீர் ஏற்று	பூமி தானம் வாங்கிக்கொண்டு
தாமரை படிவட்டம்	தாமரை மலர்ந்தாற் போலே வட்ட வடிவமாயிருக்கிற பூமியை
அடி வட்டத்தால் அளப்ப	திருவடியினால் அளப்பதற்காக
மா காயம் ஆய் நின்ற மாற்கு	பெரிய திருமேனியாய் [த்ரிவிக்ரமனாய்] வளர்ந்துநின்ற எம்பெருமானுடைய
நீண்ட முடி வட்டம்	நீண்ட திருவபிஷேகமானது,
ஆகாயம் ஊடு அறுத்து	மேலுலகங்களின் வழியாகச் சென்று
அண்டம் போய் நீண்டதே	அண்ட கடாஹத்தளவாக வளர்ந்ததே! இஃது என்ன ஆச்சரியம்!.

* * *—"நன்கோதி நன்குணர்வார்—நாடோறும் பைங் கோத வண்ணன்படி காண்பர்" என்றாரே கீழ்ப்பாட்டில். எம்பெருமான்படியை இன்னவிதமாகக் காண்பரென்பதைக் காட்ட வேண்டி இப்பாசுரமருளிச்செய்கிறார். இறந்த காலங்களில் நடந்த எம்பெருமானுடைய சரிதங்களெல்லாம் இன்று கண்ணெதிரே தோற்றுவதாக ஸாக்ஷாத்கரிப்பர்கள் என்று காட்டுகிறாரிப்பாட்டால்.

மாவலிபக்கல் மூவடிமண் நீரேற்றுப்பெற்று எம்பெருமான் பெரிய திருவுருவாகி உலகங்களை அளக்கும்போது அவனது திருமுடியானது மேலுலகங்களையெல்லாம் அதிக்ரமித்துச் சென்று அண்டங்களுக்கப்பால் விளங்கிற்று என்கிறார். இவ்விதமாகக் காண்பர்கள் என்றவாறு.

வட்டம்—மண்டலம்; படிவட்டம்=பூமண்டலம். எம்பெருமானுடைய ஸுகுமாரமான திருவடிபட்ட விடமென்று பூமியைத் தாமரையாக உபசரித்துச் சொல்லுகிறார். இப்பூமண்டலம் பெரிய தாமரைப்பூ மலர்ந்தாற்போலே வட்டவடிவாயிருப்பதுபற்றியுமாம். திருவடியும் பூமண்டலத்துக்குச் சமமாகப் பரவி நின்றமையால் "அடி வட்டம்" எனப்பட்டது.

ஈற்றடியில், காயம்—வடசொல்; சரீரமென்று பொருள். (கங)

மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு *
நூற்பால் மனம்வைக்க நொய்விதாம் *—நாற்பால
வேதத்தான் வேங்கடத்தான் விண்ணோர் முடிதோயும் *
பாதத்தான் பாதம் பணிந்து. (கச)

நாற்பால வேதத்தான்	நான்கு வகைப்பட்ட வேதங்களாலே பிரதிபாதிக்கப் படுபவனும்	மால் பால்	அந்த ஸர்வேச்வரனிடத்திலே
வேங்கடத்தான்	திருமலையிலே நிற்கும் ஸௌலப்ய முடையவனும்	மனம் சுழிப்ப	நெஞ்சு பொருந்த, (அதனாலே)
விண்ணோர் முடி தோயும் பாதத்தான்	நித்யஸூரிகளின் கிரீடம் உறையும் படியான திருவடிகளை யுடையவனுமான எம்பெருமானுடைய	மங்கையர் தோள் கைவிட்டு	ஸ்த்ரீகளின் தோளோடே அணையவேணு மென்கிற காமத்தைக் கைவிட்டு
பாதம்	திருவடிகளை	நூல் பால்	(வேதம் முதலிய) சாஸ்திரங்களிலே
பணிந்து	ஆச்ரயித்து	மனம் வைக்க	மனம் செலுத்துவதற்கு
		நொய்விது ஆம்	எளிதாகும்.

* * *—கீழ் "அறிவென்னுந்தாள் கொளுவி" என்கிற பாட்டில்—இந்திரியங்களைப் பட்டிமேய வொண்ணாதபடி அடக்கிநின்று சாஸ்த்ரங்களை அப்யஸித்தால் எம்பெருமான் படிகளைக் காணலா மென்றார். இது எளிதில் கைகூடாத காரியமாயிற்றே! என்று சிலர் நினைக்கக்கூடுமே; அவர்களுக்குச் சொல்லுகிறார். நான்கு வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுகிற எம்பெருமான் திருவேங் கடமலையிலே வந்துநின்று தேவர்கள் வணங்க நிற்கிற நிலையிலே ஆச்ரயித்து அப்பெருமானிடத்திலேயே நெஞ்சை ஊன்றவைத் தால், சிற்றின்பங்களிலே விருப்பம் ஒழிந்து, எம்பெருமான்படி களை யுணர்த்துகின்ற சாஸ்த்ரங்களிலே நெஞ்சைச் செலுத்து வதற்கு அநுகூலமாகும் என்கிறார்.

"மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு" என்ற விதில் சிலர் சொல்லுவதொன்றுண்டு; அதாவது சிற்றின்பங்களில் பற்று அற்றாலன்றி பகவத்விஷயத்திலே ஊற்றம் பிறவாது ; பகவத்

விஷயத்திலே ஊற்றம் பிறந்தாலன்றிச் சிற்றின்பங்களில் பற்று அறாது என்று அந்யோந்யாச்ரய தோஷம் சொல்லலாம்படி யிருக்கையாலே 'மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு' என்று எங்ஙனே சொல்லலாம்? என்று:

இதற்குப் பெரியோர் பணிப்பதாவது—நாம் சிற்றின்பங்களை விரும்பி வேசி முதலானவர்களைக் காண்பதையே முக்கிய நோக்கமாகக்கொண்டு பலகாலும் பகவத்ஸந்நிதிகளுக்குச் செல்லுகிறோம்; அப்போது யாத்ருச்சிகமாக எம்பெருமான் திருமேனியிலும் கண் செலுத்த நேருகின்றது; இப்படி பலகால் நேர்ந்தால், ஒருகால் ஸுக்ருத விசேஷத்தினால் அப்பெருமானிடத்திலேயே நம்மனம் லயித்து 'என்னமுதினைக் கண்டகண்கள் மற்றொன்றினைக் காணாவே' என்னும்படியாக ஆகி, சிற்றின்பங்களில் ஜிஹாஸை பிறந்துவிடுகின்றது: ஆகவே 'மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர்தோள் கைவிட்டு' என்றது பொருந்தும்; அந்யோந்யாச்ரயதோஷமில்லை. சிற்றின்பங்களில் பற்று அற்றால்தான் பகவத்விஷயத்தில் மனம் சுழிக்குமென்று நியதிகூறவேண்டா—என்பர்.

மாற்பால்=பால்—ஏழனுருபு: மாலிடத்திலே என்கை. 'நூற்பால்' என்றவிடத்தும் இங்ஙனமே. நோய்வீது—ஸுலபம். (கச)

பணிந்துயர்ந்த பௌவப் படுதிரைகள் மோத *
பணிந்தபண மணிகளாலே—அணிந்தங்
கனந்தனணைக் கிடக்குமம்மான் * அடியேன்
மனந்தனணைக் கிடக்கும் வந்து. (கரு)

பணிந்து உயர்ந்த	தாழ்ந்தும் ஏறியும் வீசுகின்றவையான
பௌவம் படு திரைகள்	கடலிலுண்டான அலைகளானவை
மோத	நாலு பக்கமும் அடிக்க,
பணிந்த	(அத்திவலைகள் திருமேனியில் படாதபடி குடை பிடித்தாற்போலே) கவிந்திருக்கிற
பணம்	படங்களிலுண்டான
மணிகளாலே	மாணிக்கங்களினாலே
அணிந்த	அலங்கரிக்கப் பட்டிருக்கிற

அனந்தன்	திருவனந்தாழ்வானுகிற	அங்கு	அங்கு நின்றும்
அணை	திருப்பள்ளி மெத்தையிலே	வந்து	புறப்பட்டுவந்து
கிடக்கும்	திருக்கண் வளர்ந்தருளுகிற	அடியேன்தன்	அடியேனுடைய
அம்மான்	ஸர்வேச்வரன்	மனம் அணை	மனமாகிற படுக்கையில்
(அந்தப் படுக்கையிற் பொருந்தாதே)		கிடக்கும்	சயனித்திரா நின்றான்.

* * *—கீழ்ப்பாட்டில் "மாற்பால் மனஞ்சுழிப்ப மங்கையர் தோள் கைவிட்டு, நூற்பால் மனம்வைக்க நொய்விதாம்" என்றருளிச் செய்த ஆழ்வாரைநோக்கி 'சாஸ்த்ரங்களில் மனம்வைத்து அவ்வழியால்தான் எம்பெருமான் படிகளை அறியவேணுமென்கிறீரே; நீர் அவ்விதமாகத்தான் அறிந்தீரோ?' என்று சிலர் கேட்க; எம்பெருமானுடைய நிர்ஹேதுகமான விஷயீகாரத்திற்கு இலக்கானவர்கள் சாஸ்த்ரங்களில் ச்ரமப்படவேணுமோ? அவன்தானே ஒருவரை விஷயீகரிக்கத் திருவுள்ளம்பற்றினால் எல்லைகடந்த அன்பு கொண்டு அவன் செய்யும் காரியங்களைத் தடுப்பாருண்டோ? திருப்பாற்கடலிலே பரமஸுகமாகக் கண்வளர்ந்தருளுமவன் அதனை விட்டிட்டு என்னெஞ்சிலே வந்து கிடக்கிறானே; இது அவனுடைய நிர்ஹேதுக கிருபையினால் வந்ததன்றோ? இங்ஙனமே அவன் நிர்ஹேதுகமாக விஷயீகரிக்க விரும்பப் பெறுமவர்களுக்கு யாதொரு சாஸ்த்ர பரிச்ரமமும் வேண்டா; நான் பெற்ற பேறு அவர்களும் பெறுவர்கள்—என்ற கருத்தையடக்கி இப்பாசுரமருளிச் செய்கிறார்.

கடலில் அலை வீசும்போது ஏறியும் தாழ்ந்தும் வீசுவது இயல்பாதலால் 'பணிந்துயர்ந்த' எனப்பட்டது. "அணிந்தங்கு" என்றவிடத்துத் தொகுத்தல் விகாரம். அணிந்த அங்கு என்று பிரிக்க. அநந்தன்—வடசொல். .... (௧௫)

வந்துதைத்த வெண்டிரைகள் செம்பவள வெண்முத்தம் *
அந்திவிளக்கு மணிவிளக்காம் *—எந்தை
ஒருவல்லித் தாமரையாள் ஒன்றியசீர் மார்பன் *
திருவல்லிக் கேணியான் சென்று. (௧௬)

ஒரு அல்லி தாமரையாள்	அழகிய இதழ்களை யுடைய தாமரைப்பூவை இருப்பிடமாக வுடைய பிராட்டி
சென்று ஒன்றிய சீர் மார்பன்	வந்து பொருந்திய அழகிய திருமார்பை யுடையவனும்
வந்து உதைத்த வெண் திரைகள் செம் பவளம் வெண் முத்தம்	வந்து வீசுகின்ற வெளுத்த அலை களிலுண்டான சிவந்தபவழங் களும் வெளுத்த முத்துக்களும்
அந்தி விளக்கும் அணி விளக்கு ஆம்	ஸந்தியாகாலத்தை விளக்குகின்ற மங்களதீபங்களாக ஆகப்பெற்ற
திருவல்லிக் கேணியான்	திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருப்பவனுமான பெருமான்
எந்தை	எனக்கு ஸ்வாமி.

* * *—திருப்பாற்கடலில் நின்றும் தம் திருவுள்ளத்துக்கு வரும்போது திருவல்லிக்கேணியில் தங்கி வந்தானென்கிறார் போலும். முதலிரண்டடிகள் திருவல்லிக்கேணிக்கு விசேஷணம். அருகிலுள்ள கடலில் அலைகள் மோதும்போது சிவந்த பவழங் களும் வெளுத்த முத்துக்களும் கொழிக்கப்படுகின்றன; அவை ஸாயம் ஸந்தியா காலத்தில் ஏற்றப்படுகின்ற மங்கள தீபமோ என்னலாம்படி யிருக்கின்றனவாம். சில விளக்குகள் செந்நிறமான வொளியை யுடையனவாயும் சில விளக்குகள் வெண்ணிறமான வொளியை யுடையனவாயும் இருப்பதுண்டாகையாலே செந்நிறப் பவழங்களும் வெண்ணிற முத்துக்களும் திருவிளக்காகச் சொல்லப்பட்டன. திருவல்லிக்கேணியில் எப்போது பார்த்தாலும் திரு விளக்கேற்றப்பெற்ற மாலைப்பொழுதாகவே காணப்படுமென்று கருத்து. இப்படிப்பட்ட திருவல்லிக்கேணியில் எழுந்தருளியிருக் கின்ற திருமாமகள் கொழுநன் எனக்கு ஸ்வாமி—என்றதாயிற்று.

'ப்ரவாளம்' என்னும் வடசொல் பவள மெனவும், 'முக்தா' என்னும் வடசொல் முத்து எனவும், 'ஸந்த்யா' என்னும் வட சொல் அந்தி யெனவும் திரிந்தன. .... (கசு)

சென்றநாள் செல்லாத செங்கண்மா லெங்கள்மால் *
என்றநா ளெந்நாளும் நாளாகும் *—என்றும்
இறவாத வெந்தை யிணையடிக்கே யாளாய் *
மறவாது வாழ்த்துகவென் வாய். (கஎ)

என்றும் இறவாத எந்தை	ஒருநாளுமழி வில்லாதவனான எம்பெருமானுடைய
இணை அடிக்கே	உபயபாதங்களுக்கே
ஆள் ஆய்	ஆட்பட்டு
மறவாது	மறவாமல்
என் வாய் வாழ்த்துக	என்வாய் வாழ்த்த வேணும்; (இங்ஙனே யாகில்)
சென்ற நாள்	கீழ்க்கழிந்த காலங்களும்
செல்லாத	இனிமேல் வரப்போகிற நாள்களும்
செங்கண் மால் எங்கள் மால் என்ற நாள்	'புண்டரீகாக்ஷன் நம்மிடத்து வியாமோஹமுடையனாயிருக்கிறான்' எனறு சொல்லப் பெற்ற நிகழ்காலமுமாகிய
எந்நாளும்	எல்லாக்காலங்களும்
நாள் ஆகும்	நல்லகாலமேயாகும்.

* * *—எம்பெருமானை வாழ்த்தப் பெறுவதொரு நாள் உண்டானால், கீழ்க்கழிந்த காலமும் மேல்வருங்காலமும் எல்லாம் நன்னாளாய் விடுமென்கிறார். இன்று ஒருநாள் எம்பெருமானை வாழ்த்தப்பெற்றால் அந்த ஒருநாள் மாத்திரம் நல்ல நாளாகுமே யன்றி, கீழே பழுதே கழிந்த காலமும் இனிமேல் வரப்போகிற காலமுங்கூட நன்னாளாய் விடுமோ? என்னில்; கேண்மின்; ஒருவன் நெடுங்காலமாக தரித்ரனாயிருந்து ஒருநாளில் செல்வம் மிக்கவனானால், அவனுக்கு அதற்கு முந்திக் கழிந்த நாட்களில் பலவகைக் கஷ்டங்களுண்டாயிருந்தாலும் அந்தக்கஷ்டகாலம் கழிந்தொழிந்து போயிற்றாகையாலே சென்ற நாட்களின் கெடுதல்கள் தோற்றமாட்டா; வயிறார உண்டபின் பசித்திருந்த முற்காலம் என் செய்யும்? அதுபோல, எம்பெருமானை வாழ்த்தப்பெறும் நாள் உண்டானபின்பு, அவனை வாழ்த்தாமல் பாழே கழிந்த கீழ்நாட்களும் 'கழிந்துபோன நாட்கள்' என்ற காரணத்தினாலேயே நன்னாளாய் விடுமென்க. ஒருவன் ஸந்தோஷமாயிருக்கும்போது 'மேலுள்ள காலமெல்லாம் நாம் இப்படியே ஸந்தோஷமாகவே இருப்போம்' என்று நினைத்திடுவனேயன்றி 'நாளைக்கே நாம் துயரை அநுபவிக்கப்போகிறோம்' என்று நினைக்கமாட்டான்; அதுபோல, ஆழ்வாரும் 'எம்பெருமானை வாழ்த்தப் பெறுவதொருநாள் வாய்த்து விட்டால் அந்த வாழ்த்து மேலுள்ள காலமெல்லாம் மாறாதே செல்லும்' என்றெண்ணி எதிர்காலமும் நன்னாளாகுமென்கிறார்.

ஒருவனுக்கு நிகழ்காலமொன்று மாத்திரம் நன்றாயிருந்துவிட்டால் அவனுக்கு இறந்த காலமும் எதிர்காலமும் நன்றே என்க.

என்றுமிறவாத வெந்தையிணையடிக்கே ஆளாய் என்வாய் மறவாது வாழ்த்தப்பெற்றால், சென்றநாள் செல்லாதநாள் செங் கண்மா லெங்கண்மாலென்ற அந்நாள் ஆகிய எந்நாளும் நாளாகும் என்றதாயிற்று. .... (கஎ)

வாய்மொழிந்து வாமனனாய் மாவலிபால் * மூவடிமண்
நீயளந்து கொண்ட நெடுமாலே *—தாவியநின்
எஞ்சா விணையடிக்கே யேழ்பிறப்பு மாளாகி *
அஞ்சா திருக்க வருள். (கஅ)

வாமனன் ஆய்	வாமநரூபியாகி	தாவிய	ஸர்வவ்யாபியான
மாவலி பால்	மஹாபலியினிடத்தில் (சென்று)	நின் இணை அடிக்கே	உனது உபய பாதங்களுக்கே
வாய் மொழிந்து	(மதுரமான சில) வாய்மொழிகளைச் சொல்லி	ஏழ் பிறப்பும்	எல்லாப் பிறவிகளிலும்
மூ அடி மண்	மூவடிநிலத்தை (இரந்து பெற்று)	ஆள் ஆகி	நான் ஆட்பட்டவனாகி
அளந்து கொண்ட	அதை அளந்து கொண்ட	அஞ்சாது இருக்க	பயங்கெட்டிருக்கும் படி
நெடு மாலே	ஸர்வேச்வரனே !,	நீ அருள்	நீ கிருபைபண்ண வேணும்.
எஞ்சா	சுருங்குதலின்றி		

* * *—உலகளந்த பெருமானே ! உன் திருவடிகளில் எனக்கு நித்யகைங்கர்யத்தைத் தந்தருளி உன்னுடைய அநுபவத்துக்கு இடையூறான ஸம்ஸாரபயத்தையும் மாற்றியருளவேணு மென்கிறார்.

'நம்முடைய உடைமையை நாம் இழக்கலாகாது' என்கிற திருவுள்ளத்தினால் உலகங்களையெல்லாம் அடிப்படுத்திக்கொண் டதுபோல உன்னுடைமையாகிய அடியேனையும் அடிப்படுத்திக் கொள்ளவேணு மென்கைக்காக இங்கு உலகளந்த சரிதையை எடுத்துக் கூறினரென்க. வாமநனுடைய மழலைச்சொற்களிலேயே மாவலி மதிமயங்கினனாதலால் அது தோன்ற 'வாய்மொழிந்து' என்கிறார். இரண்டாமடியிலுள்ள 'நீ' என்பது ஈற்றடியில் அந்வயிக்கக்கடவது. அஞ்சாதிருக்க='நாளைக்கே இந்த பகவத்

கைங்கரியம் மாறிப்போய் ஸம்ஸார தாபத்ரயமே மேலிட்டு விடுமோ?' என்று அஞ்சாதிருக்க. ... . (கஅ)

அருளா தொழியுமே யாலிலேமேல் * அன்று
தெருளாத பிள்ளேயாய்ச் சேர்ந்தான் *—இருளாத
சிந்தையராய்ச் சேவடிக்கே செம்மலர்தூய்க் கைதொழுது *
முந்தையராய் நிற்பார்க்கு முன். (கசு)

இருளாத சிந்தையர் ஆய்	அஜ்ஞானவிருள் சேராத நெஞ்சை யுடையராய்க் கொண்டு
சே அடிக்கே	திருவடிகளுக்கே
செம் மலர் தூய்	நல்ல புஷ்பங்களே ஸமர்ப்பித்து
கை தொழுது	அஞ்ஜலிபண்ணி
முந்தையர் ஆய் நிற்பார்க்கு	'நான் முன்னே நான் முன்னே' என்று நிற்கும் பக்தர்களுக்கு,—
முன் அன்று	முன் பொருகாலத்தில்
தெருளாத பிள்ளை ஆய்	அறியாத சிறு குழந்தையாய்
ஆல் இலே மேல் சேர்ந்தான்	ஆலந்தளிரில் சயனித்த பெருமான்
அருளாது ஒழியுமே	கிருபைபண்ணுமற் போவனே?

* * *—“அஞ்சாதிருக்கவருள்” என்று சொல்லிவிட்டால் தவறாமல் அருள்வனேவென்ன; ‘நம் அருளே எதிர்பார்ப்பார் ஆரேனுமுண்டோ?' என்று நோக்கியிருக்கு மெம்பெருமான் அருள்செய்யா தொழியமாட்டான்; அருள்செய்தே தீருவன்; ஆனல் எல்லார்க்கும் அருள்செய்தால் ஸர்வமுக்தி ப்ரஸங்கமுண்டாகி லீலாவிபூதியே அழிந்துபோக நேருமாதலால், இருளாத சிந்தையராய்ச் சேவடிக்கே செம்மலர் தூய்க் கைதொழுது முந்தையராய் நிற்பார் எவரோ, அவர்க்கே அருள்செய்யக் கடமைப்பட்டிருக்கிற னெம்பெருமான் என்கிறார். உலகமெல்லாம் பிரளயத்தில் அழிவதாயிருக்கையில் அவற்றையெல்லாம் வாரியெடுத்து வயிற்றினுள்ளடக்கிச் சிறியதோ ராலந்தளிரிலே துயின்றவனாதலால் எம்பெருமானுக்கு அடியார்களைக் காத்தருள்வதில் ஸாமர்த்தியமும் உத்ஸாஹமும் குறையற்றதென்று காட்டுதற்காக ‘ஆலிலேமேலன்று தெருளாத பிள்ளையாய்ச் சேர்ந்தான்' என்றார்.

இருளாத சிந்தையராய்=ரஜஸ்தமோ குணங்கள் கலசாமல் சுத்தஸாத்விகராய் என்கை. முந்தையர்—பகவத்கைங்கரியத்திற்கு முற்பட்டிருக்குமவர்கள். .... (கக)

முன்னுலக முண்டுமிழ்ந்தாய்க்கு * அவ்வுலக மீரடியால்
பின்னளந்து கோடல் பெரிதொன்றே *—என்னே
திருமாலே செங்கணெடியானே * எங்கள்
பெருமானே நீயிதனைப் பேசு. (உ0)

முன்	முன்பொரு காலத்தில்	அளந்து கோடல்	அளந்து கொள்வதானது
உலகம்	உலகங்களை யெல்லாம்	பெரிது ஒன்றே	பெரியவொரு காரியமாகுமோ? [அருமையோ?.]
உண்டு	திருவயிற்றிலே வைத்திருந்து	திரு மாலே	திருமகள்நாதனே!
உமிழ்ந் தாய்க்கு	பிறகு வெளிப்படுத்தின உனக்கு	செம் கண் நெடியானே	சிவந்த திருக் கண்களையுடைய ஸர்வாதிகனே!
அவ்வுலகம்	அந்த வுலகங்களை	எங்கள் பெருமானே	எமக்கு ஸ்வாமி யானவனே!
பின்	பின்பொரு காலத்தில்	நீ இதனை பேசு	நீ இதை (எனக்குத் தெரிய)ச் சொல்லவேணும்;
ஈர் அடியால்	இரண்டு திருவடிகளாலே	என்னே	இஃது என்னோ?.

* * *—கீழ்ப் பதினெட்டாம் பாட்டில் உலகளந்த சரிதமும் பத்தொன்பதாம் பாட்டில் உலகமுண்ட சரிதமும் அநுஸந்திக்கப்பட்டன வாதலால் இவ்விரண்டு சரிதங்களையும் சேர்த்தநுபவித்து, வேடிக்கையாக ஒரு கேள்வி கேட்கிறார் எம்பெருமானையே நோக்கி. அதாவது—மிகச்சிறிய வடிவுகொண்டு ஏழுலகங்களையும் உண்டும் உமிழ்ந்தும் போந்த நீ அவ்வுலகங்களை மிகப் பெரிய இரண்டு திருவடிகளினால் அளந்துகொண்டாயென்றால் இது ஒரு வியப்போ? இதை அரிய பெரிய காரியமாக எல்லாரும் சொல்லிக் கொள்ளுகிறார்களே, இஃது என்னோ? என்கிறார். .... (உ0)

பேசுவார் எவ்வளவு பேசுவர் * அவ்வளவே
வாசமலர்த் துழாய் மாலையான் *—தேசுடைய
சக்கரத்தான் சங்கினான் சார்ங்கத்தான் * பொங்கரவ
வக்கரனைக் கொன்றான் வடிவு. (உக)

வாசம் மலர் துழாய் மாலையான்	மணம்மிக்க புஷ்பங்களோடு கூடின திருத் துழாய் மாலையை அணிந்தவனும்
தேசு உடைய சக்கரத்தான்	தேஜஸ்ஸையுடைய திருவாழியை ஏந்தினவனும்
சங்கினான்	ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடையவனும்
சார்ங்கத்தான்	சார்ங்கவில்லை யுடையவனும்
பொங்கு அரவம் வக்கரனை கொன்றான்	மிக்க ஆரவாரமுடையனாய் வந்த தந்தவக்த்ரனைக் கொன்றொழித்தவனுமான எம்பெருமானுடைய
வடிவு	ஸ்வரூப ஸ்வபாவங்கள்
(எப்படிப்பட்டவை யென்னில்)	
பேசுவார் எவ்வளவு பேசுவர் அவ்வளவே	பேசுகின்ற அவரவர்கள் எவ்வெவ்வளவு பேசுகின்றார்களோ அவ்வவ்வளவேயாம்.

* * *—'எம்பெருமானுடைய பெருமைகளைப் பேசுவதற்கு மாஞானிகளால்தான் ஆகும், மற்ற அற்பஞானிகளால் ஆகாது' என்பதில்லை; வாய் திறந்து நான்கு சொற்களைத் தொடுத்துப் பேச வல்லவர்கள் எவராயிருந்தாலும் எம்பெருமான் பெருமையைப் பேசலாம். ஆனால், நிரம்பிய ஞானமுடையார் பேசினாலன்றோ அவன்பெருமை உள்ளளவும் பேசினதாக ஆகும்; அற்பஞானிகள் பேசினால் ஒருதிவலையளவும் பேசினதாக ஆகமாட்டாதே என்னில்; அப்படியில்லை: ஆயிரம்வாய்படைத்த ஒன்றான திருவனந்தாழ்வான்தானே பேசினாலும் எம்பெருமான் பெருமை முழுதும் பேசினதாக ஆகப்போகிறதில்லை யார்பேசினாலும் அவனுடைய பெருமைக்கடலிலே ஒரு திவலைமாத்திரமே பேசினதாக ஆகும். ஆகவே பேச வாய்படைத்தவர்களெல்லாரும் பேசலாம். எம்பெருமானுடைய வைபவம் எப்படிப்பட்டதென்றால், ஒருவன் சுருக்கமாகப் பத்துவார்த்தை சொன்னாலும் அதற்குள்ளே அவன் பெருமை அடங்கி விட்டது என்னும் படியாயிருக்கும்; மற்றொரு

வன் ஒரு மஹாபாரதமாகப் பண்ணியுரைத்தாலும் அதற்குள்ளும் அவன் பெருமை அடங்கிவிட்டது என்னும்படியாகவேயிருக்கும்—என்று இக்கருத்தையடக்கி இப்பாசுரமருளிச்செய்கிறார்.

பேசுவார் எவ்வளவு பேசுவர்—(இது கேள்வியன்று;) பேசுகிறவர்கள் மிக்க சுருக்கமாகவோ மிக்க விரிவாகவோ நடுத்தரமாகவோ எந்த அளவில் எம்பெருமான் வடிவைப் பேசுகிறார்களோ, [அவ்வளவே ..வடிவு] அது அவ்வளவாகவேயிருக்கும். எல்லைகண்டு பேசுதல் யார்க்கும் முடியாதென்கை. திருவரங்கத்தமுதனார் எம்பெருமானரைப்பற்றிச் சொல்லும்போது "பெரியவர் பேசிலும் பேதையர் பேசிலும் தன் குணங்கட்கு உரிய சொல் என்று முடையவன்" என்று பணித்த பாசுரம் இக்கருத்ததே.

போங்கரவவக்கரனைக் கோன்றான்=வக்கரன்—தந்தவக்ரன். (தந்தவக்ரன் என்பது முண்டு) கண்ணபிரான் ருக்மிணிப்பிராட்டியை ஸ்வீகரித்தருளினபோது எதிர்த்து வந்து போர்செய்த அரசர்களில் இவனொருவன்; சிசுபாலனுக்குப் பரிந்து வந்தவன்.

வடிவார் முடிகோட்டி வானவர்கள் * நாளும்
கடியார் மலர்தூவிக் காணும்—படியானை *
செம்மையா லுள்ளுருகிச் செவ்வனே நெஞ்சமே *
மெய்ம்மையே காண விரும்பு. (உ௨)

நெஞ்சமே	ஓ மனமே!,	காணும் படியானை	ஸேவிக்கப்பெற்ற திருமேனியையுடையனை எம்பெருமானை
வானவர்கள்	நித்யஸூரிகள்	செம்மையால்	முறைப்படியே
வடிவு ஆர்	அழகு பொருந்திய	உள் உருகி	உருக்கங்கொண்டு
முடி	கிரீடங்களை	செவ்வனே	ருஜுவான வழியாலே
கோட்டி	தாழ்த்தி	மெய்ம்மையே	உள்ளபடியே
கடி ஆர் மலர்	மணம் பொருந்திய புஷ்பங்களை	காண	ஸேவிப்பதற்கு
நாளும்	நாள்தோறும்	விரும்பு	ஆசைப்படு.
தூவி	ஸமர்ப்பித்து		

* * *—நித்யஸூரிகள் தங்களுடைய அழகிய முடிகளை வணக்கி நறுமலர்களைப் பணிமாறி ஸேவிக்கும்படியாகவுள்ள பெரு

மானே நெஞ்சமே! காணவிரும்பு என்கிறார். அவனைக்காண விரும்பினால் கண்டுவிட முடியுமோ? என்னில், அதற்காக விசேஷித்து அருளிச்செய்கிறார் 'சேம்மையால் சேவ்வனே மெய்ம்மையே காண விரும்பு' என்கிறார். அதாவது—நம்முடைய முயற்சியால் நாமே காணவிரும்பினால் அவ்விருப்பம் பழுதாய்விடும்; அங்ஙனன்றியே 'பிரானே! உன் வடிவை நீயேகாட்டித் தந்தருளவேணும்' என்று அத்தலையாலே வருங்காட்சியை வேண்டினால் பழுதுபடாமே காணப்பெறலாமிறே இப்படி அவனே காட்டக்காண்கையே செம்மையால் சேவ்வனே காண்கையாம். .... (உஉ)

விரும்பிவிண் மண்ணளந்த அஞ்சிறைய வண்டார் *
சுரும்பு துளையில் சென்றூத *—அரும்பும்
புனந்துழாய் மாலையான் பொன்னங் கழற்கே *
மனந்துழாய் மாலாய் வரும். (உ௩)

வண் தார்	அழகிய மாலையிலே	விரும்பி விண் மண் அளந்த பொன் அம் கழற்கே	ஆசைப்பட்டு விண்ணுலகத்தையும் மண்ணுலகத்தையுமளந்த மிகவழகிய திருவடிகள் விஷயத்திலேயே
அம் சிறைய சுரும்பு	அழகிய சிறகுகளையுடைய வண்டுகள்	மனம்	எனது மனமானது
துளையில் சென்று ஊத	ரஸநாடியிலே படிந்து ஊத (அதனால்)	துழாய்	அவகாஹித்து
அரும்பும்	அரும்புகள் உண்டாகப்பெற்ற	மால் ஆய் வரும்	மயங்கிக் கிடக்கின்றது.
புனம் துழாய் மாலையான்	நல்ல திருத்துழாய் மாலையை அணிந்தவனான எம்பெருமானுடைய		

* * *—எம்பெருமானுடைய திருவடிகளிலேயே தம்முடைய திருவுள்ளம் வியாமோஹங் கொண்டிருக்கும்படியை அருளிச்செய்கிறார். அப்பெருமான் எப்படிப்பட்டவன்? அஞ்சிறைய சுரும்பு வண்தார் துளையில் சென்று ஊத அரும்பும் புனந்துழாய்மாலையான்= அவன், திருவடி திருமார்பு திருத்தோள் திருமுடி முதலானவிடங்களில் திருத்துழாய்மாலைகள் அணிந்துகொண்டிருக்கிறான்; அவற்றில் வண்டுகள் படிந்து ரஸநாடிகளைக் கண்டுபிடித்து அங்கு ஊது

கின்றன; அதனால் அந்த மாலைகள் அரும்புகின்றனவாம்; திருத்துழாய் தன்னிலத்தில் இருந்தால் எப்படி அரும்புமோ அப்படி தனது திருமேனியிலும் அரும்பப்பெற்றவன் எம்பெருமான் என்று திருமேனிவளம் சொல்லிற்றாயிற்று.

முதலடியின் முடிவிலுள்ள வண்டார் என்பதை 'வண்தார்' என்று பிரிக்க 'வண்டு ஆர்' என்றும் பிரிப்பர்; அப்போது, வண்டு ஆர்—பெண்வண்டுகளோடு கூடின, சுரும்பு—ஆண்வண்டுகள் என்று பொருள்கொள்க

ஈற்றடியில், துழாய்—துழாவி என்றபடி. 1. "கடலும் மலையும் விசும்புந் துழாய்" என்ற திருவாய்மொழிப் பிரயோகமுங் காண்க. .... (உங)

வருங்கா லிருநிலனும் மால்விசும்பும் காற்றும் *
நெருங்குதீ நீருருவுமானான் *—பொருந்தும் *
சுடராழி யொன்றுடையான் சூழ்கழலே * நாளும்
தொடராழி நெஞ்சே தொழுது. (உச)

ஆழி நெஞ்சே	கம்பீரமான மனமே!
இரு நிலனும்	விசாலமான பூமியும்
மால் விசும்பும்	அளவிறந்த ஆகாசமும்
காற்றும்	வாயுவும்
நெருங்கு தீ	செறிந்த தேஜஸ்ஸும்
நீர் உருவும் ஆனான்	ஜலதத்துவமும் ஆகிய பஞ்சபூதங்களுக்கும் அந்தர்யாமியானவனும்
பொருந்தும் சுடர் ஆழி ஒன்று உடையான்	பொருந்திய ஒரு சுடர்ச்சக்கரத்தையுடையவனுமான எம்பெருமானுடைய
சூழ் கழலே	அடியாரை அகப்படுத்திக் கொள்ளுகிற திருவடிகளையே
வருங்கால் நாளும்	மேலுள்ள காலமெல்லாம்
தொழுது	வணங்கி
தொடர்	(அவனையே) பின்பற்றியிரு.

* * *—எம்பெருமான் திருவடிகளிலேயே என் மனம் வியாமோஹங் கொண்டிருக்கின்றதென்றார் கீழ்ப்பாட்டில்; இதில், 'நெஞ்சே! உனக்கு அந்த வியாமோஹம் நித்தியமாய்ச் செல்ல

1. திருவாய்மொழி 2—1—4.

வேணும்' என்று நெஞ்சை விளித்துக் கூறுகின்றார். முன்னடிகளில் ஜகத்காரணமான பஞ்சபூதங்களைச் சொல்லியிருப்பது லீலா விபூதியைச் சொன்னபடி: லீலாவிபூதி நிர்வாஹகன் என்கை. மூன்றாமடியில் சுடராழியைச் சொல்லியிருப்பது மற்றுமுள்ள நித்யஸூரிகளுக்கெல்லாம் உபலக்ஷணமாய் நித்திய விபூதி நிர்வாஹகன் என்றபடி. ஆக, உபய விபூதிநாதனான எம்பெருமானுடைய திருவடிகளையே நெஞ்சமே! நாடோறும் தொழுது தொடர் என்றாராயிற்று.

சூழ் கழல்—சூழ்ந்துக்கொள்ளும் கழல்; அதாவது—அடியார்களை அகப்படுத்திக்கொள்ளும் திருவடி என்கை. ... (உச)

தொழுதால் பழுதுண்டே? தூநீருலகம் *
முழுதுண்டு மொய்குழலா ளாய்ச்சி *—விழுதுண்ட
வாயானை மால்விடையேழ் செற்றானை * வானவர்க்கும்
சேயானை நெஞ்சே சிறந்து (உரு)

தூ நீர் உலகம்	நிர்மலமான நீரையுடைய கடலோடு கூடின உலகங்களை	மால் விடை ஏழ் செற்றானை	கொழுத்த ரிஷபங்களேழையும் முடித்தவனையும்
முழுது	முழுவதும்	வானவர்க்கும் சேயானை	பிரமன் முதலிய தேவர்களுக்கும் எட்டாதவனாயுமுள்ள எம்பெருமானை
உண்டு	திருவயிற்றிலே வைத்தவனையும்,	நெஞ்சே	நெஞ்சமே!,
மொய் குழலாள் ஆய்ச்சி	அழகிய கூந்தலையுடையளான யசோதையினுடைய	சிறந்து	சிறப்புற
விழுது	வெண்ணெயை	தொழுதால்	வணங்கினால்
உண்ட வாயானை	அமுதுசெய்த வாயையுடையவனையும்	பழுது உண்டே	குற்றமேதேனுமுண்டோ?.

* * *—கீழ்ப்பாட்டில் "சூழ்கழலே நாளுந்தொடர் ஆழி நெஞ்சே! தொழுது" என்றார்; அதற்கு நெஞ்சு இசையாதிருப்பதுபோல் தோன்றிற்று; 'நெஞ்சே! நான் உனக்குச் சொன்னதில் ஏதேனும் தப்பு உண்டோ? எம்பெருமானைத் தொழும்படி

தானே நான் உனக்குச்சொன்னேன்; தொழுதால் தீமையுண்டாகுமோ? சொல்லாய்' என்கிறார்.

கடல்சூழ்ந்த வுலகங்களையெல்லாம் பிரளயகாலத்தில் அமுது செய்ததற்கு மாற்றுமருந்தாகத் திருவாய்ப்பாடியில் வெண்ணெயமுதுசெய்தவனும், அவ்வெண்ணெய்போல் மழமழவென்ற திருமேனியைக்கொண்டு முரட்டு எருதுகளோடே பொருது வெற்றி பெற்றவனும் தேவர்கட்கும் எட்டாதவனுமான எம்பெருமானைத் தொழுதால் குற்றமுண்டோ? (தொழுதால் அது வீணாகுமோ என்றுமாம்.) .... (உ௫)

சிறந்தவென் சிந்தையும் செங்கணரவும் *
நிறைந்தசீர் நீள்கச்சியுள்ளும் *—உறைந்ததுவும்
வேங்கடமும் வெஃகாவும் வேளுக்கைப் பாடியுமே *
தாங்கடவார் தண்டுழா யார். (உ௬)

தண் துழாயார் தாம்	குளிர்ந்த திருத் துழாய் மாலையை அணிந்துள்ள எம்பெருமான்
கடவார்	ஒருநாளும் விட்டு நீங்காதவனாய்க் கொண்டு
உறைந்ததுவும்	நித்யவாஸம் பண்ணுமிடங்கள் (எவையென்றால்)
சிறந்த என் சிந்தையும்	சிறந்ததான என்னுடைய நெஞ்சமும்
செம் கண் அரவும்	சிவந்த கண்களையுடைய திருவனந்தாழ்வானும்
நிறைந்த சீர்	நிறைந்த செல்வத்தையுடைய
நீள்	பெரிய
கச்சியுள்ளும்	கச்சித்திருப்பதியும்
வேங்கடமும்	திருமலையும்
வெஃகாவும்	திருவெஃகாவும்
வேளுக்கைப் பாடியுமே	திருவேளுக்கைத் திருப்பதியுமாம்.

* * *—தண்டுழாய்மாலை யணிந்துள்ள எம்பெருமான் என் சிந்தையோடு திருவனந்தாழ்வானோடு கச்சிப்பதியோடு திருவேங்கடமலையோடு திருவெஃகாவோடு திருவேளுக்கையோடு வாசியற இவ்விடங்களில் திருவுள்ளமுவந்து வாழ்கிறானென்கிறார். எம்பெருமான் விரும்பி மேல்விழுவதற்கு உறுப்பான தம் சிந்தைக்கு, 'சிறந்த' என்ற அடைமொழி கொடுத்தது பொருந்தும்.

இப்பாசுரத்திற்கு இரண்டு மூன்று வகையாக யோஜனைகள் அருளிச்செய்வதுண்டு; பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானத்திற் காண்க.

வெஃகா—யதோக்தகாரி ஸந்நிதி. வேளுக்கை—'காமாஸிகா' என்ற திருநாமத்தால் வழங்கப்படுகிற ஆளழகிய சிங்கப்பெருமாள் ஸந்நிதி. இவ்விரண்டு தலங்களும் கச்சிப்பதியிலுள்ளன. 'வேளுக்கைப்பாடி' என்றதை இரண்டாகப்பிரித்து, வேளுக்கையும் திருவாய்ப்பாடியும் என்று பொருள் கொள்ளவுமாம். (உசு)

ஆரே துயருழந்தார் துன்புற்றா ராண்டையார் *
காரேமலிந்த கருங்கடலை *—நேரே
கடைந்தானைக் காரணனை * நீரணைமேல் பள்ளி
அடைந்தானை நாளு மடைந்து. (உஎ)

கார் மலிந்த கரு கடலை	மேகங்கள் நிறைந்த பெரிய கடலை
நேரே கடைந்தானை	தானே முன்னின்று கடைந்தவனும்
காரணனை	ஸகல ஜகத்காரண பூதனும்
நீர் அணை மேல் பள்ளி அடைந்தானை	திருப்பாற்கடலில் (ஆதிசேஷனென்கிற) சயனத்தின்மேல் பள்ளிகொண்டிருப்பவனுமான எம்பெருமானை
நாளும் அடைந்து	நாடோறும் பணிந்து (இருக்குமவர்கள்)
துயர் உழந்தார்	துக்கங்களுக்கு மூலமான பாபங்களைப் பண்ணினவர்களாயிருந்தாலும்
துன்பு உற்றார் ஆர்	துக்கங்களை அநுபவித்தவர்கள் யார்? (ஒருவருமில்லை;)
	(அப்படிப்பட்டவர்கள்)
ஆண்டையார்	எங்கிருக்கிறார்கள்? (எங்குமில்லை.)

* * *—எம்பெருமானை ஆச்ரயிக்கப்பெற்றவர்களில் ஆரேனும் துன்பப்படுவாருண்டோ? ஒருவருமில்லை என்கிறார்.

துயருழந்தார் துன்புற்றார் ஆரே?=துயர் என்று துக்கத்துக்குப் பேராயினும் இங்கு இலக்கணையால் துக்க ஹேதுவான பாபத்தைச் சொல்லுகிறது. எத்தனை கொடிய பாவங்கள் செய்தவர்களாயிருந்தாலும் அப்பாவங்களின் பலனை துன்பங்களை பகவத் பக்தர்கள் அனுபவிக்க மாட்டார்களென்கை. "மாயனை....வாயினால்பாடி மனத்தினால் சிந்திக்க, போயபிழையும் புகுதருவான் நின்றனவும் தீயினில் தூசாகும்" என்றது காண்க.

ஆண்டையார்—எவ்விடத்திலுள்ளார்?. எவவிடத்திலுமில்லை யென்றபடி.

காரேமலிந்த கருங்கடலை நேரே கடைந்தானை = சிலர் மேலெழுந்தவாரியாக வந்து அடிபணிந்தாலும் அவர்களுக்காகத் தன்னுடம்பு நோவக் காரியஞ் செய்யுமவனன்றோ எம்பெருமான்; அப்படிப்பட்டவனை யடைந்து துக்கப்படுவாருண்டோ?

காரணனை = தாயையும் தமப்பனையும் அடைந்து துக்கப் படுவாருண்டோ?

நீரணைமேல் பள்ளியடைந்தானை = ஆர்த்தியோடே வந்து சேர்ந்து நம்மைக் கூவுவாருண்டோவென்று கடலில் துயிலும் பெருமானையடைந்து துக்கப்படுவாருண்டோ? ... (உஎ)

அடைந்த தரவணைமேல் ஐவர்க்காய் * அன்று
மிடைந்தது பாரத வெம்போர் *—உடைந்ததுவும்
ஆய்ச்சிபால் மத்துக்கே அம்மனே! வாளெயிற்று *
பேய்ச்சிபா லுண்ட பிரான் (உஅ)

வாள் எயிறு	வாள்போன்ற பற்களையுடையவளான
பேய்ச்சி	பூதனையினுடைய
பால்	முலைப்பாலை
உண்ட	உண்டு அவளை முடித்தவனான
பிரான்	ஸ்வாமியானவன்
அடைந்தது	பள்ளிகொண்டது
அரவு அணை மேல்	சேஷசயனத்தின் மேலாம்;
அன்று	முன்னொரு காலத்தில்

ஐவர்க்கு ஆய்	பஞ்சபாண்டவர்களுக்காக
மிடைந்தது	நெருங்க நடத்தினது
வெம் பாரதம் போர்	கடுமையான பாரத யுத்தமாம்;
உடைந்ததுவும்	அஞ்சி நின்றதும்
ஆய்ச்சிபால்	இடைச்சியான யசோதைப் பிராட்டியினிடத் துண்டான
மத்துக்கே	மத்துக்காகவாம்;
அம்மனே	அந்தோ!.

* * *—எம்பெருமானுடைய சில சரித்திரங்களை போக்யமாகப் பேசியநுபவிக்கிறார். கிருஷ்ணாவதாரத்துக்கு முன்னே "ஏஷ நாராயண: ஸ்ரீமாந் க்ஷீரார்ணவநிகேதந:" என்கிறபடியே திருப்பாற்கடலில் திருவனந்தாழ்வான்மீது திருக்கண் வளர்ந்

திருந்தான்; பிறகு ஸ்ரீகிருஷ்ணனைத் திருவவதரித்துப் பஞ்ச பாண்டவர்கட்குப் பக்ஷபாதியாயிருந்து பாரதப்போர் நடத்தி வைத்தான்; இவ்வளவு அபாரசக்தி வாய்ந்தவனா யிருக்கவும், 1. "உழந்தாள் நறுநெய்யொரோ தடாவுண்ண, இழந்தாளெரிவினாலீர்த்து எழில்மத்தின், பழந் தாம்பாலோச்சப் பயத்தால் தவழ்ந்தான்" என்கிறபடியே யசோதைப்பிராட்டி மத்துகொண்டு அடிப்பதாகக் கைதூக்க, அசக்தரைப்போலே நடுநடுங்கிக் கிடந்தான்; அப்படி அசக்தியை அபிநயிக்கும் பருவத்துக்கு முன்னமே முலையுண்கிற வியாஜத்தாலே பூதனை யென்னும் பேய்ச்சியின் உயிரை உறிஞ்சி முடித்தான். இங்ஙனே சக்தியையும் அசக்தியையும் மாறிமாறி வெளியிடுவது எத்திறம்! என்று உள் குழைந்தவாறு

"ஆய்ச்சிபால்" என்றவிடத்து, பால்—ஏழனுருபு. அம்மனே—ஆச்சரியக் குறிப்பிடைச் சொல். ... ... (உஅ)

பேய்ச்சிபா லுண்ட பெருமானைப் பேர்ந்தெடுத்து *
ஆய்ச்சிமுலை கொடுத்தாள் அஞ்சாதே *—வாய்த்த
இருளார் திருமேனி யின்பவளச் செவ்வாய் *
தெருளா மொழியானைச் சேர்ந்து (உகூ)

பேய்ச்சி	பூதனையினுடைய
பால்	முலைப்பாலை
உண்ட	அமுதுசெய்த
பெருமானை	ஸ்வாமியானவனும்
வாய்த்த இருள் ஆர் திரு மேனி	அமைந்த இருள்போன்ற திருமேனியை யுடையவனும்
இன பவளம் செம் வாய்	அழகிய பவழம் போற்சிவந்த அதரத்தை யுடையவனும்
தெருளா மொழியானை	உருத்தெரியாத மழலைச் சொற்களைச் சொல்லும் சிறு குழந்தையுமான கண்ணபிரானை
சேர்ந்து	கிட்டி
ஆய்ச்சி	யசோதையானவள்
பேர்ந்து எடுத்து	வாரியெடுத்தணைத் துக்கொண்டு
அஞ்சாதே	சிறிதும் பயப் படாமல்
முலை கொடுத்தாள்	தன முலையை உண் ணக் கொடுத்தாள்.

1. பெரியாழ்வார் திருமொழி 1—2—4.

* * *—கீழ்ப்பாட்டில் யசோதைப் பிராட்டியின் ப்ரஸ்தாவம் வந்ததனால் அவளுக்குக் கண்ணபிரானிடத்திருந்த பரிவின் மிகுதியைப் பேசுகிறாரிதில். யசோதைப்பிராட்டி சற்றுப்போது கண்ணுறங்கிப் போன ஸமயத்திலன்றோ பூதனை வஞ்சிக்க வந்து முலை கொடுத்து மாண்டு பிணமாய் விழுந்தது. உடனே கண் விழித்து நோக்கின யசோதையானவள் அப்பூதனை பெரியவுடம்போடே பயங்கரமான பிணமாய் நிலத்தில் விழுந்திருப்பதைக்கண்டு 'இஃது என்ன பேயோ பிசாசோ!' என்று அஞ்சிக் காதவழி ஓடவேண்டியிருக்க சிறிதும் அஞ்சாமல் கண்ணபிரானருகிற் சென்று அவனை வாரி எடுத்தணைத்து முலை கொடுத்தாளே! இஃது என்ன பரிவு! என்று ஈடுபடுகிறார்.

அஞ்சாதே=ஒருத்தி முலைகொடுத்துப் பிணமாய் விழுந்து இன்னும் பத்துநிமிஷமாகவில்லையே; இந்த நிலைமையில் நாம் முலை கொடுக்கத் துணியலாமோ என்று அஞ்ச வேண்டுவது ப்ராப்தமாயிருந்தும் பரிவின் கனத்தாலே அஞ்சிற்றிலள் என்க. "நின்னுருகிப் பேய்த்தாய் முலைதந்தாள் பேர்ந்திலளால், பேரமர்க்கண் ஆய்த்தாய் முலைதந்தவாறு" என்ற பொய்கையார் பாசுரமும் இங்கு அநுஸந்திக்கத் தகும்.

யசோதைப் பிராட்டி ஏன் அஞ்சவில்லை யென்றால், பிரானுடைய வடிவழகிலே யீடுபட்டதனால் உடனே அணுகி வாரி எடுத்தணைக்க விருப்ப முண்டாயிற்றே யன்றி அஞ்சி அப்பால் செல்ல மனமுண்டாக வில்லையென்று காட்டுகிறார் மூன்றாமடியால்.

தெருளா மொழியானை=யசோதை முலைகொடுக்க வந்தபோது 'ஆச்சி ஆச்சி' என்றாற்போலே சில மழலைச் சொற்களைச் சொன்னான் போலும் .... (உகூ)

சேர்ந்த திருமால் கடல்குடந்தை வேங்கடம் *
நேர்ந்த வென்சிந்தை நிறைவிசும்பும் *—வாய்ந்த
மறைபாடகமனந்தன் வண்டுழாய்க் கண்ணி *
இறைபாடி யாய விவை (௩௦)

கடல்	திருப்பாற் கடலென்ன	குடந்தை	திருக்குடந்தை யென்ன

வேங்கடம்	திருமலையென்ன	ஆய இவை	ஆகிய இவையெல்லாம்
நேர்ந்த என் சிந்தை	நேர்பட்ட எனது ஹ்ருதயமென்ன	வண் துழாய் கண்ணி	அழகிய திருத்துழாய் மாலையை அணிந்துள்ள
நிறை விசும்பும்	பரம்பின பரமபதமென்ன	திருமால் சேர்ந்த	எம்பெருமான் நித்யவாஸம் பண்ணப்பெற்ற
வாய்ந்த மறை	அமைந்த வேதமென்ன	இறைபாடி	ராஜதானிகளாம்.
பாடகம்	திருப்பாடக மென்ன		
அனந்தன்	ஆதிசேஷனென்ன		

* * *—கீழ்ப்பாசுரங்களில் அநுபவித்த திருக் குணங்களெல்லாம் குன்றத்திலிட்ட விளக்குப்போலே விளங்கப்பெற்ற சில இடங்களை எடுத்துப் பேசியநுபவிக்கிறார்.

திருக்குடந்தை திருவேங்கடம் முதலான திருப்பதிகளோடே கூடத் தம்முடைய சிந்தையும் சேர்த்துக் கணக்கிடுகையாலே, எம்பெருமானுக்கு இவர் தம் சிந்தையோடு மற்ற திருப்பதிகளோடு ஒரு வாசியில்லை என்றாராயிற்று. "வாய்ந்தமறை" என்று வேதங்களையும் உடன் கூறினது—திருப்பதிகளில் ஸேவை ஸாதிப்பது போலத் தமக்கு வேதங்களிலும் ஸாக்ஷாத்தாக ஸேவைஸாதிக்கும் படியைத் தெரிவித்தவாறும்.

இறைபாடி—ராஜதானி. ... ... (௩௦)

இவையவன் கோயில் இரணியனதாகம் *
அவைசெய் தரியுருவ மானான் *—செவிதேரியா
நாகத்தான் நால்வேதத் துள்ளான் * நறவேற்றான்
பாகத்தான் பாற்கட லுளான். (௩௧)

இரணியனது	ஹிரண்யாஸுரனுடைய	செவி தெரியா நாகத்தான்	கண்ணையே செவியாகவுடையனாகையாலே தனிப்பட செவி தெரியாமலிருக்கிற ஆதிசேஷனைப் படுக்கையாகவுடையவனும்
ஆகம்	மார்பை		
அவைசெய்து	இருபிளவாக்க		
அரி உருவம் ஆனான்	நரசிங்கமாகத் தோன்றினவனும்		

நால் வேதத்து உள்ளான் — நான்கு வேதங்களுக்கும் பொருளா யிருப்பவனும்
நறவு ஏற்றான் பாகத்தான் — தேன்போன்ற கங்கையை ஏற்றுக் கொண்டவனான ருத்ரனைத் திருமேனியின் ஒரு பாகத்திலே உடையவனும்
பாற்கட லுளான் — திருப்பாற்கடலில் பள்ளி கொள்பவனுமான
அவன் — அப் பெருமானுடைய
கோயில் இவை — கோயில் கீழ்ப்பாட்டில் சொன்ன திருப்பதிகளாம்.

* * *—கீழ்ப்பாட்டில் அநுஸந்தித்த திவ்யஸ்தலங்கள் ஆழ்வார் திருவுள்ளத்தைவிட்டுப் பேராமல் அநுவர்த்திக்கவே, பின்னையும் 'இவையவன் கோயில்' என்கிறார். "கடல்குடந்தை வேங்கடம் என் சிந்தை நிறைவிசும்பு வாய்ந்தமறை பாடகம் அனந்தன்" என்று கீழ்ப்பாட்டிற் சொன்னவற்றையே இங்கு 'இவை' என்று சுட்டிக்காட்டினர்.

நரசிங்கவுருக்கொண்டு ஹிரண்யாஸுரனுடைய மார்பைப் பிளந்தவனும் சேஷசயனத்தில் திருக்கண் வளர்ந்தருள்பவனும் நான்கு வேதங்களாலும் பிரதிபாதிக்கப்படுபவனும், அஹங்காரியான ருத்ரனுக்கும் திருமேனியிலே இடங்கொடுத்து ஆதரிப்பவனும் திருப்பாற்கடலி லுள்ளவனுமான எம்பெருமானுக்குக் கீழ்ப்பாட்டிற் சொன்ன தலங்கள் உகந்து வாழுமிடமாயிருக்கின்றன—என்றாராயிற்று.

அவை செய்தல்-இருபிளவாகச்செய்தல். செய்து-எச்சத்திரிபு; செய்ய என்க. அன்றியே, உருபு பிரித்துக்கூட்டி, 'அரியுருவமாய் இரணியனதாகம் அவைசெய்தான்' என்றும் யோஜிக்கலாம். செவிதெரியா நாகத்தான்=பாம்புக்கு வடமொழியில் 'சக்ஷுச்ச்ரவஸ்' என்றும், தென்மொழியில் 'கட்செவி' என்றும் பெயர் வழங்கும். கண்ணைக்கொண்டே காண்பதும் கேட்பதும் செய்தல் பாம்புஜாதியின் இயல்வாம்; ஆகவே செவிகள் தனிப்படத்தெரியா. இங்கு இந்த விசேஷணம் திருவனந்தாழ்வானுக்கு ஏதுக்கு இட்டதென்னில்; ஒரு இந்திரியத்தாலே பல இந்திரியங்களின் காரியங்

களை நிர்வஹிப்பதுபோல, “சென்றால் குடையாம் இருந்தால் சிங்காதனமாம், நின்றால் மரவடியாம் நீள்கடலுள்—என்றும் புணையாமணிவிளக்காம் பூம்பட்டாம் புல்குமணையாம் திருமாற் கரவு.” என்கிறபடியே ஒரு திருமேனியைக்கொண்டே பல கைங் கரியங்களும் செய்பவன் திருவனந்தாழ்வான் என்று காட்டுதற் கென்க.

நறவேற்றான்='நறவு' என்று தேனுக்குப் பெயர்; உவமை யாகுபெயரால் கங்கையைச் சொல்லுகிறது. வேதத்தில் “விஷ்ணோ: பதே பரமே மத்வ உத்ஸ:” என்று எம்பெருமான் திருவடியில் தேன்வெள்ள மிருப்பதாகச் சொல்லியிருப்பது கங்கையைக் குறித்தே என்று நிர்வஹிப்பது முண்டாகையாலே இங்கு 'நறவு' என்று சொல்லியிருப்பது கங்கையை என்னலாம்: ஏற்றான் என்றது முடிமீது ஏற்றுக்கொண்டவன் என்றபடி. அன்றியே, 'ஏறு' என்று எருதுக்குப் பேராகையாலே ஏற்றான் என்பதற்கு எருதை வாஹனமாகவுடையவன் என்றும் பொருளாகலாம். கங்கையையும் எருதையுமுடையவன் என்க. கங்கையைத் தாங்குமவனாய் எருதால் தாங்கப்படுமவனுமிருப்பவன். இனி, நறவு என்று கள்ளுக் கும் பெயராதலால், கள்ளைக்குடிப்பவனும் எருதின்மேல் ஏறு மவனுமான ருத்ரனையும் திருமேனியில் இடங்கொடுத்து ஆதரிப்ப வன் என்றும் பொருள் கூறுவர். ஹாரம் என்ற வடசொல் பாக மெனத் திரிந்தது. .... (௩௧)

பாற்கடலும் வேங்கடமும் பாம்பும் பனிவிசும்பும் *
நூற்கடலும் நுண்ணூல தாமரைமேல் *—பாற்பட்
டிருந்தார் மனமும் இடமாகக் கொண்டான் *
குருந்தொசித்த கோபாலகன். (௩௨)

குருந்து	குருந்த மரத்தை	பாம்பும்	திருவனந் தாழ்வானையும்
ஒசித்த	முறித்தொழித்த	பனி விசும்பும்	(ஸமஸாரதாபங்கள் தட்டாமல்) குளிர்ந்திருக்கிற பரமபதத்தையும்
கோபாலகன்	கண்ணபிரான்		
பால் கடலும்	திருப்பாற் கடலையும்	நூல் கடலும்	கடல்போன்ற சாஸ்த்ரங்களையும்
வேங்கடமும்	திருமலையையும்		

நுண் நூல தாமரை மேல்பால் பட்டிருந்தார் மனமும்	ஸூக்ஷ்மமான சாஸ்த்ரங்களால் பிரதிபாதிக்கப் பட்ட ஹ்ருதய கமலத்திலே கரணங்க ளெல்லாம் ஊன்றி யிருக்கும்படி யோகத்தில் நிலைநின்ற யோகி களினுடைய நெஞ்சையும்	இடம் ஆக கொண்டான்	வாஸஸ்தானமாகக் கொண்டிருக் கிறான்.

* * *—இப்பாட்டிலும் எம்பெருமா னிருப்பிடங்களைச் சொல்லுகிறார். திருப்பாற்கடல் திருவேங்கடம் திருவனந்தாழ்வான் ஸ்ரீவைகுண்டம் வேதவேதாங்கங்கள் யோகிகளின் உள்ளக் கமலம் ஆகிய இவற்றை இருப்பிடமாகக் கொண்டவனென்றாராயிற்று.

பனிவிசும்பு=ஸம்ஸாரத்தில் பட்ட தாபங்களையெல்லாம் ஆற்றிக் குளிரப்பண்ணும் பரமபதம் என்கை. நூற்கடல்=கடல்போன்றிருக்கிற ச்ருதிஸ்ம்ருதி இதிஹாஸம் புராணம் முதலிய சாஸ்த்ரங்கள்.

[நுண்ணூல தாமரையித்யாதி.] "ஸூக்ஷ்மாஶ ஸூதீக்ஷ்ணாஶம் ஹ்ருதயபுண்டரீகம்" என்று வேதத்திற் சொல்லப்பட்ட யாதொரு தாமரையுண்டு—ஹ்ருதயகமலம், அதிலே ஸமஸ்த கரணங்களும் ப்ரவணமாம்படி யோகத்திலே ஊன்றியிருக்கிற பரம யோகிகளுடைய மநஸ்ஸைச் சொன்னபடி. "யோகிநாம் யதுபாஸ்தி ஹ்ருதாம் வர்ணிதம் புண்டரீகம்" என்ற வரதராஜஸ்தவ ஸ்ரீஸூக்தி உணர்க. இனி, நுண்ணூலதாமரை யித்யாதிக்கு வேறுவகையாகவும் பொருள்கூறலாம்: நுட்பமான நூலையுடைத்தான யாதொரு தாமரையுண்டு, அதன்மேல் பொருந்தியிருக்கும் பெரியபிராட்டியாருடைய, மனம்—திருமார்பு, அதாவது திருமுலைத்தடம் என்று. பெரியபிராட்டியாருடைய நெஞ்சையே கொள்ளவுமாம். தாமரை நாளத்தில் நுட்பமான நூல் இருப்பது ப்ரஸித்தம். மேற்பால்—மேலிடத்தில், மேலே என்றபடி.

குருந்தொசித்த வரலாறு:—கண்ணனைக் கொல்லுமாறு கம்ஸனால் ஏவப்பட்ட அஸுரர்களில் ஒருவன் ஒருநாள் கண்ணபிரான் மலர் கொய்தற்பொருட்டு விரும்பியேறும் குருந்தமரமொன்றில் பிரவேசித்து அப்பெருமான் வந்து தன்மீது ஏறும்போது தான் முறிந்துவீழ்ந்து அவனை வீழ்த்திக் கொல்லக்கருதியபோது மாயவனான கண்ணபிரான் அம்மரத்தைக் கைகளாற்பிடித்துத் தன் வலிமைகொண்டு முறித்து அழித்தனனென்பதாம். (௩௨)

பாலகனாய் ஆலிலைமேல் பைய * உலகெல்லாம்
மேலொருநாளுண்டவனே மெய்ம்மையே *—மாலவனே
மந்தரத்தால் மாநீர்க்கடல் கடைந்து * வானமுதம்
அந்தரத்தார்க் கீந்தாய்நீ யன்று. (௩௩)

மேல் ஒரு நாள்	முன்னொரு காலத்தில்
பாலகன் ஆய்	சிறு குழந்தை வடிவமுடையனாகி
ஆல் இலை மேல்	ஆலந்தளிரிலே
உலகு எல்லாம்	உலகங்களையெல்லாம்
பைய	மெல்ல
மெய்ம்மையே	உண்மையாகவே
உண்டவனே	அமுதுசெய்து கிடந்தவனே !,
மாலவனே	ஸர்வாதிகனே !
நீ	இப்படிப்பட்ட நீ,
அன்று	அன்றொருநாள்
மந்தரத்தால்	மந்தரமலையைக் கொண்டு
மா நீர் கடல் கடைந்து	மிக்க நீரையுடைய கடலைக் கடைந்து
வான் அமுதம்	திவ்யமான அமிருதத்தை
அந்தரத்தார்க்கு	தேவர்களுக்கு
ஈந்தாய்	அளித்தாய்.

* * *—அநிஷ்டங்களைத் தவிர்ப்பதும் இஷ்டங்களை அளிப்பதுமாகிய ரக்ஷணத்தைச் செய்யவல்லவன் எம்பெருமானே என்கிறது. இதில் முன்னடிகளால் அநிஷ்டத்தைத் தவிர்த்தமையும் பின்னடிகளால் இஷ்டங்களை அளித்தமையும் சொல்லிற்று. பிரளயம் கொள்ளைகொள்ளாதபடி உலகங்களைத் திருவயிற்றில் வைத்தது—அநிஷ்ட நிவாரணம். மந்தரத்தால் கடல்கடைந்து வானவர்க்கு அமுதளித்தது இஷ்டப்ராபணம், ... (௩௩)

அன்றிவ்வுலகம் அளந்த வசவே கோல் *
நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய் *—அன்று
கிடந்தானைக் கேடில் சீரானை * முன்கஞ்சைக்
கடந்தானை நெஞ்சமே காண் (௩௪)

நெஞ்சமே	மனமே !,
அன்று	முன்பொரு காலத்தில்
நின்று	நின்றுகொண்டே
இவ்வுலகம்	இவ்வுலகங்களை யெல்லாம்
அளந்த	அளந்ததனு லுண்டான
அசவே கொல்	சிரமத்தினுலேயோ
வேளுக்கை	திருவேளுக்கையிலே
இருந்து	வீற்றிருந்து
நீள் நகர் வாய்	(திருவெஃகா வென்கிற) சிறந்த திருப்பதியில்
அன்று	ஒருகாலத்தில்
கிடந்தானை	பள்ளி கொண்டவனும்
கேடு இல் சீரானை	ஒருகாலு மழிவில்லாத திருக்குணங்களை யுடையவனும்
முன்	முன்னொருகால்
கஞ்சை	கம்ஸனை
கடந்தானை	கொன்றொழித்த வனுமான பெருமானை
காண்	ஸேவி.

* * *—திருக்கச்சிமாநகரில் திருவேளுக்கைப்பதியில் இருப்பதும் திருவெஃகாவில் கிடப்பதுமாக எம்பெருமான் ஸேவை ஸாதிப்பது முன்பு உலகளந்த ஆயாஸம் தீருவதற்கோ என்னவோ என்கிறார். "நின்றிருந்து வேளுக்கை நீணகர்வாய்" என்றதில் நின்று என்பதை முதலடியில்கூட்டி உரைக்கப்பட்டது. நீணகர் என்றது திருவெஃகாவை என்று பூருவர்களின் வியாக்கியானம்.

அசவு—சிரமம்; 'அயர்வு' என்பதன் விகாரம்.

"கொடியார்மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்றே நீதுயில்மேவி மகிழ்ந்ததுதான், அடியாரல்லல் தவிர்த்த வசவோ? அன்றேலிப்படிதான் நீண்டு தாவியவசவோ பணியாயே" என்ற திருவாய்மொழிப் பாசுரத்தோடு ஒருபுடை ஒக்கும் இப்பாசுரம். ... ... (௩௪)

காண்காணென விரும்பும் கண்கள் * கதிரிலகு
பூண்டா ரகலத்தான் பொன்மேனி *—பாண்கட்
டொழில்பாடி வண்டறையுந் தொங்கலான் * செம்பொற்
கழல்பாடி யாம்தொழுதும் கை (டுரு)

கண்கள்	என்னுடைய கண்களானவை	வண்டு	வண்டுகளானவை
கதிர் இலகு	ஒளிவிளங்காநின்றுள்ள	பாடி	இசைபாடிக்கொண்டு
பூண்	திருவாபரணங்களையும்	அறையும்	ஒலிசெய்யப்பெற்ற
தார்	மாலையையும்	தொங்கலான்	மாலையையுடையனான அப்பெருமானுடைய
அகலத்தான்	திருமார்விலே உடையனான எம்பெருமானுடைய	தொழில்	சேஷ்டிதங்களை
பொன் மேனி	அழகிய திருமேனியை	பாண் கண் பாடி	ராகத்திலே அமைத்துப்பாடி
காண் காண் என விரும்பும்	காணவேணுங் காணவேணுமென்று ஆசைப்படாநின்றன;	யாம்	நாம்
		கை	கைகளினாலே
		செம் பொன் கழல் தொழுதும்	சிவந்த பொன்போல் சிறந்த (அவனுடைய) திருவடிகளை வணங்குவோம்.

* * *—உலகத்தாருடைய இந்திரியங்களிற்காட்டில் என்னுடைய இந்திரியங்கள் மிகச்சிறந்தவை யென்கிறார் உலகத்தாருடைய இந்திரியங்கள் விஷயாந்தரங்களை அநுபவிப்பதிற் செல்லுகின்றன; அங்ஙனன்றியே என்னுடைய இந்திரியங்கள் பகவத்விஷயாநுபவத்திலேயே ஊன்றியிருக்கின்றன வென்கிறார். கண்களோ திருவாபரணங்களாலும் திருமாலைகளாலும் அழகுபெற்றுள்ள எம்பெருமானது பொன்மேனியைக் காண்பதற்கே பாரித்திருக்கின்றன. வாயோ அவனுடைய திவ்யசரித்திரங்களைப் பாடுவதிலேயே ஊற்றமுற்றிருக்கின்றது; கைகளோ அவனுடைய திருவடிகளைத் தொழுவே காதல் கொண்டிருக்கின்றன என்றாராயிற்று. (டுரு)

கைய கனலாழி கார்க்கடல்வாய் வெண்சங்கம் *
வெய்யகதை சார்ங்கம் வெஞ்சுடர்வாள் *—செய்ய
படைபரவை பாழி பனிநீ ருலகம் *
அடியளந்த மாய ரவர்க்கு. (௫௬)

பனி நீர் உலகம்	குளிர்ந்த நீரையுடைய கடல்சூழ்ந்த உலகங்களை
அடி	தனது திருவடியினாலே
அளந்த	அளந்துகொண்ட
மாயர் அவர்க்கு	ஆச்சரியச் செய்கையை யுடையரான அப்பெருமானுக்கு
னல் ஆழி	தீக்ஷணமான சக்கரமும்
கார் கடல் வாய் வெண் சங்கம்	கருங்கடலில் தோன்றின வெளுத்த சங்கும்
வெய்ய	வெவ்விதான
கதை	கதையும்
சார்ங்கம்	சார்ங்கமும்
வெம் சுடர் வாள்	வெவ்விய சுடரை யுடைய நந்தக வாளும் ஆகிய
செய்ய படை	அழகிய இவ்வாயுதங்கள்
கைய	திருக்கையிலுள்ளன;
பரவை	கடலானது
பாழி	படுக்கையா யிருக்கின்றது.

* * *—எம்பெருமானை அநுபவிக்கிறார். திருவாழி திருச்சங்கு முதலிய பஞ்சாயுதாழ்வார்கள் திருக்கைகளிலே விளங்குகின்றனர்; திருப்பாற்கடல் படுக்கையாக அமைந்திருக்கின்றது. இவை ஆர்க்கு? என்றால், பனிநீருலக மடியளந்த மாயரவர்க்கு.

அவற்கடிமை பட்டேன் அகத்தான் புறத்தான் *
உவர்க்குங் கருங்கடல் நீருள்ளான் *—துவர்க்கும்
பவளவாய்ப் பூமகளும் பன்மணிப் பூணாரம் *
திகழுந் திருமார்வன் தான். (௫௭)

உவர்க்கும் கரு கடல் நீர் உள்ளான்	உப்புக்கரிக்கின்ற கரிய கடல்நீரிலு முள்ளவனும்
துவர்க்கும் பவளம் வாய் பூ மகளும்	சிவந்த பவளம் போன்ற வாயை யுடையளான பிராட்டியும்

பல் மணி பூண்	பலவகையான ரத்னங்க ளழுத்தின திரு வாபரணங்களும்	அகத்தான் புறத்தான்	உள்ளிலும் வெளியிலும் வாசியறக் கலந் திருக்கின்றான்;
ஆரம்	ஹாரங்களும்		
திகழும்	விளங்கப்பெற்ற	அவற்கு	அப்படிப்பட்ட பெருமானுக்கு
திரு மார்வன் தான்	திருமார்பை யுடையனான எம்பிரான்	அடிமை பட்டேன்	ஆட்பட்டவ னானேன்.

* * *—இப்பாட்டில் 'அகத்தான் புறத்தான்' என்ற விசேஷணங்கள் நரம்பாயிருக்கும். நான் அவனை அநுபவிக்கப் பாரித்துக்கொண்டிருக்கையில் அவன் என்னை யநுபவிக்க விரும்பி என்னை உள்ளிலும் வெளியிலும் மொய்த்துக்கொண்டிருக்கிறானென்கிறார்.

"இப்படி தாம் அவனை யநுபவிக்கப்புக்கவாறே அவனும் தன்பெருமையைப் பாராமல் தம்பக்கலிலே அத்யபிநிவிஷ்டனாய்க் கொண்டு பலவடிவுகொண்டு தம்மையநுபவியா நின்றானென்கிறார்" என்றும் "நான் அடிமையிலே அந்வயிக்க, ஸௌபரியைப்போலே அவன் அனேகம் வடிவுகொண்டு புஜிக்க ஆசைப்படா நின்றானென்கிறது" என்றுமிறே பூருவர்களின் வியாக்கியான வாக்கியமும்.

திருவாய்மொழியில் (4—7—6.) "நாடோறு மென்னுடைய, ஆக்கையுள்ளுமாவியுள்ளு மல்லபுறத்தினுள்ளும் நீக்கமின்றி யெங்கும் நின்றாய்" என்ற பாசுரமும் இங்கு ஸ்மரிக்கத்தகும்.

எம்பெருமான் திருப்பாற்கடலில் துயில் கொள்வதுபோல உப்புக்கடலிலும் வாழ்வதுண்டென்று ப்ரஸித்தியுண்டாதலால் "உவர்க்குங் கருங்கடல் நீருள்ளான்" எனப்பட்டது. இவ்விடத்துப் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்தில், ["உவர்க்குங் கருங்கடல் நீருள்ளான்] திருப்பாற்கடலை வாஸஸ்தாநமாகவுடையனாய்" என்று வாக்கிய முள்ளதாக அச்சுப்பிரதிகளிற் காண்கிறது; "திருப்பாற்கடலோபாதி உப்புக்கடலையும் வாஸஸ்தாநமாகவுடையனாய்" என்றிருக்கவேண்டிய வாக்கியம் அச்சுப்பிழையினால் மாறிவிட்டதுபோலும். உள்ளபடியே நிர்வஹிப்பாருளரேல் நிர்வஹித்தருள்க. ... ... (கஎ)

தானே தனக்குவமன் தன்னுருவே யெவ்வுருவும் *
தானே தவவுருவும் தாரகையும் *—தானே
எரிசுடரும் மால்வரையும் எண்டிசையும் * அண்டத்
திருசுடரு மாய விறை. (௫௭)

எவ் உருவும்	எல்லாப் பொருள்களும்
தன் உருவே	அவன்றனக்கு சரீரமாகவே யிருக்கும்;
தவம் உருவும்	தபஸ்ஸு பண்ணிப் புண்யசரீர முடையரா யிருக்கிற பிரமன் முதலான வர்களும்
தாரகையும்	நக்ஷத்ரங்களும்
தானே	அவன்றன் வடிவாகவே யிருக்கும்;
எரி சுடரும்	ஜ்வலிக்கின்ற அக்நியும்
மால் வரையும்	பெரிய குலபர்வதங்களும்
எண் திசையும்	எட்டு திக்குக்களும்
அண்டத்து	மேலுலகிலுள்ள
இரு சுடரும்	சந்த்ரஸூர்யர்களும்
தானே ஆய இறை	தனக்கு ப்ரகாரமா யிருக்கப்பெற்ற எம்பெருமான்
தனக்கு தானே உவமன்	(ஒப்பற்றவனாகையாலே) தனக்குத் தானே உபமானமா யிருப்பவன்.

* * *—எம்பெருமான் பலவடிவுகொண்டு தம்மை அநுபவிக்க விரும்புவதாகக் கீழ்ப்பாட்டில் அருளிச்செய்தார். அவன் ஒரு ஸாமாந்ய புருஷனல்லன், ஒப்புயர்வற்ற புருஷோத்தமன் காண்மின் என்கிறாரிப்பாட்டில். உலகத்திலுள்ள ஸகலபதார்த்தங்களும் அவனுக்கு சரீரபூதங்களாய் எல்லாவற்றுக்கும் அவன் சரீரியாய் இருப்பவனாகையாலே அவனோடு ஒப்புச் சொல்லலாவதொரு பொருள் இல்லை; அவனுக்கு அவன்றானே உவமை என்கிறார். இது, அநந்வயாலங்காரம். "சந்த்ரச் சந்த்ர இவ ஸ்ரீமாந்" [சந்திரன் சந்திரனைப்போல் அழகியவன்] "ராமராவணயோர்யுத்தம் ராமராவணயோரிவ" [இராமபிரானுக்கும் இராவணனுக்கும் நடந்த யுத்தத்திற்கு அந்த யுத்தமே உவமை] என்பனகாண்க. (௫௮)

இறையாய் நிலனாகி யெண்டிசையும் தானாய் *
மறையாய் மறைப்பொருளாய் வானாய் *—பிறைவாய்ந்த
வெள்ளத்தருவி விளங்கொலிநீர் வேங்கடத்தான் *
உள்ளத்தி னுள்ளே யுளன். (௫௯)

இறை ஆய்	ஸர்வஸ்வாமியாய்
நிலன் ஆகி	பூமிக்கு அந்தர்யாமியாய்
எண் திசையும் தான ஆய்	எட்டு திக்குக்களிலுமுண்டான ஸகல வஸ்துக்களையும் தனக்கு ப்ரகாரமாகவுடையனாய்
மறை ஆய்	வேதங்களுக்கு ப்ரவர்த்தகனாய்
மறை பொருள் ஆய்	அந்த வேதங்களின் பொருளாயிருப்பவனாய்
வான் ஆய்	நித்ய விபூதி நிர்வாஹகனாய்
பிறை வாய்ந்த	சந்திரபதத்தைக் கிட்டியிருப்பதும்
வெள்ளம் அருவி	மிக்க ஜலத்தையுடைய அருவிகளினுடைய
விளங்கு ஒலி	விளங்குகின்ற கோஷத்தையுடைத்தான
நீர்	நீரையுடையதுமான
வேங்கடத்தான்	திருவேங்கட மலையில் வாழ்பவனான எம்பெருமான்
உள்ளத்தின் உள்ளே உளன்	என்னெஞ்சினுள்ளே இருக்கின்றான்.

* * *—இப்படி ஜகத்திலுள்ள பொருள்களெல்லாம் தானேயாயிருக்கும் பெருமான் திருமலையிலேவந்து ஸந்நிஹிதனாய்ப் பின்பு என்னுடைய ஹ்ருதயத்தைவிட்டுப் போகிறானில்லையென்கிறார். இதில் முன்னடிகளிரண்டும் கீழ்ப்பாட்டிற் பொருளின் அநுவாதம்.

பிறைவாய்ந்த=இது வேங்கடத்திற்கு விசேஷணம்: அருவி வெள்ளத்திற்கு விசேஷணமாகவுமாம். சந்திரமண்டலத்தளவும் ஓங்கியிருக்கும்படியைச் சொன்னவாறு. எங்கணும் பேரொலி செய்துகொண்டு பெருகுகின்ற அருவிகள் நிறைந்ததும் ஓங்கியுயர்ந்ததுமான திருமலையிலுள்ளவனைக்கொண்டு அங்கிருந்து என்னுள்ளத்தில் வந்து சேர்ந்தவனாயினனென்கிறார். “மலைமேல் தான் நின்று என்மனத்துளிருந்தானை” என்ற திருவாய்மொழியுங் காண்க. ... ... (௫௧)

உளன்கண்டாய் நன்னெஞ்சே உத்தமனென்றும்
உளன்கண்டாய் * உள்ளுவாருள்ளத் துளன்கண்டாய் *
விண்ணெடுங்கக் கோடுயரும் வீங்கருவி வேங்கடத்தான் *
மண்ணொடுங்கத் தானளந்த மன். (௫௨)

நல் நெஞ்சே	எனக்குப் பாங்கான மனமே !,
விண் ஒடுங்க	மேலுலகங்க ளெல் லாம் ஒரு மூலை யில் ஒதுங்கும் படி
கோடு	சிகரங்கள்
உயரும்	உயர்ந்தோங்கி யிருக் கப்பெற்றதும்
வீங்கு அருவி	நிறைந்த அருவிகளை யுடையதுமான
வேங்கடத் தான்	திருமலையில் எழுந் தருளி யிருப் பவனும்
மண்	பூமிப் பரப் பெல்லாம்
ஒடுங்க	(திருவடியின் ஒரு பாகத்திலே) ஒடுங் கிப் போம்படி
தான் அளந்த	தான் அளந்து கொண்டவனு மான
மன்	ஸ்வாமியானவன்
உளன் கண்டாய்	(நம்மை ரக்ஷிப்பத ற்கலே) ஸத்தை பெற்றிருப்பவன் காண் ;
உத்தமன்	புருஷோத்தமனான அப்பெருமான்
என்றும் உளன் கண்டாய்	எக்காலத்திலும் (நம்மை ரக்ஷிப் பதிலே தீக்ஷை கொண்டு) இருக் கிறான்காண் ;
உள்ளுவார் உள்ளத்து	ஆஸ்திகர்களுடைய மனத்திலே
உளன் கண்டாய்	நித்யவாஸம் பண்ணு மவன் காண்.

* * *—இப்படி ஸர்வாதிகனான எம்பெருமான் நம்மிடத்து வந்து புகுந்த பின்பு, நெஞ்சே! நமக்கு ஒரு குறையுமில்லைகாண் என்கிறார். நம்முடைய ஸத்தையை நோக்குவதற்காகவே தான் ஸத்தை பெற்றிருக்கின்றான்; ‘எம்பெருமானுளன்’ என்று நாம் இசைந்தாலும் இசையாவிட்டாலும் எப்போதும் நம்முடைய ரக்ஷணத்திலே முயன்று உளனாயிருக்கின்றான்; தன்னைச் சிந்திப் பவர்கள் நெஞ்சிலே படுகாடு கிடக்கின்றான்; இதற்குறுப்பாகத் திருவேங்கடமலையிலே வந்து தங்குமவன்; இக்குணங்களையெல் லாம் த்ரிவிக்ரமாவதாரத்தில் விளங்கக் காட்டினவன். .... (௬0)

மன்னு மணிமுடிநீண்டு அண்டம்போ யெண்டிசையும் *
துன்னுபொழிலனைத்தும் சூழ்கழலே *—மின்னை
உடையாகக் கொண்டு அன்றுலகளந்தான் * குன்றம்
குடையாக ஆகாத்த கோ. (௬க)

குன்றம் குடை ஆக	கோவர்த்தன மலை யைக் குடை யாகக் கொண்டு
ஆ காத்த கோ	பசுக்களைக் காப்பாற் றின ஸ்வாமி யானவன்,

அன்று	முன்பொரு காலத்தில்,
மன்னு மணி முடி	பொருந்தின ரத்னங்களையுடைய கிரீடம்!!
நீண்டு	ஓங்கி வளர்ந்து
அண்டம் போய்	அண்ட பித்தியைச் சென்றுகிட்ட,
எண் திசையும்	எட்டு திக்குக்களையும்
துன்னு பொழில் அனைத்தும்	(பிராணிகள்) நெருங்கிக் கிடக்கிற பூமண்டலம் முழுவதையும்
சூழ்	வியாபித்த
கழலே	திருவடியினாலேயே,
மின்னை உடை ஆக கொண்டு உலகு அளந்தான்	மின்னலைப் பீதாம்பரமாக அணிந்துகொண்டு உலகங்களையளந்தான்.

* * *—உலகளந்த வரலாற்றைப் பேசி யநுபவிக்கிறார். முதலடியில் 'மன்னுமணிமுடி' என்ற சொல் இரட்டுற மொழிதலால் 'மணிமயமான கிரீடத்தையணிந்த திருமுடி' யென்றும் பொருள் படலாம்.

இடையர்கள் இந்திரனுக்கிட்ட அந்த பூஜையை விலக்கித் தானே அமுது செய்ததனால் சீற்றங்கொண்டு ஆயர்க்கும் ஆநிரைக்கும் மிக்க துன்பமுண்டாம்படியாக ஏழுநாள் விடாமழை பெய்வித்தபோது கோவர்த்தன மலையையே குடையாக வெடுத்துப் பிடித்துநின்று காத்தருளின பெருமான் இப்படி ஆநிரையைத் துன்பப்படுத்தின அவ்விந்திரனுக்குப் பக்ஷபாதியாயிருந்து செய்த செயல் உலகளந்தது. அப்போது திருமுடியானது மேலுலகமெங்கும் நீண்டு செல்ல, திருவடியானது நிலவுலக மெங்கும் நிறைந்துசெல்ல, அந்தரிக்ஷலோகத்திலுள்ள மின்னல் திருமேனிக்குப் பீதாம்பரம்போல் விளங்க, இந்த நிலைமையாக உலகங்களை யளந்தா னெம்பெருமான் என்றாராயிற்று. ... ... (சக)

கோவலனாய் ஆநிரைகள் மேய்த்துக் குழலூதி *
மாவலனாய்க் கீண்ட மணிவண்ணன் *—மேவி
அரி யுருவமாகி இரணியன தாகம் *
தெரியுகிரால் கீண்டான் சினம். (சஉ)

கோவலன் ஆய்	இடையனாய்ப் பிறந்து
ஆ நிரைகள்	பசுக்கூட்டங்களை
மேய்த்து	(புல்லுந் தண்ணீருமுள்ள விடங்களிலே கொண்டு சென்று) மேய்த்தவனாயும்

குழல் ஊதி	புல்லாங்குழலை ஊதினவனும்	மேவி அரி உருவம் ஆகி	பொருத்தமான நரசிங்க வடிவங் கொண்டு
மா	குதிரை வடிவு கொண்டு நலிய வந்த கேசி யென்னுமசுரனை	இரணியனது ஆகம்	இரணியாஸுரனுடைய முரட்டுடலை
		உகிரால்	நகங்களினால்
வலன் ஆய் கீண்ட	ஸமர்த்தனாய்க் கொண்டு கிழித்தவனும்	கீண்டான்	கிழித்தவனாயுமுள்ள பெருமானுடைய
மணி வண்ணன்	நீலமணி போன்ற வடிவையுடையவனும்	சினம்	சீற்றத்தை
		தெரி	(நெஞ்சமே!) தெரிந்துகொள்.

* * *—எம்பெருமானுக்கு அடியார்களிடத்திலுள்ள ப்ரீதி விச்வாஸங்களை எப்படி நாம் ஆபத்தனமாக நம்பியிருக்கவேணுமோ அப்படியே அப்பெருமான் ஆச்ரிதசத்ருக்களிடத்தில் கொண்டுள்ள சீற்றத்தையும் நாம் ஆபத்தனமாக நினைத்திருக்கவேண்டும். 'நமக்கொருவன் பகைவனாக இருந்தால் அவனிடத்தில் எம்பெருமான் சீற்றங்கொள்வன்' என்று நாம் அறிந்தால் பிறகு பகைவர்க்கு நாம் அஞ்சவேண்டாவன்றோ? ஆனதுபற்றியே திருமங்கையாழ்வார் 1. "கொண்டசீற்ற மொன்றுண்டுளதறிந்து, உன்னடியனேனும் வந்தடியிணையடைந்தேன் அணிபொழில் திருவரங்கத்தம்மானே!" என்றருளிச்செய்தார். இவ்வாழ்வாரும் எம்பெருமானுடைய சீற்றத்தைச் சிந்திக்குமாறு தம் திருவுள்ளத்திற்கு உரைக்கின்றார். இப்பாட்டில், 'நெஞ்சே!' என்னும் விளி வருவித்துக் கொள்ளவேணும். எம்பெருமான் ப்ரஹ்லாதாழ்வான் பக்கலில் வைத்திருந்த வாத்ஸல்யத்திற்காட்டிலும் அவனுக்கு விரோதியாயிருந்த இரணியனிடத்தில் கொண்டிருந்த சீற்றமே நம்மால் தியானிக்கத் தகுந்தது என்கிறார். பக்தனான ப்ரஹ்லாதனுடைய விரோதியைச் சீறி முடித்ததுபோலவே நம் விரோதியையும் சீறி முடித்தருள்வான் என்று தேறியிருத்தற்கு இது உறுப்பாகுமென்க.

"அருளன்று நமக்கு உத்தேச்யம்; ஆச்ரிதவிரோதிகள் பக்கல் அவனுக்குண்டான சினம் உத்தேச்யம்; அச்சினத்தைத் தேரி- அநுஸந்தி" என்ற பெரியவாச்சான்பிள்ளை ஸ்ரீஸூக்திகாண்க.

---

1. பெரிய திருமொழி 5—8—3,

கோவலனாய்க் குழலூதிக்கொண்டு ஆநிரைகள் மேய்த்தவனும், சதுரனாய்க் கேசியின்வாயைக் கீண்டொழித்தவனுமான எம்பெருமான் நரசிங்கமூர்த்தியாய்த் திருவவதரித்து, சினம்—கோபத்தை யுடையனாய், தேரி உகிரால்—விளங்காநின்ற நகங்களினால், இரணியனது ஆகம் கீண்டான்—; என்று வினைமுற்றாக்கி உரைத்துக் கொள்ளவுமாம்.

மூன்றாமடியில், "எரியுருவமாகி" என்றபாடம் பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியானத்திற்குப் பொருந்தும்; "ஒளியுண்டான ரூபத்தையுடையனாய்" என்பது வியாக்கியான வாக்கியம்.

சினமா மதகளிற்றின் திண்மருப்பைச் சாய்த்து *
புனமேய பூமியதனை *—தனமாகப்
பேரகலத் துள்ளோடுக்கும் பேரார மார்வனார் *
ஓரகலத் துள்ள துலகு. (சஙு)

சினம் மா மதம்	கோபத்தையும் மிகுந்த மதத்தையுமுடைய	பேர் அகலத்துள் ஒடுக்கும்	சிறிய திருவயிற்றினுள் அடக்கிக் காத்தவனும்
களிற்றின்	(குவலயாபீட மென்கிற) யானையினுடைய	பேர் ஆரம் மார்வனார்	சிறந்த ஹாரங்கள் பூண்ட திருமார்பை யுடையனுமான எம் பெருமானுடைய
திண்மருப்பை	திடமான தந்தத்தை		
சாய்த்து	முறித்துத்தள்ளினவனும்		
புனம் மேய	நல்ல நிலங்களோடு கூடின	ஓர் அகலத்து	ஸங்கல்பரூபமான ஜ்ஞானத்தின் ஏகதேசத்தில்
பூமிஅதனை	பூமியை		
தனம் ஆக	நிதியாக நினைத்துக் கொண்டு	உலகு உள்ளது	உலகமெல்லாம் உள்ளது.

* * *—உலகமெல்லாம் எம்பெருமானுடைய ஸங்கல்பத்தினால் ஸத்தைபெற்றுக் கிடக்கின்றதென்கிறார். வில்விழவென்கிற வியாஜம்வைத்துக் கம்ஸனாலழைக்கப்பட்டு மதுரையில் அவனது அரண்மனையினுட் புகும்போது எதிர்த்துப் போர்செய்து கொல்லவந்த குவலயாபீடமென்னும் மதயானையை மருப்பொசித்து முடித்தவனும், பூமண்டலமெல்லாம்பிரளயப்பெருங்கடலில் அழியாதபடி

நிதியைக்காப்பாற்றுவதுபோல அவற்றைத் திருவயிற்றிலேவைத்துக்காப்பாற்றினவனும், இப்படி தன்னுடைமையானது ரக்ஷிக்கப்பட்டதென்ற மகிழ்ச்சி காரணத்தினால் ஆபரணம் பூண்டாற்போலேயிருக்கிற திருமேனியை யுடையவனுமான எம்பெருமானுடைய ஸங்கல்பத்தின் ஏகதேசத்திலுள்ளது இவ்வுலகமெல்லாம்.

அகலம் என்றசொல் ஸங்கல்பத்துக்கு வாசகமாவது எங்ஙனேயென்னில்; இச்சொல் மார்பைச் சொல்லும்; அதன் உட்புறமான மனத்தின் தருமமாகிய ஸங்கல்பத்தை இலக்கணையால் சொல்லுகின்றதென்க.

“பேரகலத்துள்” என்ற விடத்து, பேர் என்றது எதிர்மறையிலக்கணையில் சிறுமையைச் சொல்லுமென்க. .... (௪௩)

உலகமு மூழியு மாழியும் * ஒண்கேழ்
அலர்கதிரும் செந்தீயு மாவான் *—பலகதிர்கள்
பாரித்த பைம்பொன் முடியா னடியிணைக்கே *
பூரித்தென் நெஞ்சே புரி. (௪௪)

என் நெஞ்சே	எனது மனமே!,
உலகமும்	உலகங்களும்
ஊழியும்	ஸம்ஹாரகாலமும்
ஆழியும்	கடல்களும்
ஒண் கேழ் அலர் கதிரும்	அழகிய நிறத்தையும் பரம்பின கிரணங்களையு முடைய சந்திர ஸூர்யர்களும்
செம் தீயும்	சிவந்த நிறத்தை யுடைத்தான அக்நியும்
ஆவான்	ஆகிய இப்பொருள்களெல்லாம் தனக்கு ப்ரகாரமாம்படி நிற்பவனும்,
பல கதிர்கள் பாரித்த	பல கிரணங்களைப் புறப்பட விடுகின்ற
பை பொன் முடியான்	அழகிய பொன்முடியை யுடையவனுமான எம் பெருமானுடைய
அடி இணைக்கே	உபயபாதங்களுக்கே
பூரித்து புரி	பரிபூரணமாக விருப்பங் கொள்ளு.

* * *—இப்போது காணப்படுகின்ற லோகங்களும், இவையெல்லாம் ஸம்ஹரிக்கப்பட்டுக் காலமொன்று மாத்திரம் மிகுந்திருக்கப்பெற்ற பிரளயகாலமும், ஆதித்யனும் அக்நியும் ஆகிற பதார்த்தங்களை ப்ரகாரமாகவுடையனாய் [இவற்றுக்கெல்லாம் ஆத்மாவாய்,] பரமபதத்திலே பல கிரணங்களை வெளியிடுகின்ற திருவபிஷேகத்தையுடையனாய்க் கொண்டு எழுந்தருளியிருக்குமெம்பெருமானுடைய திருவடிகளிலே பரிபூரணமான பக்தியைக்கொண்டிருக்குமாறு நெஞ்சுக்கு உபதேசித்தாராயிற்று. ... (சச)

புரிந்து மதவேழம் மாப்பிடியோடூடி *
திரிந்து சினத்தால் பொருது *—விரிந்தசீர்
வெண்கோட்டு முத்துதிர்க்கும் வேங்கடமே * மேலொருநாள்
மண்கோட்டுக் கொண்டான் மலை. (சரு)

மதம் வேழம்	மத்த கஜமானது
மா பிடியோடு	சிறந்த தன்பேடையோடு
புரிந்து	கலவிசெய்து
ஊடி	பிரணய கலஹம்பண்ணி
திரிந்து	(அதனால் பேடையைத் துறந்து) இங்குமங்குந் திரிந்து
சினத்தால் பொருது	கோபத்தினால் கரைபொருது
வெண் கோடு	வெளுத்த கொம்புகளினின்று
விரிந்த சீர் முத்து	சிறந்த முத்துக்களை
உதிர்க்கும்	வெளிவிடப்பெற்ற
வேங்கடமே	திருமலையே
மேல் ஒருநாள்	முன்னொருநாளில் (வராஹ ரூபியாய்)
மண்	பூமியை
கோடு	கோரப்பல்லின்மீது
கொண்டான்	எடுத்துக் கொண்டு வந்த பெருமானுடைய
மலை	திருமலையாம்.

* * *—ஏழுலகும் தனிக்கோல் செல்லப் பரமபதத்தில் வீற்றிருக்கக் கடவனை அவன் நம்போன்றவர்க்கும் ஆச்ரயிக்க எளியனாய்த் திருமலையிலே வந்து நித்யஸந்நிதி பண்ணியிராநின்றானென்கிறார். திருமலையை வருணிக்கிறார். யானை தன் பேடையுடனே கலந்திருந்தபோது பிரணயகலஹம் உண்டாயிற்று; அதனால் பேடையை விட்டிட்டு இங்குமங்குந்திரிந்து கோபத்திற்குப்

போக்குவீடாகத் தனது தந்தத்தை மணிப்பாறைகளிலே யிட்டுக் குத்துகின்றதாம்; அப்போது அத்தந்தத்தில் நின்று வெண்முத்துக்கள் உதிர்கின்றனவாம்; இப்படி இருக்கப்பெற்ற திருமலை முன்பு வராஹாவதாரஞ் செய்தருளின பெருமானுடைய இருப்பிடம் என்கை.

பொருது = திருமலையிலுள்ள பளிங்குப் பாறைகளிலே யானை தன் நிழலைக்கண்டு எதிர்யானையென்று பிரமித்து அதனோடே போர்செய்கின்றதாகவும் கொள்ளலாம். ... ... (௫௫)

மலைமுகடு மேல்வைத்து வாசுகியைச் சுற்றி *
தலைமுகடு தானொருகை பற்றி *—அலைமுகட்
டண்டம்போய் நீர்தெறிப்ப அன்றுகடல் கடைந்தான் *
பிண்டமாய் நின்ற பிரான். (௫௬)

பிண்டம் ஆய் நின்ற பிரான்	(ஜகத்துக்கு) மூலகாரணமாக நின்ற எம்பெருமான்,
அன்று	முன்பொரு காலத்தில்,
முகடு மலை	சிகரத்தையுடைத்தான மந்தரமலையை
மேல் வைத்து	(கூர்மரூபியான தன்னுடைய முதுகின்மேலே) வைத்து
வாசுகியை சுற்றி	(அதிலே) வாஸுகிநாகத்தை (க் கடைகயிறாக) ச்சுற்றி
தலை முகடு	அதன் தலைப்பாகத்தை
தான் ஒரு கை பற்றி	தான் ஒரு கையாலே பற்றிக்கொண்டு
அலை நீர்	அலையின் திவலைகள்
அண்டம் முகடு போய் தெறிப்ப	அண்டத்தின் மேற் சென்று தெறிக்கும்படியாக
கடல் கடைந்தான்	கடலைக்கடைந்தான்.

* * *—பிரயோஜநாந்தரத்தை விரும்புமவர்க்கும் உடம்பு நோவக் காரியஞ்செய்து பயனளிப்பவனெம்பெருமான் என்கிறார். துர்வாஸமஹர்ஷியின் சாபத்தினால் தேவர்களின் செல்வம்யாவும் ஒழியவே இந்திரன் தேவர்களோடு திருமாலைச் சரணமடைந்து அப்பிரான் அபயமளித்துக் கட்டளையிட்டபடி அசுரர்களையும் துணைக்கொண்டு மந்தரமலையை மத்தாகநாட்டி வாஸுகியென்னும் மஹாநாகத்தைக் கடைகயிறாகப்பூட்டிப் பாற்கடலைக் கடைகை

யில், மத்தாகிய மந்தரகிரி கடலினுள்ளே அழுந்திவிட, தேவர்களின் வேண்டுகோளினால் திருமால் பெரியதோர் ஆமைவடிவமெடுத்து அம்மலையின்கீழேசென்று அதனைத்தனது முதுகின்மீது கொண்டு தாங்கி அம்மலை கடலில் அழுந்திவிடாமல் கடைதற்கு உபயோகமாம்படி அதற்கு ஆதாரமாக எழுந்தருளியிருந்து, இப்படியிருக்கையில் வாஸுகியின் வாலைப்பிடித்துக் கொண்ட தேவர்களும் தலையைப்பிடித்துக்கொண்ட அசுரர்களும் அதனை வலியப் பிடித்திழுத்துக் கடையவல்ல வலிமையில்லாதவராய் நிற்க, அது நோக்கி அத்திருமால்தான் ஒரு திருமேனியைத்தரித்துத் தேவர்கள் பக்கத்திலும் வேறொரு திருமேனியைத் தரித்து அசுரர்கள் பக்கத்திலும் நின்று வாஸுகியின் வாலையும் தலையையும் பிடித்து வலமும் இடமுகமாக இழுத்துக்கடைந்த வரலாறு அறிக. அப்போது கடைகிற வேகத்தாலே அலைநீர்த்திவலைகள் அண்டம் போய்த் தெறித்தனவென்கிறார்.

பிண்டமாய் நின்ற பிரான் = மண்ணுண்டையானது பல காரியப் பொருள்களாக ஆகி, பானை யென்றும் மடக்கென்றும் சால் என்றும் பலவடிவுகளை அடைவதுபோல, எம்பெருமானும் ஸகல ஜகத்துக்கும் உபாதாநகாரணமாயிருத்தல்பற்றிப் பிண்டமாய் நின்ற என்கிறார். ஸூக்ஷ்ம சிதசித் விசிஷ்டனாயிருந்தபடியைச் சொல்லிற்றென்க. ... . (சசு)

நின்ற பெருமானே நீரேற்று * உலகெல்லாம்
சென்ற பெருமானே செங்கண்ணா *— அன்று
துரகவாய்கீண்ட துழாய் முடியாய் * நங்கள்
நரகவாய் கீண்டாயும் நீ. (சஎ)

நீர் ஏற்று நின்ற பெருமானே	(மாவலிபக்கல்) உதகதானம் வாங்கிக்கொண்டு நின்ற பெருமானே!	செம் கண்ணா	செந்தாமரைக் கண்ணனே!
		அன்று	முன்பொரு காலத்தில்
உலகு எல்லாம் சென்ற பெருமானே	எல்லா வுலகங்களையும் வியாபித்த பெருமானே!	துரகம்	குதிரைவடிவு கொண்டு நலியவந்த கேசியென்னு மசுரனுடைய

வாய்	வாயை	நங்கள்	எங்களுடைய
கீண்ட	கீண் டொழித்தவனே!	நரகம் வாய்	நரகமார்க்கத்தை
துழாய் முடியாய்	திருத்துழாயணிந்த திருமுடியை யுடையவனே!	கீண்டாயும் நீ	அழித்தவனும் நீயேயன்றோ ?

* * *—வாமனனாகி மாவலிபக்கல் யாசகனாய்ச்சென்று இரந்து உதகதானம்பெற்று நின்றபோதையழகை என்சொல்வேன்!; உடனே திரிவிக்ரமனாய் ஓங்கிவளர்ந்து உலகெல்லாம் வியாபித்த விதத்தை என்சொல்வேன்!; ஆச்ரிதபக்ஷபாதம் நன்கு விளங்கும் படி திருக்கண்ணழகு இருக்குமாற்றை என்சொல்வேன்!; கம்ஸனாலேவப்பட்டு உன்னைக்கொல்லவந்த கேசியென்னும் குதிரையுருக்கொண்ட வசுரனுடைய வாயைப்பிளந்து அவனை முடித்த வீரத்தை என்சொல்வேன்; அவ்வசுரனோடு போர்செய்தவளவிலும் திருமுடியிலணிந்திருந்த திருத்துழாய் சிறிதும் வாடாதிருந்த விசித்திரத்தை என்சொல்வேன்!. எங்களுடைய நரகத்தின் வாயைக் கிழித்தவுனக்கு ஒரு கேசியின் வாயைக்கிழித்தது ஆச்சரியமோ? என்றவாறு.

துரகம்=வடசொல்; விரைவாகச்செல்வது என்று குதிரைக்குக் காரணப்பெயர். நரகவாய் கீண்டாய்=இனி நாங்கள் ஸம்ஸாரமாகிற நரகத்தில் புகுவதற்கு வழியில்லாதபடி செய்தருளினையென்கை. ... . (எள)

நீயன்றே நீரேற்று உலகமடி யளந்தாய் *
நீயன்றே நின்று நிரைமேய்த்தாய் *—நீயன்றே
மாவா யுரம்பிளந்து மாமருதி னூடுபோய் *
தேவாசுரம் பொருதாய் செற்று. (சஅ)

நீர் ஏற்று	(மாவலிபக்கல்). உதகதானம் வாங்கி	நின்று	ரக்ஷிப்பதில் நிலைத்து நின்று
		நிரை	பசுக்கூட்டங்களை
உலகம்	உலகங்களை	மேய்த்தாய் நீ அன்றே	மேய்த்தவனும் நீயன்றோ ?
அடி அளந்தாய் நீ அன்றே	திருவடியா லளந்தவன் நீயன்றோ ?	மா	குதிரைவடிவு கொண்டுவந்த கேசியென்னு மசுரனுடைய

வாய் உரம்	வாயின் வலிமையை
பிளந்து	ஒழித்தவனும்
மா மருதின் ஊடு போய்	பெரிய இரட்டை மருத மரங்களி னிடையே தவழ்ந்து அவற்றை முறித்துத் தள்ளினவனும்
தேவாசுரம்	தேவாஸுர யுத்தத்திலே
செற்று	(அசுரர்களை) அழியச்செய்து
பொருதாய் நீ அன்றே	போர் செய்தவனும் நீயன்றோ ?

* * *—ஒன்றோடொன்று சேராதசெயல்களைச் செய்தவன் நீயோவென்கிறார். மாவலிபக்கல் யாசகனாய்ச்சென்றாய் என்றும் விம்மவளர்ந்து உலகங்களையெல்லாம் அளந்தாய் என்றும் கேள்விப்படுகிறோம்; யாசகனாய்ச்சென்ற செயலாலே அசக்தியைக்காட்டிக்கொண்டாய்; உலகளந்த செயலாலே ஒப்பற்ற சக்தியைக்காட்டிக்கொண்டாய்; இவை என்கொல் ?.

தவிரவும்; திருவாய்ப்பாடியில் இடையனாய்ப்பிறந்து பசுக்களையுங் கன்றுகளையும் புல்லுந்தண்ணீருமுள்ள விடங்களிற் கொண்டுசென்று மேய்த்தாயென்றும், அந்த நிலைமையிலேயே கேசியின் வாயைக் கீண்டொழித்தாயென்றும் கேள்விப்படுகிறோம். இவையும் அப்படியே.

அன்றியும்; நீ கண்ணனாய்ப்பிறந்து குழந்தையாயிருக்குங் காலத்தில், துன்பப்படுத்துகின்ற பல விளையாடல்களைச் செய்யக் கண்டு கோபித்தயசோதை உன்னை வயிற்றில் கயிற்றினால் கட்டி ஓருரலிலே பிணித்துவிட, அவ்வுரலையும் இழுத்துக்கொண்டு தவழ்ந்து அங்கிருந்த இரட்டை மருதமரத்தின் நடுவே சென்றாய் என்றும், தேவாஸுரயுத்தத்தில் அசுரர்களைக்கொன்று தேவர்களை வெற்றி பெறுவித்தாயென்றும் கேள்விப்படுகிறோம்; இவையும் அப்படியே. ஆகவிப்படி அசக்தியையும் சக்தியையும் காட்டவல்ல செயல்களைச் செய்த மஹாநுபாவன் நீயோ பிரானே! என்றாராயிற்று. ... ... (௬அ)

செற்றதுவுஞ் சேரா விரணியனை * சென்றேற்றுப்
பெற்றதுவும் மாநிலம் பின்னைக்காய்*—முற்றல்
முரியேற்றின் முன்னின்று மொய்ம்பொழித்தாய் * மூரிச்
சுரியேறு சங்கினாய்! சூழ்ந்து. (௬௯)

பின்னைக்காய்	நப்பின்னைப் பிராட்டிக்காக,
முற்றல் முரி	முதிர்ந்த வலிமையை யுடைய
ஏற்றின்	ரிஷபங்களினுடைய
முன் நின்று	எதிரில் (அஞ்சாமே) நின்று
சூழ்ந்து	(அவற்றைக் கொல்லும் வகையை) ஆலோசித்து
மொய்ம்பு ஒழித்தாய்	(அவற்றின்) மிடுக்கை ஒழித்தவனே!,
மூரி	பெரிதாயும்
சுரி ஏறு	(உள்ளே) சுழித்தலை யுடைத்தாயு மிருக்கிற
சங்கினாய்	சங்கைத் திருக்கையி லேந்தி யுள்ளவனே! (இப்படியிருக்கிற நீ,)
செற்றதுவும்	கைகூசாமல் முடித்துப் போட்டதும்
சேரா இரணியனை	உன்னைச்சேர்ந்து வாழமாட்டாத ஹிரண்யாஸுரனை;
சென்று	(மஹாபலிபக்கலில்) சென்று
ஏற்று	யாசித்து
பெற்றதுவும்	பெற்றுக் கொண்டதும்
மா நிலம்	பெரிய பூமியை.

* * *—எம்பெருமானே! நீ அடியவர் திறத்தில் அன்பு மிகுதியினால் அவர்களின் இஷ்டங்களை நிறைவேற்றுதற்காகவும் அநிஷ்டங்களைப் போக்குதற்காகவும் செய்தருள்கின்ற செயல்களுக்கு எல்லையுண்டோ? பரமபக்தனான ப்ரஹ்லாதாழ்வானுடைய கருத்துக்கு இரணியன் இணங்கவில்லையென்ற காரணத்தினால் அவனைக் கைதொட்டு முடித்துப் போட்டாய்; இந்திரன் கண்ணீர்விட்டு அழுவதைக்கண்டு பொறுத்திருக்க மாட்டாமல் அவனுக்காகக் குறளுருவாகி மாவலிபக்கல் சென்று எண்சாணுடம்பை இருசாணாக்கி இரப்பாளனாய்க் காரியஞ் செய்தாய்; நப்பின்னைப் பிராட்டியின் திருமேனியிலுள்ள சாபலத்தினால் 'இவளைப் பெறுதற்கு எவ்வளவு கடினமான செய்கை செய்தாலும் செய்யலாம்' என்று கொழுத்த காளைகளேழுடனே பொருது வெற்றிபெற்றாய்; தூரத்திலேயிருந்து உன் வரவை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்களும் உன் வரவைத் தெரிவிக்கின்ற சங்கினோசையைக்கேட்டு நெஞ்சு குளிர்ந்திருக்குமாறு ஒலி செய்யச் சங்கை

விடாமற் கைக்கொண்டுள்ளாய்; ஆகவே உனது பிரவ்ருத்திகளடங் கலும் பரார்த்தமாகவே யிருக்கின்றனகாண்—என்றவாயிற்று.

சேராவிரணியன்=சத்துருவான இரணியன் என்றபடி. ஆச்ரிதர்களுக்கு விரோதம் செய்பவர்களை எம்பெருமான் தனக்கு சத் துருவாக நினைப்பிடுவன் என்க. .... (சுசு)

சூழ்ந்த துழாயலங்கல் சோதி மணிமுடிமால் *
தாழ்ந்த வருவித் தடைவரைவாய்—ஆழ்ந்த
மணிநீர்ச் சுனைவளர்ந்த மாமுதலை கொன்றான் *
அணிநீல வண்ணத் தவன். (௬௦)

சூழ்ந்த	நிறையச்சாத்தப் பெற்றுள்ள	தாழ்ந்த அருவி தட வரை வாய்	பூமியளவும் தாழ்ந்து பெருகுகின்ற அருவிகளை யுடைய பெரிய மலையின் கணுள்ள
துழாய் அலங்கல்	திருத்துழாய் மாலையாலே		
சோதி	புகர் பெற்ற		
மணி முடி	மணிமயமான கிரீடத்தை யுடையனும்	ஆழ்ந்த மணி நீர் சுனை	ஆழமாய் அழகிய நீரை யுடைத்தான பொய்கையிலே
அணி நீலம் வண்ணத் தவன்	அழகிய நீலநிறத்தை யுடையனுயு மிருக்கிற	வளர்ந்த	(சாபத்தினால்) வளர்ந்து கொண்டிருந்த
		மா முதலை	பெரிய முதலையை
மால்	ஸர்வேச்வரன்,	கொன்றான்	முடித்தொழித்தான்.

* * *—எம்பெருமான் அடியார்களுக்காகச் செய்தருளின காரியங்களெல்லாவற்றினும் ஸ்ரீ கஜேந்திராழ்வானுக்குச் செய்தரு ளின அநுக்ரஹம் விலக்ஷணமாகையாலே, மற்ற காரியங்களெல் லாம் ஒருதட்டும் இது ஒரு தட்டுமாக இருப்பதுபற்றி கஜேந்த்ர மோக்ஷ வ்ருத்தாந்தத்தைத் தனிப்பட அருளிச் செய்கிறாரிதில்.

இப்பாட்டில் நடுவே இரண்டடிகளில் கதையை யருளிச் செய்து முதலடியிலும் ஈற்றடியிலும் எம்பெருமானைச் சிறப்பித் துக் கூறியிருப்பதன் கருத்தை உய்த்துணர வேண்டும்: எம்பெரு மான் திருத்துழாய் மாலை அணிந்து கொண்டிருப்பதும், திருவபி

ஷேகம் அணிந்து கொண்டிருப்பதும் 'தானே அனைத்துலகும் காக்கவல்ல முழுமுதற் கடவுள்' என்பதை விளக்குவதற்கேயாம்; பரமபக்தனான கஜேந்திராழ்வான் நெடுங்காலமாக ஒரு நீர்ப்புழுவின் வாயில் அகப்பட்டுக்கொண்டு மிகவும் நொந்துகிடந்ததனால் எம்பெருமானுடைய ரக்ஷகத்வம் குன்றிக்கிடந்தது; அவனுடைய திருத்துழாய் மாலையும்வாடி, திருவபிஷேகமும் ஒளிமழுங்கிக்கிடந்தது. பிறகு முதலையைத் துணித்து வேழத்தை வாழ்வித்ததனால் ரக்ஷகத்வ லக்ஷணமான திருத்துழாய் மாலையும் திருவபிஷேகமும் ஒளிமல்கப் பெற்றமையால் அதனை 'சூழ்ந்த துழாயலங்கல் சோதி மணி முடிமால்' என்ற முதலடியால் அருளிச்செய்தார். 'பக்தனுடைய விரோதி தொலைப்பப்பெற்றோம்' என்று பிறந்த அளவற்ற மகிழ்ச்சியினால் திருமேனி புகர்பெற்றபடியை 'அணிநீல வண்ணத்தவன்' என்ற ஈற்றடியினால் அருளிச்செய்தார்.

கஜேந்திராழ்வான் தாமரைப்பூப்பறித்த பொய்கை மலைமேலிருந்ததனால் 'தடவரை வாய்' எனப்பட்டது. ... (௫௦)

அவனே யருவரையால் ஆநிரைகள் காத்தான் *
அவனே யணிமருதம் சாய்த்தான் ⁎—அவனே
கலங்காப் பெருநகரம் காட்டுவோன் கண்டீர் *
இலங்காபுர மெரித்தா னெய்து. (௫௧)

அரு வரையால்	ஒருவரால் அசைக்கவும் முடியாததான கோவர்த்தன மலையினால்
ஆ நிரைகள்	பசுக்கூட்டங்களை
காத்தான்	ரக்ஷித்தருளினவன்
அவனே கண்டீர்	அப்பெருமானே யாவன்;
அணி மருதம்	அழகாக நின்று கொண்டிருந்த இரட்டைமருத மரங்களை
சாய்த்தான்	முறித்துத் தள்ளினவனும்
அவனே கண்டீர்	அப்பெருமானே யாவன்;
எய்து	அம்புகளைப் பிரயோகித்து
இலங்காபுரம்	லங்காபட்டணத்தை
எரித்தான்	எரியவிட்டவனான
அவனே	அப்பெருமானே
கலங்கா பெரு நகரம்	ஒருவகைக் கலக்கமுமில்லாத பரமபதத்தை
காட்டுவான்	காட்டித்தருவான்.

* * *—இந்திரன் எம்பெருமானிடத்தில் எத்தனையுபகாரங்கள் பெற்றான்!; எத்தனை பெற்றும் நன்றி நெறியுள்ளவனோ அவன்? இடையர்கள் வழக்கமாகத் தனக்கு இடுஞ் சோற்றைக் கண்ணபிரான் விலக்கினன் என்பதுவே காரணமாகப் பசிக்கோபங் கொண்டு மாடுகளையுங் கன்றுகளையும் இடையர்களையும் படாத பாடு படுத்திவிட வேணுமென்று மேகங்களையேவிப் பெருமழை பெய்வித்தான்; அந்த இந்திரனுடைய தலையை அறுத்தெறிய எத்தனை நிமிஷஞ்செல்லும் கண்ணபிரானுக்கு!; எளிதாகத் தலையை அறுத்தெறியலாமாயினும் 'அவனுணவைக் கொள்ளை கொண்ட நாம் உயிரையுங் கொள்ளை கொள்ளலாகுமோ?' என்று பரம கருணை பாராட்டி 'நம்மவர்களை நாம் ஒழுங்காகப் பாதுகாத்துக் கொள்வோம்; கைசலித்தால் தானே ஓய்ந்து நிற்கிறான்' என்று திருவுள்ளம்பற்றி இந்திரனை ஒன்றுஞ் செய்திடாது மலையைக் குடையாக வெடுத்து ஆயரையும் ஆநிரைகளையும் காத்தருளின குணத்தை என்சொல்வோம்!. மருதமரங்களின் கீழே உரலையுமிழுத்துக்கொண்டு கண்ணனுய்த் தவழ்ந்து சென்றபோது உரல் குறுக்காக இழுக்கப்பட்டதனால் அம்மருத மரங்கள் முறிந்து விழச் செய்தேயும் அதன்கீழிருந்த தனக்கு ஒரு தீங்குமின்றியே, அம்மரங்களாய் நின்ற குபேரபுத்திரர்களைச் சாபத்தில் நின்று விடுவித்தும் அம்மரங்களில் ஆவேசித்துக் கிடந்த அஸுரர்களைக் கொன்றொழித்தும் காட்டின சிறுச்சேவகத்தை என்சொல்வோம்!. கண்ணபிரானுய்த் திருவவதரித்து இப்படிப்பட்ட அருந்தொழில்கள் செய்தவனும் ஸ்ரீராமபிரானுய்த் திருவவதரித்து ராக்ஷஸர்களுடைய குடியிருப்பை யழித்தவனுமான பெருமான் இப்படி தனது நிர்ஹேதுக கிருபையினாலே தானே இதர நிரபேக்ஷனுய் விரோதிகளை வேரறுத்தது போல, அந்த நிர்ஹேதுக கிருபை கொண்டே நமக்கும் பரமபதமளித்தால் நாம் பெறலாகுமேயன்றி நாமாக ஒரு முயற்சி செய்து பரமபதம் பெறுவது அரிது என்கிறார்.

அவனே அவனே அவனே என்ற ஏகாரங்கள் மூன்றும்—அநிஷ்ட நிவ்ருத்தி செய்து கொள்வதற்கும் நம்மாலாகாது; இஷ்டப்ராப்தி பெறுதற்கும் நம்மாலாகாது; அப்பெருமானுடைய க்ருஷி

தானே யுண்டாகிப் பலித்தால் பலிக்குமத்தனை என்ற ஸித்தாந்தத்தை வற்புறுத்துவன.

"பரமபதம் அவனே காட்டக் காணுமத்தனை; ஸ்வயத்நத்தால் காண்பார்க்குக் காணப்போகாது" என்பது பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி.

எவ்வகைக் கலக்கங்களு முள்ளது இந்நிலத்திலே யாகையாலும் பரமபதத்தில் ஒருவகைக் கலக்கமு மில்லாமையாலும் கலங்காப் பெருநகர மென்று அவ்விடத்திற்குத் திருநாமமேற்கும். (௫௧)

எய்தான் மராமர மேழுமிராமனாய் *
எய்தா னம்மான் மறியை ஏந்திழைக்காய் *—எய்ததுவும்
தென்னிலங்கைக் கோன்வீழச் சென்று குறளுருவாய் *
முன்னிலம் கைக்கொண்டான் முயன்று. (௫௨)

இராமன் ஆய் — ஸ்ரீராமனாகத் திருவவதரித்து
மராமரம் ஏழும் — ஸப்தஸால வ்ருக்ஷங்களையும்
எய்தான் — அம்புசெலுத்தித் துளைத்தான்;
ஏந்து இழைக்கு ஆய் — தரிக்கப்பட்ட ஆபரணங்களையுடைய பிராட்டிக்காக
அம்மான் மறியை — அப்படிப்பட்ட மாரீச மாயா மிருகக்குட்டியை
எய்தான் — பின்சென்றான்;
எய்ததுவும் — அம்புகளைச் செலுத்தினதும்
தென் இலங்கை கோன் வீழ — தென்னிலங்கைக்கு அரசனான இராவணன் முடியும்படியாகவாம்;
முன் — முன்பொரு காலத்திலே
குறள் உரு ஆய் — வாமனரூபியாய்
சென்று — மாவலியிடத்திற் சென்று
முயன்று — (வடிவழகுகாட்டுதல், மழலைச் சொற்களைச் சொல்லுதல் முதலிய) முயற்சிகளைச் செய்து
நிலம் கைக் கொண்டான் — பூமியைக் கைப்பற்றினான்.

* * *—'எம்பெருமான் ஸர்வசக்தன்' என்று ப்ரஸித்தமாயிருக்கச் செய்தேயும் 'இவனுக்கு சக்தியுண்டோ இல்லையோ?'

என்று யாரேனும் ஸந்தேகப்பட்டால் அந்த ஸந்தேஹத்தைத் தீர்க்குமாறு அரிய காரியங்களை எளிதிற் செய்து காட்டுவானவன் என்பதற்காக மராமரமேழு மெய்த வரலாற்றைக் கூறுகின்றார். ஸுக்ரீவன் இராமனால் அபயப்ரதானஞ் செய்யப்பெற்ற பின்பும் மனந்தெளியாமல் வாலியின் போராற்றலைப் பற்றிப் பலவாறு சொல்லி, வாலி மராமரங்களைத் துளைத்ததையும் துந்துபியின் உடலெலும்பை ஒருயோஜனை தூரம் தூக்கியெறிந்ததையுங் குறித்துப் பாராட்டிக் கூறி, இவ்வாறு பேராற்றலமைந்தவனை வெல்வது ஸாத்யமாகுமோ? என்று சொல்ல, அதுகேட்ட லக்ஷ்மணன் 'உனக்கு நம்பிக்கை இல்லையாயின் இப்போது என்ன செய்ய வேண்டுவது?' என்ன, ஸுக்ரீவன் 'இராமபிரான் நீறுபூத்த நெருப்புப் போலத் தோன்றினும் வாலியின் வல்லமையை நினைக்கும்போது ஸந்தேஹமுண்டாகின்றது; ஏழு மராமரங்களையும்துளைத்து இந்த துந்துபியின் எலும்பையும் இருநூறு விரற்கடை தூரம் தூக்கி யெறிந்தால் எனக்கு நம்பிக்கை யுண்டாகும்' என்று சொல்ல, ஸுக்ரீவனுக்கு நம்புதலுண்டாக்குமாறு அவனது வார்த்தைக்கு இயைந்து இராமபிரான் துந்துபியின் உடலெலும்புக் குவியலைத் தனது காற்கட்டை விரலினால் இலேசாய்த் தூக்கிப் பத்து யோஜனை தூரத்துக்கு அப்பால் எறிய, அதனைக்கண்ட ஸுக்ரீவன் 'முன்பு உலரா திருக்கையில் வாலி இதனைத் தூக்கி யெறிந்தான்; இப்போது உலர்ந்துபோன இதனைத் தூக்கி யெறிதல் ஒரு சிறப்பன்று' என்று கூற, பின்பு இராமபிரான் ஒரு பாணத்தை ஏழு மராமரங்களின்மேல் ஏவ, அது அம்மரங்களைத் துளைத்ததோடு ஏழுலகங்களையும் துளைத்துச்சென்று மீண்டு அம்பறாத்தூணியை யடைந்ததென்ற வரலாறு இங்கு அறியத்தக்கது. மராமரம்—ஆச்சாமரம்.

ஏந்திழைக்காய் அம்மான் மறியை எய்தான் = 'எய்தான்' என்னுஞ் சொல் 'எய்' என்னும் வினைப்பகுதியடியாகவும் 'எய்து' என்னும் வினைப்பகுதியடியாகவும் தேறுவதுண்டு: முந்தினது அம்புகளைச் செலுத்தினானென்று பொருள்படும். பிந்தினது அடைந்தானென்று பொருள்படும். இப்பாசுரத்தில் முதலடியிலுள்ள 'எய்தான்' என்னும் வினைமுற்று எய் என்னும் வினைப் பகுதியடியாகப் பிறந்ததென்றும், இரண்டாமடியிலுள்ள எய்தா

னென்னும் வினைமுற்று எய்து என்னும் வினைப்பகுதியடியாகப் பிறந்ததென்றும் கொண்டு உரைக்கப்பட்டது. 'இது மாயா மிருகம்' என்று தனக்குத் தெரிந்திருந்தும் பிராட்டியின் கோரிக்கையைப் பின்சென்று நடக்கவேண்டிய பிரணயாதிசயத்தினால் அம்மான் குட்டியின் பின்னே நடந்தான் என்றவாறு. 'மறி' என்ற சொல்-சில மிருகங்களின் குட்டிக்குப் பொதுப்பெயராயும் மானுக்குச் சிறப்புப் பெயராயுமுள்ளது; இங்குக் குட்டியென்ற பொருளில் வந்தது. 'மான் மறிய' என்றும் பாடமுண்டென்பர்; அப்போது, மாரீச மாயாமிருகம் சாகும்படி என்று பொருளாம்.

'ஏந்திழைக்காய்' என்ற சொல் நடுநிலைத் தீவகமாய் இரண்டாமடியிலும் மூன்றாமடியிலும் அந்வயிக்கத்தக்கது. ... (ருஉ)

முயன்று தொழுநெஞ்சே மூரிநீர் வேலை *
இயன்றமரத் தாலிலையின்மேலால் *—பயின்றங்கோர்
மண்ணலங்கோள் வெள்ளத்து மாயக் குழவியாய் *
தண்ணலங்கல் மாலையான் தாள். (ருங)

மூரி நீர் வேலை	பழையதான நீரையுடைத்தான ஸமுத்ரத்திலே
இயன்ற	பொருந்தியுள்ள
ஆலமரத்து இலையின் மேலால்	ஆலமரத்தின் இலைமீது
பயின்று	நெடுங்காலம் சாய்ந்திருந்து
அங்கு	அங்கே
மண்	பூமியினுடைய
நலம்	நன்மையை
கொள்	அபஹரித்த
வெள்ளத்து	பிரளய வெள்ளத்திலே
ஓர் மாயம் குழவி ஆய்	ஆச்சரியமான ஒரு குழந்தையாய்
தண் அலங்கல் மாலையான்	குளிர்ந்து அசைகின்ற மாலையையுடையவனான எம்பெருமானுடைய
தாள்	திருவடிகளை
நெஞ்சே	நெஞ்சமே!
முயன்று தொழு	உத்ஸாஹங்கொண்டு வணங்கு.

* * *—ஆலிலையில் துயின்ற பெருமானுடைய திருவடிகளைத் தொழுமாறு தமது திருவுள்ளத்திற்கு உரைக்கிறார். பொய்கையாழ்வார் தமது திருவந்தாதியில் "பாலன் தனதுருவாய் ஏழுலகுண்டு, ஆலிலையின் மேலன்று நீவளர்ந்த மெய்யென்பர்—ஆலன்று

வேலைநீருள்ளதோ விண்ணதோ மண்ணதோ?, சோலைசூழ் குன்றெடுத்தாய் சொல்லு' என்று—' பிரளய காலத்தில் உனக்கு இருப்பிடமாயிருந்த ஆலமரம் பிரளயப் பெருங்கடலினிடையே இருந்ததா? விண்ணிலிருந்ததா? மண்ணிலிருந்ததா? எங்கிருந்தது, சொல்லு' என்று சமத்காரமாக எம்பெருமானை மடிபிடித்துக் கேள்வி கேட்டார்; எம்பெருமான் தனது விசித்ர சக்தி யோகத்தால் அந்த ஆலமரத்தைப் பிரளயக் கடலினிடையே தோன்றுவித்தான் என்கிற ஸமாதானத்தை இவ்வாழ்வார் இப்பாட்டில் வெளியிடுவார் போன்று "மூரிநீர் வேலையின்ற மரத்தா லிலையின் மேலால்" என்கிறார்.

மூரிநீர்='மூரி' என்ற சொல்லுக்கு 'அநாதி' என்ற பொருளும் 'பெரிது' என்ற பொருளும் 'வலிமைகொண்டது' என்ற பொருளும் உண்டு. அம்மூன்று பொருள்களும் இங்குப் பொருந்தும். .... (௫௩)

தாளால் சகட முதைத்துப் பகடுந்தி *
கீளா மருதிடைபோய்க் கேழலாய் *—மீளாது
மண்ணகலம் கீண்டங்கோர் மாதுகந்த மார்வற்கு *
பெண்ணகலம் காதல் பெரிது. (௫௪)

சகடம்	சகடாஸுரனை	கேழல் ஆய்	வராஹரூபியாய்க் கொண்டு
தாளால்	திருவடியாலே	மீளாது	காரியம் தலைக்கட்டாமல் திரும்பி வருவதில்லையென்று ஸங்கல்பித்துக் கொண்டு சென்று
உதைத்து	உதைத் தொழித்தவனையும்	அகலம் மண் கீண்டு	அகன்ற பூமியை (அண்டபித்தியில் நின்றும்) ஒட்டுவிடுவித் தெடுத்தவனையும்
பகடு	(குவலயாபீட மென்கிற) யானையை		
உந்தி	உதைத்துத் தள்ளினவனையும்		
மருது இடை போய்	மருத மரங்களின் நடுவே தவழ்ந்து சென்று		
கீளா	(அம்மரங்களை) முறிந்துவிழச் செய்தவனையும்		

ஓர் மாது உகந்த மார்வற்கு	ஒப்பற்ற பெரிய பிராட்டியாரை விரும்பி யிருக்கின்ற திரு மார்பையுடையவனாயுமுள்ள எம்பெருமானுக்கு	பெண் அகலம்	பூமிப்பிராட்டியினுடைய திருமேனியிலே
		காதல்	ஆசையானது
		பெரிது	கரை புரண்டிருப்பது.

* * *—நமக்கெல்லாம் சோறு, தண்ணீர், வெற்றிலைபாக்கு மாதர், ஆடையாபரணம், சூது சதுரங்கம் என்னுமிப் பொருள்களே உகப்புக்கு விஷயமாதலால் நம்முடைய வாய்வெருவுதலும் போதுபோக்கும் இப்பொருள்களிலேயே மாறிமாறிநடந்துகொண்டிருக்கும்; இங்ஙனன்றியே 1. "கார்கலந்த மேனியான் கைகலந்த வாழியான், பார்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான்—சீர்கலந்த, சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையின் ஆழ்துயரை, என்னினைந்து போக்குவர் இப்போது" என்கிறபடியே பகவத் குணானுபவத்தாலன்றி வேறொன்றால் போதுபோக்கறியாத ஆழ்வார்கள் மாறிமாறி பகவத்குண சேஷ்டிதங்களைப் பேசுமத்தனையல்லது வேறு எதனைப் பேசுவர்கள்? உலகளந்த சரித்திரத்தை உரைப்பது, வடதளசாயியின் வ்ருத்தாந்தத்தை வாய்வெருவுவது, கண்ணபிரான் கதைகளைக் கூறுவது, இராமபிரான் சரிதைகளை இயம்புவது, மீண்டும் இவற்றையே வகைவகையாகப் பேசுவதாய்க்கொண்டு இவர்கள் போதுபோக்கு மழகை நாம் என்சொல்லவல்லோம் வாய்கொண்டு?

ஸ்ரீக்ருஷ்ணனாக அவதரித்த தான் நந்தகோபர் திருமாளிகையிலே ஒருவண்டியின் கீழ்ப்புறத்திலே தொட்டிலிலிட்டுக் கண்வளர்த்தப்பெற்று (யசோதையும் யமுனை நீராடப்போய்) இருந்த காலத்து, கம்ஸனாலேவப்பட்ட அஸுரனொருவன் அச்சகடத்தில் வந்து ஆவேசித்துத் தன்மேல்விழுந்து தன்னைக்கொல்ல முயன்றதை அறிந்த தான் பாலுக்கு அழுகிற பாவனையில் தன் சிறிய திருவடிகளை மேலே தூக்கியுதைத்து அச்சகடத்தைச் சின்னபின்னமாக்கினான். கம்ஸனாலழைக்கப்பட்டு அவனது அரண்மனையினுட் புகும்போது சீறிவந்த குவலயாபீடமென்னும் மதயானையை மோதி மருப்பொசித்தான். இரட்டை மருதமரங்களினிடையே

1. பெரிய திருவந்தாதி 86.

தவழ்ந்துசென்று அவற்றைக் கீண்டு தள்ளினான். வராஹரூபியாய்த் திருவவதரித்து பூமிப் பிராட்டியை ஹீநஸ்திதியிலிருந்து உத்தரிப்பித்து மார்புறப் புல்கி உவந்தான்—என்று சில பகவத்கதைகளைப் பேசி மகிழ்கிறார்.

பெண்ணகலம் காதல் பேரிது=கீழ் மூன்றடிக்குச் சேர, 'பூமிப்பிராட்டியினிடத்தில் கரைபுரண்ட காதலுடையவனாதலால் * மாசுடம்பில் நீர்வாரா மானமிலாப் பன்றியாய்ப் பிறந்து படாதனபட்டான்' என்று கருத்துக் கொள்ளலாம். அன்றியே, 'எம்பெருமானுக்குப் பெரிய பிராட்டியாரிடத்தில் பெரிதானகாதல் உள்ளது; அவள் நமக்குப் புருஷகார பூதையாகையாலே நமக்கொரு குறையில்லை' என்பதாகவுங் கருத்துக் கொள்ளலாம்.

கீளா—செய்யா என்னும் வாய்பாட் டுடன்பாட் டிறந்தகால வினையெச்சம்; கீண்டு என்றபடி.

பெண்ணகலம்—பெண்ணிடத்தில் என்றுமாம். ... (௫௪)

பெரிய வரைமார்வில் பேராரம் பூண்டு *
கரிய முகிலிடை மின்போல *—திரியுங்கால்
பாணொடுங்க வண்டறையும் பங்கயமே * மற்றவன்றன்
நீணெடுங்கண் காட்டும் நிறம். (௫௫)

பெரிய வரை மார்வில்	பெரிய மலைபோன்ற திருமார்பிலே	நீள் நெடு கண்	நீண்டு பரந்த திருக்கண்களினுடைய
பேர் ஆரம் பூண்டு	பெரிய ஹாரத்தை அணிந்து கொண்டு	நிறம்	நிறத்தை,
திரியுங்கால்	உலாவினால்	பாண் ஒடுங்க வண்டு அறையும் பங்கயமே காட்டும்	பாட்டென்று பேர் பெற்றவையெல்லாம் ஒடுங்கும்படியாக [—அதி மதுரமாக] வண்டுகள் இருந்து பாடப்பெற்ற தாமரைப்பூவே காட்டித்தரும்.
கரிய முகிலிடை மின் போல	காளமேகத்திலே மின்னல் மின்னினாற் போன்றிருக்கும்;		
மற்று	அன்றியும்;		
அவன் தன்	அப்பெருமானுடைய		

* * *—எம்பெருமானுடைய ஆபரணாலங்காரத்திலும் கண்ணழகிலும் ஈடுபட்டு அநுபவித்துப் பேசுகிறார். இரண்டாமடியின்

தனிச்சீர் 'தெரியுங்கால்' என்றும் 'திரியுங்கால்' என்றும் இரு வகைப்பாடமுள்ளது. முந்தின பாடத்தில், எம்பெருமான் பெரிய மலைபோன்ற தனது திருமார்பில் ரத்நஹாரத்தைச் சாத்திக்கொண் டிருக்கும்படியை அநுஸந்தித்தால் காளமேகத்திலே மின்னல் மின்னினாற்போலே யிருக்கும் என்பதாகக் கருத்தாகும். பிந்தின பாடத்தில்—எம்பெருமான் தனது திருமார்பிலே ரத்நஹாரத்தையணிந்து கொண்டு உலாவத் தொடங்கினால் காளமேகத்தில் மின்னல் மின்னினாற்போலே யிருக்கும் என்பதாகக் கருத்தாகும். கரிய திருமார்புக்குக் காளமேகமும் ரத்நஹாரத்திற்கு மின்னலும் ஏற்றவுவமையாம்.

[பாணோங்க இத்யாதி.] பாண்—இசைப்பாட்டு; அது ஓங்கும்படியாக [அதைவிட அதிக மதுரமாக] வண்டுகள் இசைபாடப் பெற்ற தாமரைப்பூப் போலே அவனுடைய திருக்கண்கள் விளங்குகின்றன என்றவாறு. ... . (௫௫)

நிறம் வெளிது செய்து பசிது கரிதென்று *
இறையுருவம் யாமறியோ மெண்ணில் * —நிறைவுடைய
நாமங்கை தானும் நலம்புகழ வல்லளே *
பூமங்கை கேள்வன் பொலிவு. (௫௬)

இறை	ஸர்வேச்வரனுடைய
உருவம்	திவ்யமங்கள விக்ரஹமானது
நிறம்	நிறத்தால்
வெளிது	வெளுத்திருக்குமோ
	(அல்லது)
செய்து	சிவந்திருக்குமோ,
	(அல்லது)
பசிது	பச்சென் றிருக்குமோ,
	(அல்லது)
கரிது	கறுத்திருக்குமோ,
என்று	எவ்வண்ணமா யிருக்குமென்று
எண்ணில்	ஆராயுமிடத்தில்

யாம் அறியோம்	நாம் அறிய மாட்டோம்:
	(இது நிற்க:)
நிறைவு உடைய	ஜ்ஞான சக்திகளில் பூர்த்தியை உடையவளான
நா மங்கை தானும்	ஸரஸ்வதீ தேவியும்
பூ மங்கை கேள்வன்	பூவிற்பிறந்த பெரிய பிராட்டிக்குக் கணவனான எம்பெருமானுடைய
பொலிவு	பூர்த்தியை
நலம் புகழ வல்லளே	நன்றாகப் புகழ சக்தியுடையவளோ?
	(அல்லள்.)

* * *—1. " பாலினீர்மை செம்பொனீர்மை பாசியின் பசும் புறம் போலுநீர்மை பொற்புடைத் தடத்து வண்டுவிண்டுலாம் நீல நீர்மை" என்றும் 2. " நிகழ்ந்தாய் பால் பொன்பசுப்புக் கார்வண்ணம் நான்கும்" என்றும் சொல்லுகிறபடியே எம்பெருமான் ஒவ்வொருயுகத்திலும் ஒவ்வொரு நிறத்தைக் கொண்டிருப்பதாக நூல்கள் கூறுகின்றனவாயினும், 3. " என்றேனும் கட்கண்ணால் காணாத அவ்வுருவை" என்று கட்புலனுக்கு இலக்காக மாட்டாததாகச் சொல்லப்படுகிற எம்பெருமான் திருவுருவத்தின் நிறத்தை நான் ஒன்றுமறியேன்; நானே அறியாதபோது ஸரஸ்வதிதானும் அறிந்து பேசவல்லளோ? ஏனென்னில்? [பூமங்கை கேள்வன் பொலிவு.] மாரீசன் இராவணனுக்கு ஹிதோபதேசம் பண்ணும் போது மர்மமறிந்து சொன்ன சொல் அறியீர்களோ? "அப்ரமேயம் ஹி தத்தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா = அப்ரமேயம் ஹி தத் தேஜோ யஸ்ய ஸா ஜநகாத்மஜா" என்றானே; (அதாவது) இராமனென்பவன் பிராட்டியைக் கைப்பிடித்த பரஞ்சோதியன்றோ? அச்சோதி நெஞ்சாலும் நினைப்பரிதன்றோ என்றானே. ஆகையாலே, பூமங்கை கேள்வனானவனுடைய பொலிவைப்புகழ யாராலாகும்? என்கிறார். ... ... (௫௬)

பொலிந்திருண்ட கார்வானில் மின்னேபோல் தோன்றி *
மலிந்து திருவிருந்த மார்வன் *—பொலிந்த
கருடன்மேல்கொண்ட கரியான் கழலே *
தெருடன்மேல் கண்டாய் தெளி. (௫௭)

திரு	பிராட்டியானவள்,
பொலிந்து இருண்ட கார்	செறிந்து இருளையுடைத்தான கார்காலத்திலுண்டான
வானில்	மேகத்தில்
மின்னே போல் தோன்றி	மின்னல் போல் பிரகாசித்து
மலிந்து இருந்த மார்வன்	பொருந்தியிருக்கப்பெற்ற திருமார்பையுடையனாய்
பொலிந்த கருடன் மேல் கொண்ட	விளங்குகின்ற கருடனால் மேற்கொள்ளப்பட்டவனை

1. திருச்சந்த விருத்தம். 2. நான்முகன் திருவந்தாதி.
3. பெரிய திருவந்தாதி.

கரியான்	கருநிறப் பெருமானுடைய	தெருள்தன் மேல்	ஜ்ஞாநத்திற்கு மேற்பட்டதான பக்திக்கு விஷயமென்று
கழலே	திருவடிகளே	தெளி கண்டாய்	(நெஞ்சே!) தெளிந்திரு.

* * *—கீழ்ப்பாட்டில் "நிறம்வெளிது செய்து பசிது கரிதென்று இறையுருவம் யாமறியோம்" என்று எம்பெருமானுருவத்தைக் கனவிலுங் கண்டறியாதவர்போல ஆழ்வார் பேசினபேச்சு எம்பெருமானது திருச்செவியில் விழாதிருக்குமோ? விழுந்ததாகில் இச் சொல்கேட்டுப் பொறுத்திருக்க வல்லனோ அவன்? "திருக்கண்டேன் பொன்மேனிகண்டேன் திகழுமருக்க னணிநிறமுங்கண்டேன், செருக்கிளரும் பொன்னாழிகண்டேன் புரிசங்கங் கைக்கண்டேன், என்னாழிவண்ணன்பா லின்று" என்று முதலடியில் தானே எல்லாங்கண்டதாகப் பேசின ஆழ்வார் திருவாக்கில் "இறையுருவம் யாமறியோம்" என்ற சொல் வெளிவந்தால் இஃது எம்பெருமானுக்கு ஸஹ்யமாயிருக்குமோ? உடனே அரைகுலையத் தலைகுலைய ஓடிவந்து பெரிய திருவடியின்மேல் வீற்றிருந்து காட்சிதந்தருளினன்; கண்ணாரக்கண்டு மகிழ்ந்து பேசுகிற பாசுரம்போலு மிது. கார்காலத்தெழுகின்ற கார்முகிலில் மின் மின்னினாற்போலே கரியதிருமேனியில் பொன்னிறத்தளான பெரிய பிராட்டி விளங்கப்பெற்றுக் கருடன்மீது ஸேவைஸாதிக்கின்ற பெருமானுடைய திருவடிகளிலேயே நெஞ்சே! நீ பக்திபண்ணு என்று திருவுள்ளத்திற்கு உபதேசித்தாராயிற்று நெஞ்சே! என்னும் விளி வருவித்துக்கொள்க

தெருள்தன் மேல்கண்டாய்—'தெருள்' என்று ஜ்ஞானத்திற்குப் பெயர்; 'கர்மஜ்ஞாந பக்திப்ரபத்திகள்' என்ற அடுக்கிலும் 'பரபக்தி பரஜ்ஞாந பரமபக்திகள்' என்ற அடுக்கிலும் ஜ்ஞாநத்திற்கு மேற்படியாக பக்தி சொல்லப்பட் டிருப்பதால், இங்கே தெருள்தன்மேல் என்றது பக்தியைச் சொன்னபடியாய், அவனது திருவடிகளை பக்திக்கு விஷயமாக்கு என்றதாம். அன்றியே, பக்தியும் ஜ்ஞாநத்தின் அவஸ்தா விசேஷமேயாதலால், தெருள் என்பதற்கே பக்தியென்று பொருள்கொண்டு, தெருள்தன்மேல்—பக்தி

யினாலே, கழல்கண்டாய்—திருவடிகளை (நெஞ்சே !) காணப் பெற்றாய்; தேளி—இனிமேல் கலக்கம்நீங்கித் தெளிந்திரு என்பதாகவு முரைக்கலாம். .... (௬௭)

தெளிந்த சிலாதலத்தின் மேலிருந்த மந்தி *
அளிந்த கடுவனையே நோக்கி *—விளங்கிய
வெண்மதியம் தாவென்னும் வேங்கடமே * மேலொருநாள்
மண்மதியில் கொண்டுகந்தான் வாழ்வு. (௬௮)

தெளிந்த	ஸ்வச்சமாயிருக்கிற
சிலாதலத்தின் மேல் இருந்த மந்தி	கற்பாறையின் மீது இருக்கும் பெண் குரங்கானது
அளிந்த கடுவனை நோக்கி	ஸ்நேஹமுள்ள ஆண் குரங்கை நோக்கி
விளங்கிய வெண் மதியம் தா என்னும் வேங்கடம்	'விளங்குகின்ற வெளுத்த சந்திரனை(ப் பிடித்துக்) கொடு' என்று சொல்லும்படி யிருக்கிற திருவேங்கடம்
மேல் ஒருநாள்	பண்டொரு காலத்தில்
மண்	பூமியை
மதியின்	தனது புத்தி சாதுரியத்தினால்
கொண்டு	(மாவலியிடத்தில்) பெற்றுக்கொண்டு
உகந்தான்	திருவுள்ள முவந்த ஸர்வேச்வரன்
வாழ்வு	வாழுமிடம்.

* * *—கீழ்ப்பாட்டில் கருடன் மேற்கொண்ட கரியானாய் ஸேவை தந்தருளினவன் 'என்னைத் திருவேங்கடமலையிலே நித்யமாகக் கண்டுகொண்டிரும்' என்று சொல்லி மறைந்திடவே திருமலையிலே மண்டுகிறார். திருமலையின் சிகரம் சந்திரமண்டலத்தளவும் ஓங்கி யிருக்கின்றதென்ற அதிசயோக்திக்காக ஒரு வர்ணனை கூறுகின்றார். திருமலையில் கற்பாறையின்மீது பெண்குரங்கு உட்கார்ந்து கொண்டிருக்கின்றது; அதனருகில் ஆண்குரங்கும் 'நமது பேடை நம்மை ஏவிக் காரியங்கொள்வது எப்போதோ' என்று அதன் கட்டளையை எதிர்பார்த்துக் கொண்டு இராநின்றது; அதனை நோக்கிப் பெண்குரங்கானது 'முகத்தினழகைப் பார்த்துக் கொள்வதற்குக் கண்ணாடி கொண்டுவந்து தா' என்பாரைப்போலே 'பூர்ண சந்திரனைப் பறித்துத் தா' என்கிறதாம். இங்ஙனே சொல்

லும்படியாக ஓங்கியிருந்துள்ள திருமலையே ஓங்கியுலகளந்த வுத்தமன் வாழுமிடம் என்றாராயிற்று.

சிலாதலம்—வடசொல். மந்தி—பெண்குரங்கு. கடுவன்—ஆண்குரங்கு. மண்மதியிற் கொண்டுகேந்தான்—கேட்டார் கேட்டபடியே தானம் பண்ணுவதென்று விரதம்பூண்டு மஹா தார்மிகனாயிருக்கிற மாவலியினிடத்தில் யாசகத் தொழில்கொண்டே காரியம்ஸாதிக்க வேணுமென்று நினைத்துச்சென்றது புத்தி சாதுரியமென்க. (௫௮)

வாழும் வகையறிந்தேன் மைபோல் நெடுவரைவாய் *
தாழு மருவிபோல் தார்கிடப்ப *—சூழும்
திருமா மணிவண்ணன் செங்கண்மால் * எங்கள்
பெருமா னடிசேரப் பெற்று. (௫௯)

மை போல் நெடு வரை வாய்	மைபோன் றிருண்டு பெரிதான மலையிடத்திலே
தாழும்	இருபக்கமும் தாழ விழுந்து பாய்கின்ற
அருவி போல்	அருவிபோலே
தார் கிடப்ப	மாலை சாத்தப் பட்டிருக்க, (அதிலே யீடுபட்டு)
சூழும்	ஒருக்ஷணமும் விட்டுப்பிரியாமல் வளைத்துக் கொண்டிருக்கிற
திரு	பிராட்டியை யுடையவனும்
மா மணி வண்ணன்	நீலமணிபோன்ற நிறத்தை யுடையவனும்
செம் கண் மால்	செந்தாமரை போன்ற திருக் கண்களை யுடைய பெரியோனுமான
எங்கள் பெருமான்	எம்பெருமானுடைய
அடி	திருவடிகளை
சேர பெற்று	அணுகப் பெற்றதனால்
வாழும் வகை அறிந்தேன்	உஜ்ஜீவிக்கும் வழி தெரிந் தவனானேன்.

* * *—எம்பெருமானுடைய கரிய திருமேனியிலே செந்நிறமான ரத்னங்களால் அமைந்த ஹாரங்கள் சாத்தப்பட் டிருப்பதானது அஞ்சனகிரியிலே அருவிகள் தாழ விழுந்தாற்போலே யிருக்கின்றனவாம். அவ்வழகிலே யீடுபட்டு அத்திருமார்பை ஒரு நொடிப்பொழுதும் விடமாட்டாதே சூழ்ந்து கிடக்கிறாள் பெரிய பிராட்டி; அப்படிப்பட்ட செங்கண்மாலுடைய திருவடிகளை நான்

சேரப் பெற்றதனால் ‘இதுவே நமக்கு உஜ்ஜீவநம்’ என்று துணிந்தேன். இனி விஷயாந்தரங்களில் அவகாஹித்துக் கெட்டுப்போக மாட்டேன்—என்றாராயிற்று.

மலையருவிகள் வெண்ணிறமாகவும் பெருகுவதுண்டு; அங்குள்ள தாதுக்களுடன்கூடிச் செந்நிறமாகவும் பெருகுவதுண்டு; இங்கே ‘அருவிபோல்தார் கிடப்ப’ என்று பொதுப்படையாகக் கூறியிருப்பதனால் எதையேனுங் கொள்ளலாம். வெண்ணிறமான அருவியென்றால் அப்போது தார் என்றது முக்தாஹாரத்தைச் சொன்னபடியாம்; செந்நிறமான அருவியென்றால் மாணிக்கங்களழுத்தின ஹாரத்தைச் சொன்னபடியாம்.

சிசுபாலவத மஹாகாவ்யத்தில் முதல் ஸர்க்கத்தில் “[illegible] வக்ஷ:.” என்றுள்ள ச்லோகம் இப்பாட்டின் முன்னடிகட்குப் பொருத்தமாக நினைக்கலாகும்.

“எங்கள் பெருமானடி சேரப்பெற்று வாழும்வகையறிந்தேன்” என்று அந்வயம். ... ... (௯௯)

பெற்றம் பிணைமருதம் பேய்முலை மாச்சகடம் *
முற்றக்காத் தூடுபோ யுண்டுதைத்து *—கற்றுக்
குணிலை விளங்கனிக்குக் கொண்டெறிந்தான் * வெற்றிப்
பணிலம் வாய்வைத்துகந்தான் பண்டு. (௱)

பெற்றம்	பசுக்களை
முற்ற காத்து	ஒன்று தப்பாமல் ரக்ஷித்தவனும்
பிணை மருதம் ஊடு போய்	இரட்டை மருத மரங்களினிடையே சென்றவனும்
பேய் முலை உண்டு	பூதனையின் முலையை உண்டவனும்
மா சகடம் உதைத்து	பெரிய சகடத்தை உதைத் தொழித்தவனும்
கன்று குணிலை கொண்டு	கன்றாகிய எறிதடியைக் கொண்டு
விளங்கனிக்கு எறிந்தான்	விளாம்பழத்தின் மீது எறிந்தவனுமுள்ள எம்பெருமான்
பண்டு	முன்பொரு காலத்தில்
வெற்றி பணிலம்	ஜய சீலமான சங்கை
வாய் வைத்து	வாயிலே வைத்து ஊதி
உகந்தான்	மகிழ்ந்தான்,

* * *—இப்பாட்டின் முன்னடிகளில், பெற்றம் முதலிய பெயர்ச்சொற்கள் 'காத்து' முதலிய வினைச்சொற்களை முறையே சென்று இயைதலால் முறைநிரனிறையாம்; இது வடமொழியில் யதாஸங்க்யாலங்காரம் என்றும், தென்மொழியில் நிரனிறையணி என்றும் அலங்கார சாஸ்த்ரிகள் கூறுவர். முதல் திருவந்தாதியிலுள்ள (54) "அரவமடல்வேழம் ஆன்குருந்தம் புள்வாய், குரவை குடமுலை மற்குன்றம்—கரவின்றி, விட்டிறுத்து மேய்த்தொசித்துக் கீண்டு கோத்தாடி, உண்டட்டெடுத்த செங்கணவன்" என்ற பாசுரம் இத்தகையதே.

"திவத்திலும் பசுநிரை மேய்ப்புவத்தி செங்கனிவாயெங்களாயர் தேவே!" என்கிறபடியே, நித்யஸூரிகளுக்கு நிர்வாஹகனாயிருக்கு மிருப்பிலுங்காட்டில் பசுக்களை மேய்க்குந் தொழிலையே பரமபோக்யமாகக் கொண்டவன்; இரட்டை மருதமரங்களினிடையே தவழ்ந்துசென்று வீரவிளையாட்டுச்செய்தவன்; பேய்ச்சியின் முலையைச் சுவைத்துயிருண்டவன்; பாலுக்கு அழுகிற பாவனையிலே அஸுராவிஷ்டமான சகடத்தை உதைத்துத் தள்ளினவன்; கன்றாயும் விளாமரமாயும் இரண்டு அஸுரர்கள்வந்து நிற்க, முள்ளைக்கொண்டே முள்ளைக் களைவதுபோல இரண்டையும் ஒருசேர முடித்தவன்; திருப்பவளத்திலே ஸ்ரீபாஞ்சஜந்யத்தைவைத்து ஊதி வெற்றியைத் தெரிவிப்பவன்—என்று சில பகவத் கதைகளை அநுபவித்துப் பேசினாராயிற்று.

கண்ணபிரானையன்றி மற்று எவனையும் கனவிலுங் கருதாதிருந்த ருக்மிணிப்பிராட்டிக்கு சிசுபாலனோடு விவாஹம் நடப்பதாகக் கோடித்து ஸித்தமாயிருந்த ஸமயத்தில் கண்ணபிரானது வரவை எதிர்பார்த்திருந்த அப்பிராட்டியின் நெஞ்சு முறிந்துபோய் இனிநாம் உயிர்துறப்பதே நல்லுபாயமென்று தீர்மானித்திருந்த க்ஷணத்தில் கண்ணபிரான் பதறி ஓடிவந்து புறச்சோலையிலே நின்று தனது ஸ்ரீபாஞ்சஜந்யத்தை ஊத, அதனோசையானது அந்த ருக்மிணிப்பிராட்டியின் செவியிற் புகுந்து ஆனந்தத்தை விளைவித்ததென்கிற கதையை ஈற்றடிக்குப் பொருத்தமாக அநுஸந்திக்கலாம். அன்றி, பாரதப்போரில் செய்த சங்கொலியையுங் கொள்ளலாம்.

புணிலம்—சங்கு. ... ... (௬0)

பண்டெல்லாம் வேங்கடம் பாற்கடல் வைகுந்தம் *
கொண்டங் குறைவாற்குக் கோயில்போல் *—வண்டு
வளங்கிளரும் நீள்சோலை வண்பூங் கடிகை *
இளங்குமரன்றன் விண்ணகர். (௬௧)

வைகுந்தம்	பரமபதத்தை
கொண்டு	இருப்பிடமாகக் கொண்டு
அங்கு	அவ்விடத்திலே
உறைவாற்கு	வாஸம்பண்ணுமெம் பெருமானுக்கு,
பால் கடல்	திருப்பாற்கடலும்
வேங்கடம்	திருமலையும்
வண்டு வளம் கிளரும் நீள் சோலை	வண்டுகளின் திரள் மிக்கிருக்கிற பரந்தசோலைகளையுடைத்தாய்
வண்	அழகியதாய்
பூ	போக்யமான
கடிகை	திருக்கடிகைக் குன்றும்
இள குமரன் தன் விண்ணகர்	நித்யயுவாவான அவனுடைய தன்னதான திருவிண்ணகரும்
	(ஆகிய இத்திருப்பதிகளெல்லாம்)
பண்டு எல்லாம்	என்னை விஷயீகரிப்பதற்கு முன்பெல்லாம்
கோயில் போல்	கோயில்களாக இருந்தன போலும்.

[இப்போதோவென்னில், என்னெஞ்ச மொன்றே அவனுக்குக் கோயிலாயிருக்கிறது என்பது உள்ளுறை.]

* * *—இப்பாட்டை இரண்டுவகையாக நிர்வஹிப்பதுண்டு. அவற்றுள் முதல்வகை எங்ஙனேயெனின்; ஸ்ரீ வைகுண்டத்தை வாஸஸ்தானமாகவுடைய எம்பெருமானுக்குத் திருப்பாற்கடல் திருவேங்கடம் திருக்கடிகை முதலிய திருப்பதிகள் முன்பெல்லாம் கோயிலாக அமைந்திருந்தன; (அதாவது—என்னுடைய நெஞ்சகம் அவனுக்குக் கோயிலாகக் கிடைப்பதற்குமுன்பு.) இப்போதோ வென்னில், அவன் விரும்பியெழுந்தருளி யிருப்பதற்குப் பாங்காக என்னுடைய நெஞ்சகம் அவனுக்கு ஆலயமாகக் கிடைத்துவிட்டதனால் அத்திருப்பதிகளிற் பண்ணுமாதரத்தை என்னெஞ்சிலே பண்ணிக்கொண்டு கிடக்கிறான் என்பதாம். மூலத்தில் 'பண்டெல்லாம்' என்றவளவுக்கு இவ்வளவு விசாலமான கருத்துக்கொள்வது சிரமமென்று தோன்றினால், வேறொருவகையான நிர்வாஹம் காட்டுவோம்;—ஆழ்வார் இப்பாட்டால் திருக்கடிகைக்குன்றைச்

சிறப்பித்துக் கூறுவதாகக்கொள்க. திருப்பாற்கடல் திருவேங்கடம் முதலிய திருப்பதிகளிற் காட்டிலும் * வண்டுவளங்கிளரும் நீள் சோலை வண்பூங்கடிகையிலே அதிகமான ஆதரத்தைப் பெருக்கி அதொன்றையே கோயிலாகக் கொண்டிருக்கிறானென்பதாகக் கொள்க.

கடிகை—தொண்டைநாட்டுத் திருப்பதிகளுள் ஒன்றாய், 'சோளஸிம்ஹபுரம்' என்று ப்ரஸித்தமாக வ்யவஹரிக்கப்பட்டு வரும் திருப்பதி. வடமொழியில் "வடிகா" என்னுஞ் சொல் ஒரு நாழிகையென்ற பொருளுடையது: இத்திருப்பதியில் ஒரு நாழிகை வாஸம்பண்ணப் பெற்றாலும் முக்தி எளிதாகுமென்று காட்டுதற்காக இத்திருநாமமாயிற்றென்ப. .... (௬௧)

விண்ணகரம் வெஃகா விரிதிரைநீர் வேங்கடம் *
மண்ணகரம் மாமாட வேளுக்கை *—மண்ணகத்த
தென்குடந்தை தேனார் திருவரங்கம் தென்கோட்டி *
தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு. (௬௨)

விண்ணகரம்	திருவிண்ணகரமும்
வெஃகா	திருவெஃகாவும்
விரி திரை நீர் வேங்கடம்	விரிந்து அலையெறிகிற நீர்வளம் பொருந்திய திருமலையும்
மண் நகரம்	பூமியிலுண்டான வைகுந்தமாநகர் போன்ற
மா மாடம் வேளுக்கை	பெரிய மாடங்களையுடைத்தான திருவேளுக்கையும்
மண் அகத்த தென் குடந்தை	பூமியிலுண்டான அழகிய திருக்குடந்தையும்
தேன் ஆர் திரு அரங்கம்	தேன் (வெள்ளமிடுகிற சோலைகள்) பொருந்திய திருவரங்கமாநகரும்
தென் கோட்டி	தென் திருக்கோட்டியூரும்
	(ஆகிய இத்திருப்பதிகள்)
தன் குடங்கை	தனது உள்ளங்கையாலே
நீர் ஏற்றான்	(மாவலிபக்கல்) உதக தானம் பெற்ற பெருமான்
தாழ்வு	தங்குமிடங்களாம்.

* * *—'ஒப்பிலியப்பன் ஸந்நிதி' என்கிற திருவிண்ணகர், 'யதோக்தகாரி ஸந்நிதி' என்கிற திருவெஃகா, திருமலை, 'ஆளழகிய சிங்கர்ஸந்நிதி' என்கிற கச்சித்திருவேளுக்கை, திருக்குடந்தை,

திருவரங்கம் பெரியகோயில், திருக்கோட்டியூர் ஆகிய இத்திருப்பதிகளெல்லாம் எம்பெருமான் தங்குமிடங்கள் என்று சில திருப்பதிகளைப்பேசி அநுபவித்தாராயிற்று.

ஈற்றடியில் ‘தன்குடங்கை நீரேற்றான் தாழ்வு’ என்றருளிச் செய்ததன் கருத்து—மஹாபலிபக்கல் யாசகனாகப் போகும்போது எவ்வளவு ஸௌலப்யமும் ஸௌசீல்யமும் தோன்றிற்றோ அவ்வளவு சீலம் இத்திருப்பதிகளிலும் தோன்றும்படி யிருக்கிறானென்பதாம்.

தாழ்வு—தாழ்ச்சிதோற்ற இருக்குமிடமென்கை. (௬௨)

தாழ்சடையும் நீண்முடியு மொண்மழுவும் சக்கரமும் *
சூழரவும் பொன்னாணும் தோன்றுமால் *—சூழும்
திரண்டருவி பாயும் திருமலைமே லெந்தைக்கு *
இரண்டுருவு மொன்றா யிசைந்து. (௬௩)

தாழ் சடையும்	தாழக் கட்டின ஜடையும்
நீள் முடியும்	நீண்ட திருவபிஷேகமும்
ஒண் மழுவும்	அழகிய மழுவென்னு மாயுதமும்
சக்கரமும்	திருவாழி யாழ்வானும்
சூழ் அரவும்	சுற்றிலும் அணிந்துள்ள நாகாபரணமும்
பொன் நாணும்	பொன்னரைநாணு மாய்க்கொண்டு
இரண்டு உருவும்	ஒன்றுக்கொன்று சேராச் சேர்த்தியா யிருக்கிற இரண்டு வடிவும்
சூழும் திரண்டு அருவி பாயும் திரு மலைமேல் எந்தைக்கு	நாற்புறமும் திரள் திரளாக அருவிகள் பெருகப் பெற்ற திரு மலைமேலுள்ள அப்பனுக்கு
ஒன்று ஆய் இசைந்து தோன்றும்	ஒரு வடிவமாய் அமைந்துவிளங்கா நின்றது;
ஆல்	ஆச்சரியம் !.

* * *—எம்பெருமான் செய்தருளின பல அவதாரங்களில் சங்கர நாராயணாவதார மென்பதுமொன்று; இது ஹரிஹராவதார மென்றும் சொல்லப்படும். பாதிவடிவம் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி யாகவும் பாதிவடிவம் பரமசிவமூர்த்தியாகவும் கொண்டதாமிது. எம்பெருமான் கொண்ட கோலங்களெல்லாம் பகவத்பக்தர்கட்கு உத்தேச்யமாகையாலே இவ்வுருவந்தன்னையும் ஆழ்வார்கள் அநுஸந்தித்துப் பாசுரங்கள் பேசுவதுண்டு.

"திருமலைமே லெந்தைக்கு இரண்டுருவு மொன்றாயிசைந்து தோன்றும்" என்று இங்கு ஆழ்வா ரருளிச்செய்திருப்பது கொண்டு இதற்குப் பலர் பொருள்கொள்வ தெங்ஙனேயென்னில்; திருவேங்கடமுடையானுக்குச் சடையுமுண்டு, கிரீடமுமுண்டு; மழுவுமுண்டு, சக்கரமுமுண்டு; நாகாபரணமுமுண்டு பொன்னாணு முண்டு—என்றிங்ஙனே பொருள்கொள்வர். இது பொருந்தாது; திருவேங்கடமலையில் அர்ச்சையாக எழுந்தருளியிருக்கு மெம் பெருமான் பக்கல் தாழ்சடையுமில்லை, ஒண்மழுவுமில்லை, சூழரவு மில்லை; நீண்முடியும் சக்கரமும் பொன்னாணுமேயுள்ளன. ஆகில் "திருமலைமேலெந்தைக்கு இரண்டுருவு மொன்றாயிசைந்து தோன் றும்" என்றது எங்ஙனே சேருமென்னில்; நன்கு சேரும்; திரு வேங்கடமுடையானாக ஸேவைஸாதிக்கும் திருமலையப்பன்றானே ஒரு ஸமயத்தில் இரண்டுருவையும் ஒன்றாயிசைத்துக்கொண்டு தோன்றினவன்-என்றபொருளே இதிலடங்கியுள்ளதாம். இதற்கு ஒன்றிரண்டு உதாரணங்களும் காட்டுவோம்;—திருப்பள்ளியெழுச் சியில்—"மாமுனி வேள்வியைக்காத்து அவபிரதமாட்டிய அடுதிற லயோத்தி யெம்மரசே! அரங்கத்தம்மா! பள்ளியெழுந்தருளாயே" என்கிறார். இதனால் திருவரங்கத்தில் சேஷசயனத்தில் பள்ளி கொண்டிருக்கும் அழகிய மணவாளன்றானே விச்வாமித்ர முனிவ னுடன் சென்று வேள்வியைக் காத்துவந்தான் என்றதாகுமோ? அந்த ஸ்ரீராமபிரானும் இந்த அழகிய மணவாளனும் ஏகதத்துவம் என்றபடியா மத்தனையன்றோ? இன்னமும், பூதத்தாழ்வார் "அத்தியூரான் புள்ளையூர்வான் அணிமணியின் துத்திசேர் நாகத் தின்மேல் துயில்வான்" என்றருளிச் செய்கிறார்; இதனால் கச்சி நகர்ப் பேரருளாளப் பெருமாள் திருவனந்தாழ்வான்மீது பள்ளி கொண்டிருக்கிறார் என்றதாகுமோ? நாகத்தின்மேல் துயில்கொள் ளுமெம்பெருமானும் அத்தியூரானும் ஏகதத்துவம் என்றபடியா மத்தனையன்றோ. அப்படியே இங்கும், சங்கரநாராயணாவதார மெடுத்த பெருமானும் திருமலைமேலெந்தையும் ஏகதத்துவம் என்ற தாகுமத்தனையன்றி வேறில்லை. ஹரிஹரரூபத்தால் காட்டியரு ளின சீலம் திருவேங்கடமுடையான் பக்கலில் பொலிகின்றது என்று அநுபவித்துச் சொன்னாரென்க.

ஸுந்தரபாஹுஸ்தவத்தில் திருமாலிருஞ்சோலை யழகருடைய திவ்யாவயவங்களை அநுபவித்துப் பாசுரமிட்டுப் பேசாநின்ற கூரத்தாழ்வான்-"யஶோதயா ஸஸம்ப்ரமமுந்நமித ஸ்வஸாங்குலி ணாங்குலிதள ஸுசொர்புவத்ராவலி ஹஸ்தந்யாஸதத்க்ஷணம். விராஜதே........ஸுந்தரபாஹோ:" [யசோதைப்பிராட்டியானவள் தனது கைவிரல் நுனியால் கண்ணபிரானது மோவாய்க் கட்டையை நிமிர்த்து முத்தமிட்டாளே, அதனாலுண்டான ஹர்ஷம் இன்றைக்கும் இடையறாமல் இவ்வழகருடைய திருக்கபோலங்களிலே திகழாநின்றது] என்கிறார். இப்புடைகளிலே பலபல ஸ்ரீஸூக்திகளுண்டு. அங்ஙனமே யிங்கும் கொள்க ... (சுங)

இசைந்த வரவமும் வெற்பும் கடலும் *
பசைந்தங் கமுது படுப்ப *—அசைந்து
கடைந்த வருத்தமோ கச்சி வெஃகாவில் *
கிடந்திருந்து நின்றதுவு மங்கு. (சுச)

இசைந்த	கடைகயிறாகக் கொள்வதற்குத் தகுதியான
அரவமும்	வாஸுகிநாகமும்
(இசைந்த)	மத்தாக நாட்டுவதற்குத் தகுதியான
வெற்பும்	மந்தரபர்வதமும்
(இசைந்த)	தாழியாக்குவதற்குத் தகுதியான
கடலும்	கடலும் (ஆகிய இம் மூன்றையும்)
பசைந்து	ஒன்றோடொன்று ஸம்பந்தப் படுத்தி
அங்கு	அந்தக்கடலிலே
அமுது	அம்ருதமானது
படுப்ப	உண்டாம்படி
அசைந்து	அலைச்சல்பட்டு
கடைந்த வருத்தமோ	கடைந்ததனாலுண்டான ஆயாஸத்தினாலோ
கச்சி	காஞ்சீபுரத்திலுள்ள
வெஃகாவில்	திருவெஃகாவில்
கிடந்து	சயனித்துக் கொண்டும்
அங்கு	அக்காஞ்சீபுரத்தில் (திருப்பாடகத்தில்)
இருந்து	வீற்றிருந்தும் (திருவூரகத்தில்)
நின்றதுவும்	நின்று கொண்டும் இருப்பது ?

* * *—தன்னை விரும்பாதே உபயோகமற்ற க்ஷுத்ரபலன்களை விரும்புமவர்கட்கும் எம்பெருமான் உடம்புநோவக் காரியஞ் செய்து பயனளிப்பவன் என்பதை, தேவர்கட்குக் கடல்கடைந்து

அமுதமளித்த வரலாறுகொண்டு அநுஸந்தித்து உள்குழைகின்றார். பிரானே ! இடமும்வலமுமாக அசைந்தசைந்து கடல்கடைந்ததனாலுண்டான ஆயாஸத்தினால்தானோ கச்சித் திருப்பதிகளிலே கிடப்பதும் இருப்பதும் நிற்பதுமாகப் படுகிறாய் ? என்கிறார்.

கச்சிவெஃகாவில் சயனிப்பது மாத்திர முண்டேயன்றி நிற்பது மிருப்பதும் அங்கில்லையே ; அப்படியிருக்க "கச்சிவெஃகாவில் கிடந்திருந்து நின்றதுவுமங்கு" என்று கிடத்தலிருத்தல் நிற்றல் மூன்றும் வெஃகாவிலே நிகழ்வனவாக அருளிச்செய்தது எங்ஙனே ? என்று சங்கை பிறக்கும் ; பிரகரணத்திற்குப் பொருத்தமாக, கச்சி என்ற சொல்லால் பாடகத்தையுமூரகத்தையும் சேர்த்து அநுஸந்தித்துக்கொள்ளவேணு மென்பதே ஆழ்வார் திருவுள்ளமாதலின் ஒரு குறையுமில்லை. ["நின்றதெந்தையூரகத்து இருந்ததெந்தை பாடகத்து, அன்று வெஃகணைக்கிடந்தது" என்பது திருச்சந்த விருத்தம்.]

இப்பாட்டில் மற்றுமோர் சங்கை பிறக்கலாம்: உலகத்தில் சிரமமுண்டானால் அதற்குப் பரிஹாரமாகச் சயனித்துக்கொள்வதுண்டு ; 'இங்ஙனே சயனித்தருள்வது இன்ன ஆயாஸந்தீரவோ?' என்று கேட்பது பொருந்தும் ; திருமழிசைப்பிரான் திருச்சந்த விருத்தத்தில் "நடந்த கால்கள் நொந்தவோ? நடுங்கஞால மேனமாய், இடந்த மெய்குலுங்கவோ விலங்குமால்வரைச் சுரம், கடந்த கால் பரந்த காவிரிக்கரைக் குடந்தையுள் கிடந்தவாறு" என்றும், நம்மாழ்வார் திருவாய்மொழியில் "கொடியார்மாடக் கோளூரகத்தும் புளிங்குடியும், மடியாதின்னே நீ துயில் மேவி மகிழ்ந்ததுதான், அடியாரல்லல் தவிர்த்தவசவோ அன்றேலிப்படிதான் நீண்டு தாவிய அசவோபணியாயே?" என்றும் அருளிச் செய்தவை போல இவ்வாழ்வாரும் "அசைந்து கடைந்த வருத்தமோ கச்சி வெஃகாவில் கிடப்பது?" என்றருளிச் செய்வதன்றோ பொருந்தும் ; "இருந்து நின்றதுவுமங்கு" என்றது எதுக்கு? சிரமத்தினால் கிடத்தலுண்டேயன்றி இருத்தலும் நிற்றலும் ச்ரமகார்யமன்றே என்று சிலர் சங்கிப்பர்கள் ; கேண்மின் ; இங்கு "அசைந்து கடைந்த வருத்தமோ?" என்றிருத்தலால் ஆடியாடி அசைந்தசைந்து கடைந்ததனாலுண்டான ஆயாஸம் தீர்வதற்காக நிற்கவுமாம் இருக்கவுமாம் கிடக்கவுமாம், ... (கூச)

அங்கற் கிடரின்றி யந்திப் பொழுதத்து *
மங்க விரணியன தாகத்தை *—பொங்கி
அரியுருவமாய்ப் பிளந்த வம்மா னவனே *
கரியுருவம் கொம்பொசித்தான் காய்ந்து. (௫௫)

அங்கற்கு	பிள்ளையான ப்ரஹ்லாதனுக்கு	பிளந்த	கிழித்தொழித்த
இடர் இன்றி	ஒருதுன்பமும் வாராதபடி	அம்மான் அவனே	அப்பெருமானே
அந்தி பொழுதத்து	ஸாயங்காலத்தில்	காய்ந்து	சீறி
இரணியனது	ஹிரண்யனுடைய	கரி உருவம்	கறுத்தவுருவத்தை யுடைத்தாயிருந்த குவலயா பீடத்தினுடைய
ஆகத்தை	மார்பை		
மங்க	அழிந்து போம்படியாக	கொம்பு	தந்தத்தை
அரி உருவம் ஆய் பொங்கி	நரஸிம்ஹரூபியாய்க் கிளர்ந்து	ஒசித்தான்	முறித்துப் போட்டான்.

* * *—நரஸிம்ஹாவதாரம் செய்தருளினவனும் ஸ்ரீ க்ருஷ்ணாவதாரம் செய்தருளினவனும் ஒருவனே யென்கிறார்.

அங்கற்கு இடரின்றி=வடமொழியில், மகனை 'ஆத்மஜன்' என்று சொல்வதுபோலத் தமிழில் அங்கன் என்கிறது; அங்கத்திலிருந்து தோன்றினவன் என்று பொருள்: எனவே ஹிரண்யபுத்ரனை ப்ரஹ்லாதாழ்வானைச் சொல்லிற்றாயிற்று. அவனுடைய இடர் தீர்வதற்காக அரியுருவமானான் என்கையாலே, எம்பெருமான் தன் திறத்திலே ஆஸுரப்ரக்ருதிகள் எத்தனை அபசாரப்பட்டாலும் அதனால் சிறிதும் திருவுள்ளம் சீறமாட்டான்; தன்னடியவர் பக்கல் அபசாரப்படுமளவில் அவ்வபராதிகளைப் பங்கப்படுத்தியே தீருவன் என்கிற அர்த்தம் வெளியாகிறது.

"ஈச்வரன் அவதரித்துப் பண்ணின ஆனைத் தொழில்களெல்லாம் பாகவதாபசாரம் பொறாமையென்று ஜீயர் அருளிச்செய்வர்" என்று ஸ்ரீவசநபூஷணத்தில் ஸ்ரீஸூக்தி. அதாவது—ஸங்கல்ப மாத்திரத்தாலே எல்லாவற்றையும் நிர்வஹிக்கவல்ல ஸர்வ சக்தியான ஸர்வேச்வரன் தன்னையழியமாறி இதர ஸஜாதீயனாயவதரித்துக் கைதொடனாய் நின்று செய்த ஹிரண்யராவணாதி நிரஸநரூப

மான அதிமாநுஷ க்ருத்யங்களெல்லாம்-ப்ரஹ்லாதன் மஹர்ஷிகள் முதலான பாகவதர் திறத்தில் அவ்வவர் பண்ணின அபசாரம் ஸஹியாமையாலே யென்று நஞ்சீய ரருளிச்செய்வராம்.

அஸுர ராக்ஷஸர்களாலே தனக்கு நேரும் இடர்களைக் கணிசிக்கமாட்டான் எம்பெருமான்; அடியார்க்கு ஓரிடர் நேர்ந்தால் அதனை உடனே பரிஹரிக்கப் பாடுபடுவன் என்க: இது தோன்றவே இங்கு 'அங்கற்கு இடரின்றி' எனப்பட்டது. [இடரின்றி= இடரில்லாமலிருக்கும் பொருட்டு.] ஈற்றடியில், "கரியின் கொம்பொசித்தான்" என்றாலே போதுமே; 'கரியுருவம்' என்றதென்? என்னில்; மேலெழுப்பார்வைக்கு அது யானையாயிருந்த தத்தனை; உண்மையில் அஸுரவடிவேயாம் அது-என்ற கருத்தை வெளியிடுதற்கென்க. உருவத்தினால் கரியாயிருந்த [யானையாயிருந்த] விலங்கின் கொம்பை முறித்தவன் என்றபடி. கரீ—வடசொல்: துதிக்கையுடையதென்று காரணக்குறி. இனி, கரியென்றதைத் தமிழ்ச் சொல்லாகவே கொண்டு உரைக்கவுமாம்: (பதவுரை காண்க.) (௪௫)

காய்ந்திருளை மாற்றிக் கதிரிலகு மாமணிகள் *
ஏய்ந்த பணக்கதிர்மேல் வெவ்வுயிர்ப்ப * — வாய்ந்த
மதுகைடபரும் வயிறுருகிமாண்டார் *
அதுகேடவர்க் கிறுதி யாங்கு. (௪௬)

காய்ந்து	சீறி
இருளை மாற்றி	இருளைப் போக்கி
கதிர் இலகு	ஒளிவிடாநின்றுள்ள
மா மணிகள்	சிறந்த ரத்னங்கள்
ஏய்ந்த	பொருந்தியிருக்கிற
பணம்	(தன்னுடைய) படங்களினுடைய
கதிர் மேல்	ஒளிக்கு மேலே
(திருவனந்தாழ்வான்)	
வெவ்வுயிர்ப்ப	பெருமூச்சுவிட,
வாய்ந்த	கிட்டின
மது கைடபரும்	மதுகைடபர்கள்
வயிறு உருகி மாண்டார்	குடலழுகி முடிந்து போனார்கள்;
அவர்க்கு	அந்த மதுகைடபர்களைப்போலே பிரதிகூலராய் வருமவர்களுக்கு
ஆங்கு	அவ்வண்ணமாகவே
அது இறுதி கேடு	அப்படிப்பட்ட ப்ராண விநாசமான கேடே (பலிக்கும்.)

* * *—தூணில்வந்து தோன்றி ப்ரஹ்லாத விரோதியை முடித்த வரலாற்றைக் கீழ்ப்பாட்டில் அநுஸந்தித்தார். எம்பெருமான் உறங்குவான்போலிருக்கும்போதே அநாயாஸமாக எதிரிகளை முடிக்கவல்லவனாயிருக்கையில் உணர்ந்திருந்து விரோதிநிரஸநஞ் செய்தது அவனுக்கு ஓரேற்றமோ? என்று சொல்ல நினைத்து, மதுகைடபர்களை எளிதாக முடித்திட்டபடியை இப்பாட்டில் அருளிச்செய்கிறார்.

மதுகைடபர்கள் மடிந்த வரலாறு பலவிதமாகச் சொல்லப்படுவதுண்டு; அவற்றுள் ஒருவிதம் வருமாறு:—பிரமதேவனது தினப்பிரளயத்தில் இவ்வுலகமெல்லாம் பெருங்கடலினால் எங்கும் நீர்மயமாயிருந்த பொழுது அவ்வெள்ளத்தில் திருமால் அரவணையில் அமர்ந்திருக்கையில், அத்திருமாலினிடத்து நின்று ரஜஸ் தமோ குணங்களின் வடிவமாகத் தோன்றி "எம்மை நீ கொல்லுக என்று தம் வாயாற்சொல்லிய பின்னரே தம்மைப் பிறர் கொல்லலாகும்" என்று வரம்பெற்ற மதுகைடபரிருவரும் அப்பிரளய நீரைக் குழப்பிக்கொண்டு பேராரவாரத்துடன் சென்று பிரமதேவனைக் கண்டு அவனிடத்துநின்று வேதங்களையெல்லாம் பறித்துக்கொண்டு அப்பிரளய வெள்ளத்தில் மறைந்தனராக, அப்போது தான் செய்யவேண்டுவது இன்னதெனத் தேறாது திகைப்புக்கொண்ட அப்பிரமன் பின்னர்ச் சிறிது தெளிந்து திருமாலைத்துதித்துத் தனக்கு நேர்ந்த ஆபத்தை முறையிட, அக்கடவுள் ஹயக்ரீவாவதாரஞ்செய்து அக்கடலிற்புக்கு இனியதோர் இசையைப் பாட, அவ்வினிய கீதத்தைக்கேட்ட அவ்வசுரர்கள் அவ்வேதங்களை ஓரிடத்து வைத்திட்டு அவ்வொலிவந்த வழியைப்பிடித்துச்செல்லுமளவில் திருமால் அவ்வேதங்களுள்ள விடத்திற்சென்று அவற்றைக் கொணர்ந்து பிரமனுக்குத் தந்தருள, அப்போது ஒருவரையுங் காணாதவராய் வேதங்களும் எடுத்துக்கொண்டு போகப்பட்டதையுணர்ந்த அவ்வசுரர்கள் மிகச்சினந்து அரவணையில் அறிதுயிலமரும் பரம்பொருளைக்கிட்டிப் போர்செய்யத் தொடங்கவே, திருமாலுக்கும் அவ்வசுரர்க்கும் வெற்றி தோல்விகளின்றி நெடுங்காலம் பெரும்போர் நிகழ்ந்ததாக, முடிவில் திருமாலை நோக்கி அவர்கள் 'உனது ஆற்றலுக்கு உவந்தோம்; வேண்டும் வரம் பெற்

றுக்கொள்' என்ன; அக்கடவுள் 'யான் உங்களைக் கொல்ல வேணும்' என்று வரம்வேண்ட, அவர்களும் அதற்கு இணங்குகையில், திருமாலும் 'உங்கட்கு வேண்டும் வரங்கொண்மின்' என்ன; 'ஒருவரும் இறவாத இடத்தில் நாங்கள் இறக்கவேண்டும்' என்று அவர்கள் வேண்ட, திருமாலும் அங்ஙனமே வரமளித்துத் தனது திருத்துடையைக் கொண்டு அவர்களை இறுக்கிக் கொன்றிட்டனன் என்பதாம்.

கூரத்தாழ்வான் ஸுந்தரபாஹு ஸ்தவத்தில் அழகருடைய திருத்துடைகளை வருணிக்குங்கால், "𑌪𑌿𑌷𑍍𑌟𑌦𑍁𑌷𑍍𑌟𑌮𑌧𑍁𑌕𑍈𑌟𑌭 𑌕𑍀𑌟𑍌—பிஷ்டதுஷ்ட மதுகைடப கீடௌ" என்றும், பட்டர் ஸ்ரீரங்கராஜஸ்தவத்தில் ஸ்ரீரங்கநாதனுடைய திருத்துடைகளை வருணிக்குங்கால் "[illegible]......[illegible]?—மதமிவ மதுகைடபஸ்ய.......கிமுபமிமீமஹி ரங்கதுஞ்ஜரோர்வோ:" என்றும் அருளிச்செய்திருக்கையாலே மதுகைடபர்கள் திருமாலின் திருத்துடையில் இறுகி முடிந்தனர் என்பது தெற்றெனவிளங்கும். இதிஹாஸ புராணங்கள் பலவகைப் பட்டிருத்தலால் இப்பாட்டில் ஆழ்வாரருளிச் செய்கிற விதமாகவும் உண்டென்று கொள்க. அரவணையில் துயில் கொள்ளும் எம்பெருமானோடு போர் புரிவதாக மதுகைடபர்கள் கிட்ட வந்த மாத்திரத்திலே திருவனந்தாழ்வானுடைய உஷ்ணமான மூச்சுக்காற்று வீசினவளவிலே அவ்வசுரர்கள் வயிறுருகி மாண்டொழிந்தனர் என்கிறார்.

1. "மேருகிரியவுணனுடல் மிடல் கெடுத்தாயென்பர் அது, உன் கூருகிரேயறிந்ததல்லால் கோவே! நீ அறியாயால்" என்றாற் போலே, உண்மையில் திருத்துடைகளால் இறுக்கிக் கொல்லப் பட்ட அவ்வசுரர்களை ஆதிசேஷனுடைய வெவ்வுயிர்ப்பினால் வயிறுருகி மாண்டனராகச் சொல்வதும் பொருந்தியதேயாம். அதிசயோக்தியில் ஒருவகையென்க.

அது கேடவர்க்கிறுதியாங்கு=2. "என்றுமென்பிள்ளைக்குத் தீமை செய்வார்கள் அங்ஙனமாவர்களே" என்று யசோதைப் பிராட்டி கைசுடுக்கி வைதாளே, அது போலக் கொள்க. கண்ண

1. திருவரங்கக் கலம்பகம். 2. பெரியாழ்வார் திருமொழி 3—3—7.

பிரான் விஷயத்தில் தீமை செய்பவர்கள் வத்ஸாஸுரனும் கபித்தாஸுரனும் பட்டபாடு படுவர்கள் என்று அவள் சாபமிட்டாற்போல, இவ்வாழ்வாரும் சாபமிடுகிறார்—எம்பெருமான் விஷயத்தில் பிராதிகூல்யமுள்ளவர்கள் மதுகைடபர்கள் பட்டபாடு படுவர்கள் என்கிறார்.

அவர்க்கு என்றது—அந்த மதுகைடபர்களைப் போன்ற விரோதிகளுக்கு என்றபடி. .... (சுசு.)

ஆங்குமலரும் குவியுமாலுந்திவாய் *
ஓங்கு கலத்திறெண்போது *—ஆங்கைத்
திகிரிசுடரேன்றும் வெண்சங்கம் * வானில்
பகருமதி யென்றும் பார்த்து. (சுஎ)

மால்	ஸர்வேச்வரனுடைய	(கை ஆம்)	இடத்திருக்கையி லுள்ள
உந்தி வாய்	திருநாபியிலே	வெண் சங்கம்	வெளுத்த சங்கை
ஓங்கு	உயரவளர்ந்த	வானில் பகரும் மதி என்றும்	ஆகாசத்தில் விளங்குகிற சந்திரனென்றும்
ஒண் கமலத்தின் போது	அழகிய தாமரைப் பூவானது	பார்த்து	நினைத்துக்கொண்டு
கை	அவனுடைய வலத் திருக்கையில்	ஆங்கு	ஏககாலத்திலே
ஆம்	உண்டான	மலரும் குவியும்	மலர்வதும் மூடிக் கொள்வதுமா யிரா நின்றது.
திகிரி	திருவாழியை		
சுடர் என்றும்	ஸூர்யனென்றும்		

* * *—சேஷசயனத்தில் பள்ளிகொள்ளு மெம்பிரானுடைய திருநாபிக்கமலம் நன்றாக விகஸித்ததாகவுமிராதே நன்றாக மூடிக் கொண்டதாகவுமிராதே மலர்வதும் மொட்டிப்பதுமா யிருக்கிற அழகை அநுபவித்துப் பேசுகிறார். எம்பெருமானுடைய வலத் திருக்கையில் திருவாழியாழ்வான் விளங்குகிறான்; “ஸஹஸ்ர ஹாஸ்ரகோடி துல்யம்—ஸுதர்சநம் பாஸ்கர கோடிதுல்யம்” என்று அனேகமாயிரம் ஸூர்யர்களுக்கு ஸமானமாக ஸுதர்சநாழ்வான் சொல்லப்பட்டிருப்பதால் அவ்வாழ்வானைக் கண்டு ஸூர்யனென்றெண்ணி உந்திக்கமலம் மலரத் தொடங்குகின்றது; இடத் திருக்கையில் ஸ்ரீபாஞ்சஜந்யாழ்வான் வெள்ளை வெளே லென்று

விளங்குகிறான்; 1 "சந்திரமண்டலம் போல் தாமோதரன் கையில்........வலம் புரியே!" என்று அவன் சந்த்ரஸமானனாகச் சொல்லப்பட்டிருப்பதால் அவ்வாழ்வானைக்கண்டு சந்திரனென்றெண்ணி மூடிக்கொள்ளத் தொடங்குகிறது. இப்படி மாறிமாறி மலர்வதும் மூடுவதுமாயிருக்குமிருப்பொழிய ஸ்திரமானவொரு நிலைமையில்லை யென்கிறார். .... (சுஎ)

பார்த்த கடுவன் சுனைநீர் நிழற்கண்டு *
பேர்த்தோர் கடுவனெனப் பேர்ந்து *— கார்த்த
களங்கனிக்குக் கைநீட்டும் வேங்கடமே * மேனாள்
விளங்கனிக்குக் கன்றெறிந்தான் வெற்பு. (சுஅ)

சுனை நீர்	திருமலைச் சுனையின் நீரிலே	கார்த்த களங்கனிக்கு கை நீட்டும்	கரிய களாப்பழத்தைப் பறித்துத் தா வென்று கை நீட்டப்பெற்ற
பார்த்த	கவிந்து பார்த்த	வேங்கடமே	திருவேங்கடந்தான்
கடுவன்	குரங்கானது	மேல் நாள்	முன்பொருகாலத்தில்
நிழல் கண்டு	நீரினுள்ளே பிரதிபலிக்கிற தன்னிழலைக்கண்டு	விள கனிக்கு	(அஸுராவேசங் கொண்ட) விளாம் பழங்கள் உதிர்வதற்காக
பேர்த்து ஓர் கடுவன் என	(தனக்கு எதிரியான) வேறொரு குரங்கு இருப்பதாக ப்ரமித்து	கன்று எறிந்தான்	வத்ஸாஸுரனை (எறிகுணிலாகக் கொண்டு) வீசியெறிந்த பெருமானுடைய
பேர்ந்து	அவ்விடம் விட்டு நீங்கி (மறுபடியும் சாபல்யத்தாலே)	வெற்பு	திருமலை.

* * *—திருமலையில் நிகழ்ச்சியைக் கூறுகின்றார். ஒருசுனையின் கரையிலே களாச்செடிகளில் களாப்பழங்களைப் பறித்துத் தின்னத் தொடங்கின குரங்கானது அச்சுனை நீரை எட்டிப்பார்த்தவாறே அதில் தன் பிரதிபிம்பத்தைக்கண்டு அங்கே வேறொரு குரங்கு இருப்பதாகவும் அது களாப்பழங்களைப் பறிப்பதாகவும் பிரமித்து 'எனக்குக் களாப்பழம் தா' என்று கைநீட்டுகின்றதாம்; இப்படிப்பட்ட திருமலையானது, வத்ஸாஸுரனைக் கொண்டு

1. நாச்சியார் திருமொழி 7—4.

கபித்தாஸ்ரனை முடித்த கண்ணபிரான் திருவுள்ளம் உவந்து வாழும் திவ்யதேசமாம்.

திருமலையப்பனுடைய சேஷ்டிதங்களைப் பேசுவதோடு அங்குள்ள திர்யக்ஜந்துக்களின் சேஷ்டிதங்களைப் பேசுவதோடு வாசியில்லை ஆழ்வார்க்கு. திருமலையிலுள்ளது ஏதேனுமாம்; எல்லாம் உத்தேச்யமாயிருக்கும். "எம்பெருமான் பொன்மலைமேல் ஏதேனுமவேனே" என்றாரே ஸ்ரீ குலசேகரப் பெருமாள். ... (சுஅ)

வெற்பென்று வேங்கடம் பாடும் * வியன்துழாய்க்
கற்பென்று சூடும் கருங்குழல்மேல் *—மற்பொன்ற
நீண்டதோள் மால்கிடந்த நீள்கடல் நீராடுவான் *
பூண்டநா ளெல்லாம் புகும் (சுகூ)

(என் மகளானவள்)	
வெற்பு என்று	ஏதேனும் ஒரு மலையைச் சொல்ல நினைத்தாலும்
வேங்கடம்	திருமலையைப் பற்றி
பாடும்	பாடுகின்றாள்;
கற்பு என்று	குலமரியாதைக்குத் தகுந்திருப்பதென்று
வியன் துழாய்	விலக்ஷணமான திருத்துழாயை
கரு குழல் மேல்	(தனது) கரிய கூந்தலில்
சூடும்	அணிந்து கொள்ளுகிறாள்;
மல்	மல்லர்களை
பொன்ற	பொடிபடுத்தின
நீண்ட தோள்	நீண்ட திருத்தோள்களையுடைய
மால்	ஸர்வேச்வரன்
கிடந்த	சயனித்திருக்கப் பெற்ற
நீள் கடல்	பரந்த திருப்பாற்கடலிலே
நீராடுவான்	தீர்த்தமாடுவதற்காக
பூண்ட நாள் எல்லாம்	விடிந்த விடிவுகள் தோறும்
புகும்	புறப்படுகின்றாள்.

* * *—எம்பெருமானையநுபவித்தல் பலவகைப்பட்டிருக்கும்: அவனுடைய திருநாமங்களைச் சொல்லியநுபவித்தல், திருக்கல்யாண குணங்களைச் சொல்லியனுபவித்தல், திவ்யசேஷ்டிதங்களைச் சொல்லியனுபவித்தல், வடிவழகை வருணித்தநுபவித்தல், அவனுகந்தருளின திவ்யதேசங்களின் வளங்களைப் பேசியநுபவித்தல், அங்கே அபிமானமுள்ள ஸ்ரீவைஷ்ணவர்களின் பெருமையைப் பேசியநுபவித்தல்—என்றிப்படி பலவகைப் பட்டிருக்கும் பகவதநுபவம். இவ்வகைகளில் பரமவிலக்ஷணமான மற்றொரு

வகையுமுண்டு; அதாவது—தாமானதன்மையை [ஆண்மையை] விட்டுப் பிராட்டிமாருடைய தன்மையையேறிட்டுக் கொண்டு வேற்றுவாயாலே பேசியநுபவித்தல். இப்படி யநுபவிக்குந்திறத்தில் தாய்பாசுரம், தோழிபாசுரம், மகள்பாசுரம் என்று மூன்றுவகுப்புகளுண்டு. இவை நம்மாழ்வார் திருமங்கையாழ்வார்களது அருளிச்செயல்களில் விசேஷமாக வரும். முதலாழ்வார்களின் திருவந்தாதிகளில் ஸ்த்ரீபாவனையினாற் பேசும் பாசுரம் வருவதில்லை. ச்ருங்காரரஸத்தின் ஸம்பந்தம் சிறிதுமின்றியே கேவலம் சுத்த பக்திரஸமாகவே பாசுரங்களருளிச்செய்வர்கள் முதலாழ்வார்கள். ஆயினும் இப்பாசுரமொன்று தாய்வார்த்தையாகச் செல்லுகிறது. பேயாழ்வாராகிற பெண்பிள்ளையின் நிலைமையை அவளைப்பெற்றுவளர்த்த திருத்தாயார் பேசுவதாக அமைக்கப்பட்ட பாசுரம் இது.

“என்னுடைய மகளானவள்” என்ற எழுவாய் இதில் இல்லையாதலால் கற்பித்துக்கொள்ளவேண்டும். என்மகள் ஏதேனுமொரு மலையைச் சொல்லப்புகுந்து திருவேங்கடமலையைப் பாடுகின்றாள். திருத்துழாய் மலரைச் சூடிக்கொள்வதே தனது கற்புக்கு உரியதென்று தன்குழல்மேல் அதனைச் சூடிக்கொள்ளுகின்றாள். மல்லவதம் செய்தருளின பெருமான் பள்ளிகொண்டருளும் திருப்பாற்கடலில் நீராடுவதே தகுதியென்று அங்கேறப் புறப்படுகின்றாள் என்றதாயிற்று.

இப்பிரபந்தத்தில் அந்யாபதேசப் பாசுரம் வேறொன்றுமில்லாதிருக்க இஃதொன்றைமாத்திரம் இங்ஙனே தாய்பாசுரமாகக் கொள்ளுதல் சிறவாதென்றும், ‘என்மகள்’ என்ற எழுவாய் இல்லாமையாலும் இவ்வர்த்தம் உசிதமன்று என்றும் சிலர் நினைக்கக்கூடுமாதலால் இப் பாசுரத்திற்கு வேறுவகையான நிர்வாஹமும் பூருவர்கள் அருளிச் செய்துள்ளார். எங்ஙனே யெனின்? பாடும், சூடும், புகும் என்ற வினைமுற்றுக்களை முன்னிலையில் வந்தனவாகக் கொண்டு, ‘ஓ உலகத்தவர்களே! நீங்கள் ஏதாவதொரு மலையைப் பாடவேண்டில் திருவேங்கடமலையைப் பாடுங்கள்; ஏதேனுமொரு மலரைக் குழலில் சூடவேண்டில் திருத்துழாய்மலரைச் சூடிக்கொள்வதே சேஷத்வத்திற்கு உரியதென்று கொண்டு அதனைச் சூடுங்கள்; நீராடுவதற்குத் திருப்பாற்கடலிலே சென்று புகுங்கள்’ என்பதாக.

இங்கே பெரியவாச்சான்பிள்ளை வியாக்கியான ஸ்ரீஸூக்தி காண்மின் ;—"இப்பிரகரணத்தில் கீழும் மேலும் அந்யாபதேச மின்றிக்கே யிருக்க இப்பாட்டொன்றும் இப்படி கொள்ளுகிற தென்னென்று நிர்வஹிப்பர்கள் ;—... ..திருமலையைப் பாடுங் கோள் ;.......திருத்துழாயைச் சூடுங்கோள் ;.......விரோதி நிரஸந சீலனானவன் கிடந்த திருப்பாற்கடலிலே முழுகுங்கோள்." என்று.

நன்னூல் வினையியலில் "பல்லோர் படர்க்கை முன்னிலை தன்மையில், செல்லாதாகும் செய்யுமென்முற்றே" என்ற சிறப்பு விதிக்கு மாறாக, பாடும், சூடும், புகும் என்ற செய்யுமென் முற்றுக் களுக்கு முன்னிலைப்பொருள் கொள்ளலாமோ வென்னில்.; இதனைப் புதியன புகுதலாகக் கொள்க. "நீர் உண்ணும் என முன்னிலையிற் பன்மையேவலாய் வருதல் புதியனபுகுதல்" என்று நன்னூலுரைகாரர்களும் சொல்லிவைத்தார்கள். "பழையன கழிதலும் புதியன புகுதலும், வழுவல காலவகையினானே" என்ற நன்னூற் சூத்திரமும் காண்க.

மற்போன்ற நீண்ட தோள்மால் என்றவிடத்து அறியவேண்டும் வரலாறு வருமாறு:—கண்ணபிரான் கம்ஸனது ஸபையிற் செல்லும்போது எதிர்த்துப் பொருது கொல்லும்படி கம்ஸனால் ஏவப்பட்ட சாணூரன் முஷ்டிகன் முதலிய பெருமல்லர்கள் சிலர் வந்து எதிர்த்து உக்கிரமாகப் பெரும்போர் செய்ய அவர்களை யெல்லாம் கண்ணபிரான் மற்போரினாலேயே கொன்று வென்றிட்டனன்.

கண்ணபிரான் பாண்டவதூதனாய்த் துரியோதனனிடஞ் சென்றபொழுது துரியோதனன் ரஹஸ்யமாகத் தனது ஸபா மண்டபத்தில் மிகப் பெரிய நிலவறையொன்றைத் தோண்டுவித்து அதில் அனேக மல்லர்களை ஆயுதபாணிகளாய் உள்ளே யிருக்க வைத்து அப்படுகுழியைப் பிறர் அறிய வொண்ணாதபடி மூங்கிற் பிளப்புக்களால் மேலேமூடி அதன்மேற் சிறந்த ரத்நாஸநமொன்றை யமைத்து அவ்வாஸநத்தின்மீது தன்னை வீற்றிருக்கச் சொல்ல அங்ஙனமே தான் அதன்மேலேறின மாத்திரத்திலே மூங்கிற்பிளப்புக்கள் முறிபட்டு ஆஸனம் உள்ளிறங்கிப் பிலவறையிற் செல்லுமளவில் மிகப்பெரிதாக விச்வரூப மெடுத்துப் பல கைகளையுங்

13

கால்களையுங் கொண்டு எதிர்த்து அப்பிலவறையிலிருந்த மல்லர்களை மடிவித்தனன் என்ற வரலாறு முணர்க.

பூண்டநாளெல்லாம்=ஸூர்யனுடைய தேரிலே குதிரை பூட்டின நாளெல்லாம் என்றபடியாய் 'விடிந்த விடிவுகள் தோறும்' என்று பொருள்பட்டது. ... ... (௬௯)

புகுமதத்தால் வாய்பூசிக் கீழ்தாழ்ந்து * அருவி
உகுமதத்தால் கால்கழுவிக் கையால் *—மிகுமதத்தேன்
விண்டமலர் கொண்டு விறல்வேங்கடவனையே *
கண்டு வணங்கும் களிறு. (௭௦)

களிறு	(திருமலையிலுள்ள) யானையானது
புகு மதத்தால் வாய் பூசி	மண்டையில் நின்றும் கபோலங்களில் நின்றும் வாயிலே புகுகின்ற மத ஜலத்தாலே வாய் கொப்பளித்து ஆசமனம் பண்ணி
கீழ் தாழ்ந்து அருவி உகு மதத்தால்	மேலிருந்து கீழ் வரையில் அருவி போலே வந்து பெருகுகிற மத ஜலத்தாலே
கால் கழுவி	கால்களை சுத்தி செய்துகொண்டு
கையால்	துதிக்கையாலே,
மிகு மதம் தேன்	மிகுந்த மதத்தை யுண்டுபண்ணக் கூடிய தேனை யுடையதும்
விண்ட	மலர்ந்ததுமான
மலர் கொண்டு	புஷ்பத்தைக்கொண்டு
விறல் வேங்கடவனையே	பெருமிடுக்கனான திருமலையப்பனையே
கண்டு வணங்கும்	ஸேவித்து வணங்குகின்றது.

* * *—திருமலையில் மதயானைகள் தாமரைப் பூக்களைப் பறித்து அப்பன் திருவடிகளில் ஸமர்ப்பித்து வணங்குகிறபடியை ஒரு சமத்காரம் பொலியப் பேசுகிறார் எம்பெருமான் ஸந்நிதியில் தொண்டுசெய்யப் போமவர்கள் வாயைக் கொப்பளித்துக் கைகால்களை சுத்திசெய்து கொண்டு புஷ்பங்களை யெடுத்துக் கொண்டு போவது வழக்கம் இவ்வாசாரம் சாஸ்த்ரவச்யர்களான மானிட சாதியர்க்கு மாத்திரமல்ல, திருமலையிலுள்ள அஃறிணைப் பொருள்கட்கும் இவ்வாசாரம் கோல்விழுக் காட்டிலே அமைந்திருக்கின்றது என்கிறார்.

மத்தகம், கன்னங்கள் ஆகிய இடங்களிலிருந்து பெருகி வாயிலே புகுகின்ற மத ஜலத்தினால் வாய் கொப்பளித்து ஆசமனம் பண்ணினது போலும்; அருவிபோலே காலளவும் பெருகுகின்ற மதஜலத்தினால் காலைக் கழுவினது போலும்.

விறல் வேங்கடவன் = இங்ஙனே திருமலையிலுள்ள திர்யக் ஜந்துக்களும் தன்னை வணங்குமாறு ஜ்ஞானத்தைக் கொடுக்க சக்தனான திருவேங்கடமுடையான் என்ப. ... . (எ0)

களிறு முகில்குத்தக் கையெடுத் தோடி *
ஒளிறு மருப்பொசிகை யாளி—பிளிறி
விழ * கொன்று நின்றதிரும் வேங்கடமே * மேனாள்
குழக்கன்று கொண்டெறிந்தான் குன்று. (எக)

களிறு	யானையானது
கை எடுத்து ஓடி	தனது துதிக்கையை எடுத்துக் கொண்டு வேகமாயோடி
முகில்	(மதயானைபோ லெழுந்த) மேகங்களை
குத்த	(எதிரியானை யென்று நினைத்துக்) குத்த
யாளி	(இதைக் கண்ட) யாளியானது
ஒளிறு மருப்பு	(அந்தயானையி னுடைய) விளங்குகின்ற கொம்பை
ஒசி	முறிக்கிற
கை	கையை யுடைத்தாய்க் கொண்டு
பிளிறி விழ கொன்று	(அந்தயானை) வாய்விட்டலறிக் கொண்டு விழும்படி (அதனைக்) கொன்று
நின்று அதிரும	அங்கேயே நின்றுகொண்டு பெருமுழக்கம் செய்யப் பெற்ற
வேங்கடமே	திருவேங்கடமே
மேல் நாள்	முன்பொரு காலத்தில்
குழ கன்று கொண்டு	இளங்கன்றை (எறிகுணிலாகக்) கொண்டு
எறிந்தான்	(விளங்கனிமீது) எறிந்த பிரானுடைய
குன்று	திருமலையாம்.

* * *—1. "மதயானைபோலெழுந்த மாமுகில்காள் !" என்றும், 2. "கரியமாமுகிற் படலங்கள் கிடந்தவை முழங்கிடக்,

1. நாச்சியார் திருமொழி 8—9. 2. பெரிய திருமொழி 1—2—10.

களிறென்று" என்றும் சொல்லுகிறபடியே யானைக்கும் மேகத்திற்கும் ஒப்புமை ப்ரஸித்தம். ஆகவே, திருமலையிலுள்ள யானையானது மலைமுகட்டில் படிந்திருந்த மேகத்தை எதிரியானதொரு யானையென்று மயங்கிப் பெரிய வேகத்தோடே சென்று துதிக்கையினால் குத்த, இதனை ஒரு யாளி கண்டு 'இக்களிற்றுக்கு இவ்வளவு மதமா' என்று சினந்து ஓடிவந்து அவ்யானையின்மேற் பாய்ந்து அதன் கொம்பை முறித்தெறிந்து அது வாய்விட்டு அலறிக்கொண்டு விழும்படியாகக் கொலையுஞ் செய்து, அவ்வளவிலும் சீற்றம் தணியாமையாலே அவ்விடத்திலேயே நின்று மற்றுள்ள மிருகங்களும் மண்ணுண்ணும்படியாக கர்ஜிக்கின்றதாம் திருமலையில். .... (எக)

குன்றொன்றினாய குறமகளிர் கோல்வளைக்கை *
சென்று விளையாடும் தீங்கழைபோய் *—வென்று
விளங்குமதி கோள்விடுக்கும் வேங்கடமே * மேலை
இளங்குமரர் கோமா னிடம். (எஉ)

குன்று ஒன்றினாய	அத்திருமலையொன்று தவிர வேறொரிடமும் அறியாதிருக்கிற	வென்று	ராஹுவைத் தகர்த்து,
குறமகளிர்	குறத்திகள்	விளங்கு மதிகோள் விடுக்கும்	விளங்காநின்ற சந்திரனுடைய கிரஹணத்தை விடுவிக்கப்பெற்ற
கோல் வளை கை	அழகிய வளைகளணிந்த கைகளினாலே	வேங்கடமே	திருமலையே
சென்று	மேலேறி	மேலை	மேலுலகத்திலுள்ள
விளையாடும்	விளையாடாநிற்கப் பெற்ற	இளங்குமரர் கோமான்	நித்யயுவாக்களான நித்யஸூரிகளுக்குத் தலைவனான பெருமானுடைய
தீம் கழை	அழகிய மூங்கில்கள்		
போய்	சந்திர மண்டலத்தளவும் போய்	இடம்	திவ்யதேசமாம்.

* * *—திருமலையில் வளர்கின்ற மூங்கில்கள் சந்திரமண்டலத்தளவும் ஓங்கியிருக்கின்றனவென்பதை ஒரு அதிசயோக்தியினால் கூறுகின்றார்.

குன்றேன்றிணுய குறமகளிர்—திருமலையை விட்டு ஒரு நொடிப்பொழுது கீழிழிந்தாலும் குடிப்பழியாம் என்று திருமலையை விடாதே அங்கே நித்தியவாஸம் பண்ணுகின்ற குறத்திகள். அவர்கள் ஊஞ்சலாடுகை முதலான விளையாடல்களுக்காக மூங்கில் மரங்களிலே யேறியிருப்பதுண்டாகையாலே "குறமகளிர் கோல்வளைக்கை சென்று விளையாடுந் தீங்கழை" எனப்பட்டது. அப்படிப்பட்ட மூங்கில்களானவை, சந்திரனை க்ரஹிக்கின்ற ராஹுவைக்குத்தி அப்புறப்படுத்தி அச் சந்திரனை மகிழ்விக்கின்றனவாம். இங்ஙனே ஒக்கமுடைத்தான திருமலை நித்யஸூரிநாதன் வாழுமிடம்.

இப்பாட்டுக்கு மற்றும் பலவகையாகப் பொருள்கூறுவர்: விளையாடுகின்ற குறத்திகளின் கோல்வளைக்கையானது சென்று நல்ல மூங்கிற்செறிவை நீக்கி, சந்திரன் இங்குப் புகுரப்பெறுமையால் பெற்றிருந்த இடரை நீக்கும் என்றுமாம். அன்றியே, குறத்திகளின் வளைகளின் ஒளியானது சந்திரனொளி புகுரப்பெறுத மூங்கிலிருளை அகற்றி வெளியாக்கி, சந்திரன்மறுவையும் போக்கும் என்றுமாம்.

மேலையிளங்குமரர்—நித்ய ஸூரிகள் என்றும் பன்னிரண்டு வயது வாய்ந்திருப்பரென்க. ... . (எஉ)

இடம்வலமேழ் பூண்ட இரவித் தேரோட்டி *
வடமுக வேங்கடத்து மன்னும் *—குடநயந்த
கூத்தனாய் நின்றான் குரைகழலே கூறுவதே *
நாத்தனு லுள்ள நலம். (எங)

ஏழ் பூண்ட	ஏழு குதிரைகளைப் பூண்ட
இரவி தேர்	ஸூர்யனுடைய தேரை
இடம் வலம்	(மேருவுக்கு) இடப்பக்கமாகவும் வலப்பக்கமாகவும்
ஓட்டி	(அந்தர்யாமியாயிருந்து கொண்டு) நடத்துகிறவனும்
வட முகம் வேங்கடத்து மன்னும்	வடதிசையின் கணுள்ள திருவேங்கடத்தில் நித்யவாஸம் பண்ணுமவனும்
குடம் நயந்த கூத்தன் ஆய் நின்றான்	ஆசையோடு குடக் கூத்தாடின கண்ணபிரான் போன்று நிற்பவனுமான பெருமானுடைய

குழை கழல் கூறுவதே	ஆபரணவொலி பொருந்திய திருவடிகளை ஏத்துவதே	நா தன்னால் உள்ள நலம்	நாவினால் கொள்ளக் கூடிய பிரயோஜனம்.

* * *—"யஸ்யாஸாவாதி த்ய" என்றும் "த்யேயஸ்ஸதா ஸவித்ருமண்டலமத்யவர்த்தீ நாராய ண:" என்றுஞ் சொல்லுகிறபடியே எம்பெருமானுக்கு ஸூர்யமண்ட லமும் ஒரு வாஸஸ்தாநமாதலால் 'இரவித் தேரோட்டி' என்றார். எம்பெருமானுடைய அநுப்ரவேசமின்றி எந்த தேவதையும் எக்காரியமும் செய்ய முடியாதாகையாலே அவன்தானே ஸூர்யனுக்கு அந்தர்யாமியாயிருந்து தேரை நடத்துகின்றானென்க.

ஏழ் பூண்ட=ஏழு குதிரைகளைப் பூண்ட என்றபடி. காயத்ரீ, ப்ருஹதீ, உஷ்ணிக், ஜகதீ, த்ரிஷ்டுப், அநுஷ்டுப், பங்க்தி—என்கிற ஏழு சந்தஸ்ஸுக்களும் ஏழு குதிரைகளாய்க் கொண்டு வஹிக்குமென்று சாஸ்த்ரம் சொல்லும். "ஸப்த யுஞ்ஜந்தி ரதமேகசக்ரம்" என்று வேதத்திலும், "ஹயாஶ்ச ஸப்த ஸந்தஸ்தேஷாம் நாமாநி சோச்யந்தே। காயத்ரீ ச ப்ருஹத்யுஷ்ணிக் ஜகதீ த்ரிஷ்டுபேவ ச॥ அநுஷ்டுப் பங்க்திருக்தாஶ்சந்தாம்ஸி ஹரயோ ரவே:." என்று உபப்ருஹ்மணங்களிலும் "காரார் புரவி யேழ் பூண்ட தனியாழித் தேரார் நிறைகதிரோன்" என்று சிறிய திருமடலிலும் சொல்லிற்றுக் காண்க. வேதந்தன்னிலேயே "ஏகோ அஶ்வோ வஹதி ஸப்தநாமா" [ஸப்த என்று பெயர் பூண்ட ஒரு குதிரை வஹிக்கிறது] என்று சொல்லப்பட்டிருக்கிறதே, இதற்கு என்ன கதி? என்று ஆசார்யஹ்ருதய வியாக்கியானத்தில் $ ஸ்ரீ மணவாள மாமுனிகள் உபக்ஷேபித்துக் கொண்டு "ஸந்தூநா ப்ராணமாக வ்யாவ்ருத்தமான விடங்களிலே கண்டுகொள்வது" என்றருளிச் செய்துள்ளதும் இங்கு அநுஸந்திக்கத்தக்கது.

'ஓட்டி' என்பதை வினையெச்சமாகவுங் கொள்ளலாம்; 'இ' விகுதிபெற்ற பெயராகவுங் கொள்ளலாம்.

$ முதற் பிரகாணத்தில் "புரவியே ழொருகாலுடைய தேரிலே" என்ற விடத்து.

"குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன்....பரன்சென்ற சேர் திருவேங்கடமாமலை" என்று கண்ணபிரான்தானே திருவேங் கடமலையில் வந்து ஸந்நிதி பண்ணியிருப்பதாக அருளிச் செய்கை யாலே இங்கும் "குடநயந்த கூத்தனாய் நின்றான்" என்று கண்ண பிரானோடு ஒற்றுமை நயம்படக் கூறப்பட்டது. தலையிலே அடுக் குக்குட மிருக்க இருதோள்களிலும் இரு குடங்களிருக்க, இரு கையிலுங் குடங்களையேந்தி ஆகாசத்திலே யெறிந்து ஆடுவதொரு கூத்து குடக்கூத் தெனப்படும்

திருவேங்கடமுடையானுடைய திருவடிகளைத் துதிப்பதே நாவுக்குப் பயன் என்றதாயிற்று. ... . (௭௩)

நலமே வலிதுகொல் நஞ்சூட்டு வன்பேய் *
நிலமே புரண்டுபோய் வீழ *—சலமேதான்
வெங்கொங்கை யுண்டானை மீட்டாய்ச்சி யூட்டுவான் *
தன்கொங்கை வாய்வைத்தாள் சார்ந்து. (௭௪)

சலமே	கபடமாகவே
நஞ்சு	விஷத்தை
ஊட்டு	உண்பிக்க வந்த
வன் பேய்	கொடிய பூதனையானவள்
நிலமே	பூமியிலே
புரண்டு போய் வீழ	(பிணமாய்) மறிந்துபோய் விழும்படியாக
தான் சலமே	தானும் கபடமாகவே
வெம் கொங்கை	(அவளது) வெவ்விய முலையை
உண்டானை	அமுது செய்த கண்ணபிரானை
ஆய்ச்சி	யசோதையானவள்
மீட்டு	(அப் பூதனைபக்கலில் நின்றும்) மீட்டு
ஊட்டுவான்	(தனது முலைப்பாலை) உண்பிப்பதற்காக
சார்ந்து	அணுகிச் சென்று
தன் கொங்கை	தனது முலையை
வாய் வைத்தாள்	அவனது வாயிலே உண்ணக் கொடுத்தாள்;
நலமே வலிதுகொல்	இந்த ப்ரேமம் எவ்வளவு கனத்தது!.

* * *—எம்பெருமானிடத்தில் அந்தரங்கமான அன்பு பூண் டவர்களுள் தலையானவள் யசோதைப் பிராட்டி யொருத்திதான் என்பதை வெளியிடுகிறாரிதில். கண்ணபிரான் இளங்குழவியாய்

நந்தகோபர் திருமாளிகையில் சயனித்திருக்கும்போது வஞ்சகக் கஞ்சனா லேவப்பட்டுக் கொல்லவந்த பூதனையென்னும் பேய்த்தாய் மிக்க பரிவுள்ளவள்போலத் தெய்வக்குழவியை யெடுத்துத் தனது விஷந்தடவின முலையைக்கொடுக்க, பேதைக்குழவி பிடித்துச் சுவைத்துண்டவாறே அப்பேய்ச்சி உயிர்மாண்டு பிணமாய் வீழ்ந்தாள்; உடனே யசோதைப்பிராட்டி ஓடிவந்து குழந்தையை வாரி யெடுத்தணைத்து முலை கொடுத்தாள்—என்பதாக இதிஹாஸமுள்ளது: ஒருத்திவந்து முலைகொடுத்துப் பட்டபாடு கண்ணெதிரே காணாநிற்கச் செய்தே இன்னொருத்தி கிட்டவரத்தான் முடியுமா? அஞ்சாமல் கிட்டவந்து வாரியெடுத்து முலை கொடுத்தாளென்றால் இவளுடைய அன்பின் கனம் விளங்குமன்றோ. பூதனைகொடுத்த விஷத்திற்கு மாற்றான அம்ருதமாகத் தனது ஸ்தந்யத்தைக் கொடுக்க வேணுமென்னும் அன்பு மிகுதியினால் யசோதை செய்த இக்காரியம் அன்புக்கு ஒக்குமத்தனை.

நலமே வலிதுகோல்—ஸ்த்ரீகளுக்கு அச்சமே வலிதாயிருக்கச் செய்தேயும் யசோதைப்பிராட்டிக்கு அன்புதான் வலிது போலிருக்கின்றது! என்றவாறு.

‘𑌛𑌲𑌂’ என்ற வடசொல் சலமெனத் திரிந்தது. இச்சொல் இங்கு நடுநிலைத் தீவகமாய் முன்னும் பின்னும் அந்வயிக்கும். (எச)

சார்ந்தகடு தேய்ப்பத் தடாவியகோட் டுச்சிவாய் *
ஊர்ந்தியங்கும் வண்மதியி னொண்முயலை *—சேர்ந்து
சினவேங்கை பார்க்கும் திருமலையே * ஆயன்
புனவேங்கை நாறும் பொருப்பு. (எரு)

தடாவிய	பரப்பை யுடைத்தான	வண் மதியின்	அழகிய சந்திரனிடத்துள்ள
கோடு	சிகரங்களினுடைய	ஒண் முயலை	அழகிய முயலை,
உச்சி வாய்	உச்சியிலே	சினம் வேங்கை	கோபத்தை யுடைத்தான வேங்கைப் புலியானது
அகடு தேய்ப்ப	கீழ்வயிறு உராயும் படியாக	சேர்ந்து	கிட்டி
சார்ந்து	கிட்டி		
ஊர்ந்து இயங்கும்	மெல்ல ஸஞ்சரிக்கின்ற		

பார்க்கும்	(அதைப் பிடித்துக் கொள்ளவும் விட்டுப் போகவும் மாட்டாமல்) எப்போதும் பார்த்தபடியே நிற்கப் பெற்ற	ஆயன்	கண்ணபிரானுடையதாய்
திருமலையே	திருமலைதான்	புனம் வேங்கை நாறும்	தன்னிலத்தில் வளர்ந்து செழிப்புற்ற வேங்கைமரங்கள் கமழப் பெற்றதான
		பொருப்பு	மலை.

* * *—திருமலையை அநுபவிக்கிறார். திருமலையின் சிகரம் சந்திரமண்டலத்தளவும் ஓங்கியிருக்கின்ற தென்பதை ஒரு அதிசயோக்தியினால் வெளியிடுகிறார். சந்திரனிடையே கறுப்பாகத் தோன்றுவதைக் கவிகள் பலவிதமாகக் கூறுவதுண்டு; மான் என்பர் சிலர்; முயல் என்பர் சிலர்; மற்றும் பல்வகையுங் கூறுவர். ஆகவே, சந்திரனுக்கு வடமொழியில் 'ம்ருகாங்க:' [மானை அடையாளமாக வுடையவன்] என்றும், 'ஶஶாங்க:' [முயலை அடையாளமாக வுடையவன்] என்றும் பெயர்கள் வழங்குகின்றன. 'முயல்' என்ற கொள்கையைப் பின்பற்றி இப்பாசுரமருளிச் செய்யப்படுகிறது.

ஆகாசத்திலே திரிகின்ற சந்திரன் திருமலையின் சிகரநுனியில் தனது கீழ்வயிறு தேயும்படியாக இதில் ஸம்பந்தப் பட்டுக்கொண்டே செல்லுகின்றனனும்; அப்போது அவனது மடியிலிருக்கின்ற முயலைத் திருமலைமீது திரிகின்ற வேங்கைப்புலி கண்டு அதனைத் தான் உணவாகக் கொள்ளக்கருதி, பிடித்துக்கொள்ளவும் மாட்டாமல் விட்டுப்போகவும் மாட்டாமல் உறுத்துப் பார்த்தபடியே நிற்கின்றதாம். இப்படிப்பட்ட திருமலை வேங்கைமலர்களின் வாஸனை வீசப்பெற்றதாய்க் கண்ணபிரானெழுந்தருளியிருக்குமிடமான திருமலையாம். ... ... (எ௫)

பொருப்பிடையே நின்றும் புனல்குளித்தும் * ஐந்து
நெருப்பிடையே நிற்கவும் நீர்வேண்டா *—விருப்புடைய
வெஃகாவே சேர்ந்தானை மெய்ம்மலர்தூய்க் கைதொழுதால் *
அஃகாவே தீவினைக ளாய்ந்து. (எசு)

(ஓ உலகத்தவர்களே !,)

நீர்	நீங்கள்
பொருப்பு இடையே	மலைகளின் நடுவே
நின்றும்	நின்று கொண்டும்
புனல்	நீர்நிலைகளிலே
குளித்தும்	முழுகிக்கொண்டும்
ஐந்து நெருப்பு இடையே	பஞ்சாக்நி மத்யத்திலே
நிற்கவும்	நின்றுகொண்டும் தவஞ்செய்ய
வேண்டா	வேண்டியதில்லை ;
விருப்பு உடைய	(எல்லாராலும்) விரும்பத்தக்கதாயிருக்கின்ற
வெஃகா	திருவெஃகாவில்
சேர்ந்தானை	வந்து கண் வளர்ந்தருளும் பெருமானை
மெய்	மெய்யாக [அநந்ய ப்ரயோஜநமாக],
மலர் தூய் கை தொழுதால்	புஷ்பங்களைப் பணிமாறி வணங்கப் பெற்றால்
தீ வினைகள்	துஷ்கருமங்களெல்லாம்
ஆய்ந்து	(நமக்கு இவ்விடம் வாஸயோக்ய மன்று என்று) நிரூபித்தறிந்து
அஃகாவே	சுருங்கிப்போக மாட்டாவோ ? (அகன்றோடிப் போய்விடுமென்கை.)

* * *—இப்பாட்டில் விளிவருவித்துக்கொள்க. அருமையான தவங்கள் செய்து உடம்பை வருத்துகின்றவர்களே ! நீங்கள் மலைமேல் ஒற்றைக்கால் விரலால் நின்றுகொண்டும், மழைகாலத்தில் நீர்நிலைகளிலே மூழ்கிக்கிடந்தும், வேனிற்காலத்திலே பஞ்சாக்நி மத்யத்தில் நின்றுகொண்டும் இப்படிப்பட்ட காயக்லேசங்களுடன் தவம்புரிவதெல்லாம் ஏதுக்காக ? பாவங்கள் தொலைந்து நற்கதி நண்ணவேணுமென்றுதானே இங்ஙனம் தவம்புரிகின்றீர்கள் ; இனி அங்ஙனம் வருந்தவேண்டா ; திருவெஃகா நாயனார் திருவடிகளிலே அநந்யப்ரயோஜநராய்ப் புஷ்பங்களைப் பணிமாறி ஆச்ரயித்தால் தீவினைகளெல்லாம் தன்னடையே ஓடிப்போய் விடுமே. நமக்காக எம்பெருமான் காயக்லேசங்கள் படாநிற்க நாமும் படவேணுமோ ? என்கிறார்.

பிள்ளைப்பெருமாளையங்கார் இப்பாசுரத்தைத் திருவுள்ளம் பற்றித் திருவரங்கக் கலம்பகத்தில் "காயிலைதின்றுங் கானிலுறைந்துங் கதிதேடித், தீயிடைநின்றும் பூவலம்வந்துந் திரிவீர்காள்

தாயினுமன்பன் பூமகள்நண்பன் தடநாகப், பாயன் முகுந்தன் கோயிலரங்கம் பணிவீரே" என்றருளிய பாசுரம் நோக்கத்தக்கது.

விருப்புடைய வெஃகா=பகவானுடையவும் பாகவதர்களுடையவும் விருப்பத்திற்குப் பாத்திரமான வெஃகா என்றபடி. (௭௬)

ஆய்ந்த வருமறையோன் நான்முகத்தோன் நன்குறங்கில் *
வாய்ந்த குழவியாய் வாளரக்கன் *—ஏய்ந்த
முடிப்போது மூன்றேழென் றெண்ணினான் * ஆர்ந்த
அடிப்போது நங்கட் கரண். (௭௭)

ஆய்ந்த	ஆராய்ந்து அதிகரிக்கப்பட்ட	போது ஏய்ந்த	புஷ்பமாலை பொருந்தின
அரு மறையோன்	அருமையான வேதங்களை யுடையனை	முடி	தலைகளை
நான் முகத்தோன்	சதுர்முக ப்ரஹ்மாவினுடைய	மூன்று ஏழ் என்று எண்ணினான்	பத்து என்று (தனது திருவடியாலே) எண்ணிக் காட்டினவனுடைய
நன் குறங்கில்	அழகிய மடியிலே	அடி போது	திருவடித்தாமரைகள்
வாய்ந்த	நேர்பட்ட	நங்கட்கு	நமக்கு
குழவி ஆய்	இளங்குழந்தையாயிருந்துகொண்டு	ஆர்ந்த அரண்	குறையற்ற சரணம்.
வாள் அரக்கன்	இராவணனுடைய		

* * *—இப்பாட்டில் அநுஸந்திக்கப்பட்டிருக்கும் பகவத் கதை முதல்திருவந்தாதியில் (45) "ஆமே யமரர்க்கறிய" என்ற பாட்டின் "பூமேய மாதவத்தோன் தாள்பணிந்த வாளரக்கன் நீண்முடியைப், பாதமத்தா லெண்ணினான்பண்பு" என்ற பின்னடிகளிலும், நான்முகன் திருவந்தாதியில் "கொண்டு குடங்கால்மேல் வைத்த குழவியாய், தண்டவரக்கன் தலைதாளாற் பண்டெண்ணிப்—போங்குமரன்........." என்ற நாற்பத்து நான்காம்பாட்டிலும் பொய்கையாழ்வாராலும் திருமழிசைப்பிரானாலும் அநுஸந்திக்கப் பட்டுள்ளது. முன்பு இராவணன் தனது பத்துத்தலைகளை மறைத்துக்கொண்டு நான்முகனிடஞ்சென்று வரம்வேண்டிக்கொள்ளுமளவில் எம்பெருமான் ஒரு சிறு குழந்தைவடிவாய் அப்பிரமனுடைய மடியிலே உறங்குவான்போலே கிடந்து 'இவன் பத்துத் தலைகளையுடைய இராவணன்; ஸ்வஸ்வரூபத்தை மறைத்துக்

கொண்டு உன்னை வஞ்சித்து வரம் வேண்டிக்கொள்ள வந்திருக்கிறான்; இவனுக்கு நீ வரமளித்தால் பெருந்தீங்காக முடியும்' என்று தெரிவிப்பவன் போன்று தன் திருவடியால் அவ்விராவணனுடைய பத்துத்தலைகளையும் எண்ணிக் காட்டினன்—என்பதாக இவ்வரலாறு விளங்குகின்றது. இக்கதை இதிஹாஸ புராணங்களில் உள்ள விடம் தெரியவில்லை; பெரியாழ்வார் திருமொழியில் 1. "சீமாலிக னவனோடு தோழமைக்கொள்ளவும் வல்லாய், சாமாறவனை நீயெண்ணிச் சக்கரத்தால் தலைகொண்டாய்" என்றும், 2. "எல்லியம்போ தினிதிருத்த லிருந்ததோ ரிடவகையில், மல்லிகை மாமாலைகொண்டு அங்கார்த்ததுமோ ரடையாளம்" என்றும் அருளிச்செய்த கதைகள் வியாஸர் வால்மீகி முதலிய முனிவர்களால் ஸாக்ஷாத்கரிக்கப்படாமல் ஆழ்வாரால் மாத்திரம் நிர்ஹேதுக பகவத் கடாக்ஷமடியாக ஸாக்ஷாத்கரிக்கப்பட்டவை என்று நம்பூருவாசாரியர்கள் $ நிர்வஹித்திருப்பதுபோலவே இக்கதையும் ஆழ்வார்களால் மாத்திரம் ஸாக்ஷாத்கரிக்கப்பட்டதென்று பெரியோர் கூறுவர். இனி, இதற்கு இதிஹாஸ புராணங்களில் ஆகரமுண்டேல் கண்டுகொள்க: விரிவும் வல்லார்வாய்க் கேட்டுணர்க.

குறங்கு=இச்சொல் துடைக்குப்பேராயினும் இங்கு இலக்கணையால் மடியை உணர்த்தும். .... (எஎ)

அரணும் நமக்கென்று மாழி வலவன் *
முரனுள் வலம்சுழிந்த மொய்ம்பன் *—சரணாமேல்
ஏதுகதி யேதுநிலை யேதுபிறப் பென்னாதே *
ஓதுகதி மாயனையே யோர்த்து. (எஅ)

ஆழி	திருவாழியாழ்வானை			
வலவன்	வலத்திருக்கையிலுடையவனும்	மொய்ம்பன்		மிடுக்கையுடையவனுமான பெருமான்
முரன்	முராஸுரனுடைய			
நாள்	ஆயுளையும்	சரண் ஆம் ஏல்		ரக்ஷகனாக அமையும் பக்ஷத்தில்,
வலம்	வலிமையையும்			
சுழிந்த	போக்கின			

1. 2—7—8. 2. 3—10—2.

$ பெரியாழ்வார் திருமொழி 5—4—6 பாட்டின் பெரியவாச்சான் பிள்ளை வியாக்கியானம் காண்க.

கதி ஏது நிலை ஏது பிறப்பு ஏது என்றே	(நம்முடைய) ஞானமென்ன !, ஆசாரமென்ன !, ஜன்மமென்ன ! என்று (இவற்றின் தாழ்வுகளைப் பார்த்து) உபேக்ஷியாமல்		(ஓ நெஞ்சமே !,)
		ஓர்த்து	இதை நன்றாக அறிந்து கொண்டு
		மாயனையே	ஆச்சரியமான குண சேஷ்டிதங்களை யுடையனான அப் பெருமானையே
நமக்கு என்றும் அரண் ஆம்	நமக்கு எல்லாக் காலத்திலும் ரக்ஷகனாகவே யிருப்பன் ;	சதி	உபாயமாக
		ஓது	அநுஸந்தித்துக் கொண்டிரு.

* * *—எம்பெருமான் ஸர்வரக்ஷகனென்று பேர்பெற்றாலும் அவனுடைய ரக்ஷகத்வம் எல்லாரிடத்திலும் ஏககாலத்தில் புக மாட்டாது ; தம்மை ரக்ஷித்துக்கொள்வதில் தாமே முயற்சிசெய்து கொள்பவர்கள் எத்தனையோ பேர்களுண்டே ; அப்படிப்பட்டவர்களிடத்தில் அவன் தனது ரக்ஷகத்வத்தைச் செலுத்தியருளான். ஏனெனில், இருகையும் விட்டு 'நீயே சரண்' என்று ஸர்வபாரங்களையும் தன்மேலேறிட்டு, தம் தலையாலே ஒரு முயற்சியும் செய்யவில்லாத ஸ்வரூபஜ்ஞாநிகளையேதான் ரக்ஷித்தருள்வன். "இரு கையும் விட்டேனோ த்ரௌபதியைப்போலே" என்னும்படியாக அவள் ஒரு கையாலே துகிலைப்பற்றிக்கொண்டு ஸ்வப்ரயத்ந நிஷ்டையாயிருந்தவரையில் அவளுடைய ரக்ஷணத்திலே கண்ணபிரான் திருவுள்ளம் செலுத்திற்றிலன்; "கஜ꞉ கர்ஷதே தீரே க்ராஹ꞉ கர்ஷதே ஜலே" [யானை கரைக்கு இழுக்கிறது, முதலை நீர்க்கு இழுக்கிறது] என்னும்படியாக ஸ்ரீகஜேந்திராழ்வான் ஸ்வரக்ஷணத்தில் ஸ்வப்ரவ்ருத்தி பண்ணிக்கொண்டிருந்த வரையில் ஸ்ரீமந்நாராயணன் அவனுடைய ரக்ஷணத்தைத் திருவுள்ளம் பற்றிற்றிலன். இப்படிப்பட்ட உதாஹரணங்கள் பலபல காணலாம். ஆகவே நம்முடைய ரக்ஷணத்தில் நாமும் ஒரு கை பார்ப்போம் என்றிருக்கும்வரையில் எம்பெருமான் உதாஸீநனாகவே இருந்திடுவான். இவ்வர்த்தத்தை "பகவத்ப்ரவ்ருத்திவிரோதிஸ்வப்ரவ்ருத்திநிவ்ருத்தி꞉— ப்ரபத்தி꞉" என்ற வாக்யத்தாலே பூருவர்களும் விளங்க வெளியிட்டருளினர். அதாவது—நம்மை நாம் ரக்ஷித்துக்கொள்வதற்கு முயற்சிசெய்வதானது நம்முடைய ரக்ஷணத்திற்கு உபயோகப்

படுவதில்லை என்கிறமாத்திரமேயன்று; எம்பெருமான் தான் ப்ரவர்த்தித்து நம்மை ரக்ஷிப்பதற்கும் தடையாக நிற்கிறது; அப்படிப்பட்ட ஸ்வப்ரவ்ருத்தியில் நின்றும் நாம் விலகி நிற்பது தான் ப்ரபத்தியாவது, என்றபடி. இந்த ஸத்ஸம்ப்ரதாயப் பொருளை நெஞ்சில் தேக்கிக்கொண்டு இப்பாசுரத்தின் கருத்தை ஊன்றிப்பார்த்தால் நன்கு விளங்கும்.

ஆழிவலவன் சரண்ஆமேல் நமக்கு என்றும் அரணும்=எம் பெருமான் நமக்கு ரக்ஷகனாக அமையும் பக்ஷத்தில் எல்லாக்காலத் திலும் ரக்ஷகனாகவே யிருப்பன், என்றால் இதன் கருத்து என்ன வென்று நோக்கவேணும். நம்மை நாம் ரக்ஷித்துக்கொள்ள முயலு மளவில் அவன் நமக்கு ரக்ஷகனாக அமையான்; ஆதலால் நம்முடைய ரக்ஷணத்தில் நாம் முயல்வதை விட்டிட்டு அவனுடைய ரக்ஷகத்வத் திற்கு அவகாசம் கொடுப்போமாகில் அவன் "என்னுடம்பி லழுக்கை நானே போக்கிக்கொள்ளேனோ" என்கிறபடியே எக் காலத்திலும் ரக்ஷண ஜாகரூகனா யிருந்தருள்வன் என்றவாறு.

அவன் ரக்ஷகனும்போது நம்முடைய உபயோகமற்ற ஞானத் தையும், இகழத்தக்க ஆசாரத்தையும், நிஹீநமான ஜன்மத்தையும் பார்த்து உபேக்ஷித்திடானோ? என்ன; நம்முடைய அத்யவஸாய மொன்றில் மாத்திரம் அவன் திருக்கண் செலுத்துவனேயன்றி மற் றைப்படி நம் ஞானத்திலாவது ஆசாரத்திலாவது ஜன்மத்திலாவது சிறிதும் கண்வையான் என்கிறது "ஏதுகதி ஏது நிலை ஏது பிறப்பென்னுதே" என்பதனால்.

ஆக மூன்றடிகளாலே சிக்ஷித்த அர்த்தத்தை நிகமித்துத் தம் திருவுள்ளத்திற்கு உபதேசிக்கிறார் ஈற்றடியால்.

இரண்டாமடியில் அறியவேண்டிய வரலாறு வருமாறு:—எம் பெருமான் வராஹாவதாரம் செய்து பூமியைக் கோட்டாற்குத்தி யெடுத்தபொழுது, எம்பெருமானுடைய ஸ்பர்சத்தால் பூமிதேவிக் குக் குமாரனாய்ப் பிறந்தவனும் அஸமயத்தில் சேர்ந்து பெறப்பட் டதனால் அஸுரத்தன்மை பூண்டவனுமான நரகனென்பவன் ப்ராக்ஜோதிஷ மென்னும் பட்டணத்தி லிருந்துகொண்டு ஸகல ப்ராணிகளையும் நலிந்து தேவவஸித்த கந்தர்வாதிகளுடைய கன் னிகைகளையும் ராஜாக்களுடைய கன்னிகைகளையும் பற்பலரைப்

பலாத்காரமாய் அபஹரித்துக்கொண்டுபோய்த் தான் மணம்புணர்வதாகக் கருதித் தன் மாளிகையிற் சிறைவைத்து, வருணனது குடையையும் மந்தரகிரிசிகரமான ரத்நபர்வதத்தையும் தேவமாதாவான அதிதிதேவியின் குண்டலங்களையுங் கவர்ந்து போனதுமன்றி, இந்திரனுடைய ஐராவத யானையையும் அடித்துக்கொண்டு போக ஸமயம் பார்த்திருக்க, அஞ்சிவந்து பணிந்து முறையிட்ட இந்திரனது வேண்டுகோளால் கண்ணபிரான் கருடனை வரவழைத்து, பூமிதேவியின் அம்சமான ஸத்யபாமையுடனே தான் கருடன் மேலேறி அந்நகரத்தையடைந்து சக்ராயுதத்தைப் பிரயோகித்து அந்த நரகாஸுரனை யறுத்துத் தள்ளும்போது அவனுக்குப் பக்கபலமாயிருந்த அவனது மந்திரியான முரனையும் மற்றும் பல அசுரர்களையும் முன்னடியே அறுத்துத்தள்ளினன் என்பதாம். இதுபற்றியே எம்பெருமானுக்கு முராரி என்றும் ஒரு திருநாமம் வழங்கும். ... . (எஅ)

ஓர்த்த மனத்தரா யைந்தடக்கி யாராய்ந்து *
பேர்த்தால் பிறப்பேழும் பேர்க்கலாம் *—கார்த்த
விரையார் நறுந்துழாய் வீங்கோத மேனி *
நிரையார மார்வனையே நின்று. (எகூ)

கார்த்த	பசுமையான நிறமுள்ளதாய்
விரை ஆர்	பரிமளம் நிரம்பியதான
நறு துழாய்	செவ்வித் திருத்துழாய் மாலையையுடையவனும்
வீங்கு ஓதம் மேனி	பொங்குங்கடல் போன்ற திருமேனியையுடையவனும்
நிரை ஆரம் மார்வனையே	ஒழுங்கான ஹாரங்களணிந்த திருமார்பையுடையவனுமான பெருமானையே
நின்று	நெஞ்சு நிலைத்து நின்று
ஓர்த்த மனத்தர் ஆய்	அநுஸந்திக்கின்ற மனமுடையராய்
ஐந்து அடக்கி	பஞ்சேந்திரியங்களையும் வென்று
ஆராய்ந்து	ஸம்ஸாரத்தின் கெடுதல்களை ஆராய்ந்து
பேர்த்தால்	ஸம்ஸாரத்தில் நின்றும் நெஞ்சைத் திருப்பிக் கொண்டால்
பிறப்பு எழும்	ஒன்றின்பின் ஒன்றாக நேரக் கூடிய ஜன்ம பரம்பரைகளை
பேர்க்கலாம்	தொலைத்துவிடலாம்.

* * *—கீழ்ப்பாட்டில் "ஓதுகதிமாயனையே யோர்த்து" என்றீர்; இது எப்படி கூடும்? நமது பஞ்சேந்திரியங்களும் சப்தாதிவிஷய க்ராமங்களிலே சென்றுகொண்டிருக்கையாலே நாம் மேன்மேலும் மாறிமாறிப் பலபிறப்பும் பிறக்க வழி தேடுமவர்களாயிருக்கின்றோமேயன்றி உஜ்ஜீவிக்கும் வழி தேடுமவர்களாயிருக்கின்றிலோமே! என்ன; * தோளிணைமேலும் நன்மார்பின்மேலும் சுடர்முடிமேலும் தாளிணைமேலும் புனைந்த தண்ணந்துழாயுடையம்மானது திருமேனியின் போக்யதையிலும் அலங்காரங்களின் அழகிலும் நாம் நெஞ்சைச் செலுத்துவோமாயின் நம்முடைய இந்திரியங்கள் 1. "ஜிஹ்வே கீர்த்தய கேசவம் முரரிபும்......... மூர்த்தந் நமாதோக்ஷஜம்" என்கிறபடியே பகவத் விஷயாநுபவத்திலே ஊன்றி சப்தாதி விஷயங்களின் வழிச்செல்லாமல் ஸம்ஸாரத்தை யடியறுப்பதற்குப் பாங்காகும் என்கிறார். (௭௬)

நின்றெதிராய நிரைமணித்தேர் வாணன் தோள் *
ஒன்றிய வீரைஞ்ஞூ றுடன்துணிய *—வென்றிலங்கும்
ஆர்படுவான் நேமி யரவணையான் சேவடிக்கே *
நேர்படுவான் தான்முயலும் நெஞ்சு. (௮௦)

நின்று	(கூசாமல்) முன்னே வந்து நின்று	வென்று	வெற்றி பெற்று
எதிர் ஆய	எதிரியாய்ப் போர் செய்ய வந்தவனும்	இலங்கும்	விளங்குகின்ற
நிரை மணி தேர்	ஒழுங்காக அழுத்தின மணிகளையுடைய தேரின்மேலேறியுள்ளவனுமான	ஆர்படு	கூர்மையையுடைய
வாணன்	பாணாஸுரனுடைய	வான்	திவ்யமான
ஒன்றிய ஈர் ஐஞ்ஞூறு தோள்	அடியுரமுள்ள ஆயிரந்தோள்களும்	நேமி	திருவாழியாழ்வானையுடையவனாய்
உடன்	ஏககாலத்தில்	அரவு அணையான்	சேஷசாயியான எம்பெருமானுடைய
துணிய	அறுப்புண்டு விழும்படியாகக் காரியஞ் செய்து	சே அடிக்கே	திருவடிகளிலே
		நேர்படுவான்	அணுகுவதற்காக
		நெஞ்சு தான்	(எனது) நெஞ்சு தானே
		முயலும்	உத்ஸாஹப் படுகின்றது.

1. முகுந்தமாலை.

* * *—தம்முடைய நெஞ்சு எம்பெருமான் திருவடிகளிற் சென்று சேர உத்ஸாஹங் கொண்டபடியை அருளிச்செய்கிறார்.

நின்று எதிராய=தாமஸதெய்வத்தைப் பணிந்தவனுகையாலே ஸர்வேச்வரனென்று மதியாதே எதிரிட்டு நின்றுனென்ப.

வாணன் தோளீரைஞ்ஞூறு துணித்த வரலாறு :— பலிசக்ரவர்த்தியின் ஸந்ததியிற் பிறந்தவனுன பாணுஸுரன் ஒரு காலத்தில் சிவபிரானது நடனத்தைக்கண்டு அதற்குத் தனது இரண்டு கைகளால் மத்தளந்தட்ட, சிவபெருமான் அருள்கூர்ந்து அவனுக்கு ஆயிரங் கைகளேயும் நெருப்புமதிளேயும் அளவிறந்த வலிமையையும் மிக்க செல்வத்தையும் தான் தனது பரிவாரங்களோடு அவன் மாளிகை வாசலிற் காவல்செய்திருத்தல் முதலிய வரங்களேயுந் தந்தருளினன் ; அந்த பாணுஸுரனுடைய பெண்ணுகிய உஷையென்பவள், ஒரு நாள் ஒரு புருஷனேடு தான் கூடியதாகக் கனுக்கண்டு, முன் பார்வதி அருளியிருந்தபடி அவனிடத்தில் மிக்க ஆசைபற்றியவளாய்த் தன் உயிர்த்தோழியான சித்ரலேகைக்கு அச்செய்தியைத் தெரிவித்து, அவள் மூலமாய் அந்தப் புருஷன் க்ருஷ்ணனுடைய பௌத்திரனும் ப்ரத்யும்நனது புத்திரனுமாகிய அநிருத்தனென்று அறிந்துகொண்டு, 'அவனேப் பெறுதற்கு உபாயம் செய்யவேண்டும்' என்று அத்தோழியை வேண்ட, அவள் தன் யோகவித்தை மஹிமையினுல் த்வாரகைக்குச் சென்று அநிருத்தனேத் தூக்கிக்கொண்டுவந்து அந்தஃபுரத்திலே விட, உஷை அவனேடு போகங்களே அநுபவித்துவர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த அந்த பாணுஸுரன் தன் சேனேயுடன் அநிருத்தனே எதிர்த்து மாயையினுற் பொருது நாகாஸ்த்ரத்தினுற் கட்டிப் போட்டிருக்க, த்வாரகையிலே அநிருத்தனேக் காணுமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்தபோது, நாரதமாமுனிவனுல் இவ்வரலாறு சொல்லப்பெற்ற ஸ்ரீக்ருஷ்ணபகவான், பெரியதிருவடியை நினேத்தருளி, உடனே வந்துநின்ற அக்கருடாழ்வானது தோளின்மேல் ஏறிக்கொண்டு பலராமன் முதலானுரோடுகூட பாணபுரமாகிய சோணிதபுரத்துக்கு எழுந்தருளும்போதே, அப்பட்டணத்தின் ஸமீபத்திற் காவல் செய்துகொண்டிருந்த சிவபிரானது ப்ரமதகணங்கள் எதிர்த்துவர, அவர்களே யெல்லாம் அழித்து

பின்பு சிவபெருமானால் ஏவப்பட்டதொரு ஜ்வரதேவதை மூன்று கால்களும் மூன்று தலைகளு முள்ளதாய் வந்து பாணனைக் காப் பாற்றும்பொருட்டுத் தன்னோடு யுத்தஞ் செய்ய, தானும் ஒரு ஜ்வரத்தையுண்டாக்கி இதன் சக்தியினாலே அதனைத்துரத்திவிட்ட பின்பு, சிவபிரானது அநுசரராகையாற் பாணாஸுரனது கோட்டை யைச் சூழ்ந்துகொண்டு காத்திருந்த அக்நிதேவர் ஐவரும் தன் னோடு எதிர்த்துவர, அவர்களையும் த்வம்ஸம்பண்ணி, பாணாஸுர னோடு போர்செய்யத் தொடங்க அவனுக்குப் பக்கபலமாகச் சிவ பெருமானும் ஸுப்ரஹ்மண்யன் முதலிய பரிவாரங்களுடன் வந்து எதிர்த்துப் போரிட, கண்ணன் தான் ஜ்ரும்பணாஸ்த்ரத்தைப் பிர யோகித்துச் சிவனை ஒன்றுஞ் செய்யாமற் கொட்டாவி விட்டுக் கொண்டு சோர்வடைந்துபோம்படி செய்து, ஸுப்ரஹ்மண்யனை யும் கணபதியையும் ஹுங்காரங்களால் ஒறுத்து ஓட்டி, பின்னர், அனேகமாயிரஞ் சூரியர்க்குச் சமனான ஸுதர்சநாழ்வானை யெடுத் துப் பிரயோகித்து அப்பாணனது ஆயிரந்தோள்களையும் தாரை தாரையாய் உதிரமொழுக அறுத்து அவனுயிரையுஞ் சிதைப்பதாக விருக்கையில் பரமசிவன் அருகில்வந்து வணங்கிப் பலவாறு பிரார்த் தித்ததனால் அவ்வாணனை நான்கு கைகளோடும் உயிரோடும் விட் டருளி, பின்பு அவன் தன்னைத் தொழுது அநிருத்தாழ்வானுக்கு உஷையைச் சிறப்பாக மணம்புரிவிக்க, கண்ணபிரான் திருவுள்ள முகந்து த்வாரகைக்கு மீண்டெழுந்தருளினன் என்ற வரலாறு அறியத்தக்கது.

ஆயிரந்தோள்களில் நான்கு தோள்கள் அறுக்கப்படாமல் விடப்பட்டாலும், பெருந்தொகையில் நாலைந்து குறைந்தாலும் மிகுந்தாலும் பெருந் தொகையையிட்டே வழங்கும் முறைமை பற்றி 'ஈரைஞ்ஞூறு துணிய' எனப்பட்ட தென்க.

'ஆர்படு' என்பதற்கு 'கூர்மையை யுடைத்தான' என்றும் 'அரங்களையுடைத்தான' என்றும் பொருள் கொள்ளலாம். நேமி— வடசொல். ... . (அ0)

நெஞ்சால் நினைப்பரியனேலும் * நிலைப்பெற்றேன்
நெஞ்சமே பேசாய் நினைக்குங்கால் *—நெஞ்சத்துப்
பேராதுநிற்கும் பெருமானை யென்கொலோ *
ஓராது நிற்ப துணர்வு. (அக)

என் நெஞ்சமே	எனது மனமே!,	நினைக்குங் கால்	நாம் ஒருகால் நினைத்தாலும்
நெஞ்சால் நினைப்பு அரியன் எலும்	(எம்பெருமான்) நெஞ்சாலும் நினைக்க முடியாத பெருமை வாய்ந்தவனே யாயினும்	நெஞ்சத்து	நெஞ்சுதன்னிலே
(அவனுடைய பெருமையை நினையாமல் ஸௌலப்யத்தையே நினைத்து)		போராது நிற்கும்	விட்டுநீங்காமல் நிலைத்து நிற்கின்ற
நிலைபெற்று	காலூன்றி நின்று	பெருமானை	எம்பெருமானை
பேசாய்	அவனைப்பேசப்பார்;	உணர்வு	நமது நெஞ்சானது
		ஓராது நிற்பது என்கொலோ	அநுஸந்தியாமல் வாளாவிருப்பது ஏனோ?

* * *—இதில் முன்னடிகளிரண்டும் நெஞ்சை விளித்து உபதேசிப்பன; பின்னடிகளிரண்டும் தம்மில்தாம் வருந்திச் சொல்லிக்கொள்வன. என்னெஞ்சமே! (அவன்) நெஞ்சால் நினைப்பரியனேலும் நிலைப்பெற்றுப் பேசாய்=மனமே! அப்பெருமானுடைய ஐச்வரியம் சிந்திக்கவும் முடியாததாகையாலே 'இப்படிப்பட்ட பரமேச்வரனை நாம் எங்ஙனே பேசுவது?' என்று பின்வாங்கப் பாராமல், அவனது எளிமைக் குணங்களை நினைத்தாகிலும் கூசாமல் நிலைநின்று பேசப்பார் என்றபடி.

இப்படி உபதேசித்தவளவிலும், நெஞ்சானது அவனுடைய பரத்வத்தையே நினைத்துக் கூசிநிற்பது கண்டு, "நினைக்குங்கால் நெஞ்சத்துப் பேராது நிற்கும் பெருமானை உணர்வு ஓராது நிற்பது என்கொலோ?" என்கிறார். நாம் ஒருகால் நினைத்துவிட்டாலும் அதையே வியாஜமாகக்கொண்டு நம் நெஞ்சைவிட்டுப் போராமல் ப்ரதிஷ்டிதனாயிருக்கும் பரமஸுலபனான பெருமானை நெஞ்சானது நினைக்கக் கூசுகின்றதே! இஃது என்ன பாவமோ! என்றவாறு.

உணர்வு என்ற சொல்—ஞானத்திற்கு வாய்த்தலையான நெஞ்சைச் சொல்லுகிறது இங்கு. "விஜ்ஞாநம் யஜ்ஞம் தநுதே" என்ற உபநிஷத்தை நினைப்பது.

கீழ்ப்பாட்டில் "அரவணையான் சேவடிக்கே நேர்படுவான் தான் முயலும் நெஞ்சு" என்று அருளிச்செய்தவர் அடுத்த இப்பாட்டில் இங்ஙனே அருளிச் செய்யக் காரணமென்? என்று சங்

கிக்கக்கூடும் ; கேண்மின் ; தம்முடைய நெஞ்சு பகவத்விஷயத்திலே அவகாஹித்தபடியைக் கீழ்ப்பாட்டிற்கூறினது உண்மையே ; அந்த பகவத் விஷயத்தின் பெருமையைப் பார்த்தவாறே அதற்குத் தகுந்தவளவான ப்ராவண்யம் உண்டாகவில்லையாக நினைத்து 'பகவத் விஷயத்தில் நாம் இன்னம் அடியிடவேயில்லை போலும்' என்று தோன்றி இப்பாட்டருளிச் செய்தாரென்க. ஒருவன் வித்வானாயிருந்தாலுங்கூட இன்னமும் கற்றுணரவேண்டிய கல்விகளின் எல்லையில்லாமையை நினைக்குங்கால் 'நாம் என்னகற்றோம் ; ஓரக்ஷரமும் கற்றிலோம்' என்னும்படியா யிருக்குமன்றோ ; அது போலக் கொள்க.

இவ்வர்த்தத்தைப் பெரியவாச்சான் பிள்ளை அருளிச்செய்கிற அழகு காண்மின்;—"கீழ், ஸம்ஸாரிகளுக்கில்லாதது தமக்குண்டானவாறே நெஞ்சு பகவத்விஷயத்திலே மண்டிற்றென்று கொண்டாடினார் ; விஷயத்தைப் பார்த்தவாறே அடியிட்டிலராயிருந்தார்." என்று. ... . (அக)

உணரி லுணர்வரிய னுள்ளம் புகுந்து *
புணரிலும் காண்பரிய னுண்மை *—இணரணையக்
கோங்கணைந்து வண்டறையும் தண்டுழாய்க் கோமானை *
எங்கணைந்து காண்டுமினி. (அஉ)

உணரில்	(அப்பெருமானை நாமாக) அறியப் பார்த்தாலும்
உணர்வு அரியன்	(அவன்) அறியக் கூடாதவன் ;
	(அவன்தானே)
உள்ளம் புகுந்து புணரிலும்	நெஞ்சிலே வந்து புகுந்து சேர்ந்தாலும்
உண்மை காண்பு அரியன்	உள்ளபடி அறியக் கூடாதவன் ;
இனி	இப்படியான பின்பு,
இணர் அணைய	பூங்கொத்துகள் தாழும்படியாக
கொங்கு	தேனிலே
வண்டு	வண்டுகள்
அணைந்து	வந்துகிட்டி (மதுவைப்பருகி)
அறையும்	ரீங்காரம் செய்யப்பெற்ற
தண்	குளிர்ந்த
துழாய்	திருத்துழாய் மாலையை அணிந்துள்ளவனான
கோமானை	அப்பெருமானை
எங்கு	எவ்விடத்தில்
அணைந்து	கிட்டி
காண்டும்	காணக்கடவோம்.

* * *—கீழ்ப்பாட்டில், "நினைக்குங்கால் நெஞ்சத்துப் போராது நிற்கும் பெருமானை உணர்வு ஓராது நிற்பது என்கொலோ!" என்று வருந்தினார்; இங்ஙனே நாம் வருந்துவது ஏதுக்கு? ஒருவர்க்கும் ஒருவகையாலும் அறியவொண்ணாதபடியன்றோ அப்பெருமானுடைய ஸ்வரூபமிருப்பது: விஷயம் அப்படியிருக்கும்போது வீணாக நெஞ்சை நொந்துகொள்வதில் பயனென்? இனி அவனை நாம் கிட்டிக்காணும் விரகு என்னோ! என்று தம்மில்தாம் குழைகின்றார்.

'உணரில் உண்மையுணர்வரியன்; உள்ளம்புகுந்து புணரிலும் உண்மை காண்பரியன்'=நம்முடைய முயற்சியாலே அவனுடைய உண்மை காணமுடியாதது என்பது மாத்திரமேயல்ல; "தாம் தம் பெருமையறியார்" என்றும் "தனக்குந்தன் தன்மையறிவரியான்" என்றுஞ் சொல்லுகிறபடியே அவன்றனக்கும் அறிய நிலமல்லாத உண்மையை அவன்றானும் நமக்கு அறிவிக்கவல்லனல்லன் என்றவாறு.

இணர்—பூங்கொத்து. எங்கு—எவ்விதமாக என்றுமாம். (அஉ)

இனியவன்மாய னெனவுரைப்பரேலும் *
இனியவன் காண்பரியனேலும் *—இனியவன்
கள்ளத்தால் மண்கொண்டு விண்கடந்த பைங்கழலான் *
உள்ளத்தி னுள்ளே யுளன். (அங)

இனி	இப்போது	மண் கொண்டு	பூமிதானம் வாங்கி
அவன்	'அந்தஸர்வேச்வரன்	விண் கடந்த பை கழலான் அவன்	ஆகாசம் முதலிய மேலுலகங்களையும் ஆக்ரமித்துக் கொண்ட பரந்த திருவடிகளையுடையனான அப்பெருமான்
மாயன்	மாயைக்காரன்'		
என	என்று		
உரைப்பர் ஏலும்	சொல்லுவார்களேயாகிலும்,		
இனி	இப்போது	இனி	இப்போது
அவன்	அப்பெருமான்		
காண்பு அரியன் ஏலும்	கண்டு அநுபவிக்கக் கூடாதவனேயாகிலும்	உள்ளத்தின் உள்ளே உளன்	எனது ஹ்ருதயத்தினுள்ளே (வேறிடமறியாமே) நிலைத்து நிற்கின்றான்.
கள்ளத்தால்	க்ருத்ரிம வேஷத்தினால் (மாவலி பக்கலிலே சென்று)		(இந்த பரமலாபமே போது மென்கை.)

* * *—எம்பெருமான் பெரிய மாயக்காரன் என்று பலர் சொல்லுவர்கள்; அதாவது 1. "வந்தாய்போலே வாராதாய் வாராதாய்போல் வருவானே!" என்னுமாபோலே—கரைபுரண்ட மாநஸாநுபவ மாத்திரத்தினால் கைக்கு எட்டினவனாக நினைக்கலாம் படியிருந்தும், 'ஒருநாளும் அவன் கைக்கு எட்டமாட்டான்' என்றிருக்கச் செய்தேயும் ஸ்வேச்சையாலே வந்து கைக்கு எட்டியும் இப்படி மாயாவியாயிருப்பவன் என்பர்கள்; மற்றுஞ் சிலர் 'அப்பெருமான் ஒருகாலும் ஒருவர்க்கும் காணமுடியாதவன்' என்பர்கள்; யார் எப்படி சொன்னாலும் எனக்கென்ன; அவன் மாயாவியாகவே யிருக்கட்டும், காண்பரியனாகவே யிருக்கட்டும்; தன் உடைமையைப் பெறுகைக்குத் தான் யாசகனாய்ச் சென்று அரிய பெரிய காரியஞ்செய்த அவன் என்னை மறக்க வொட்டாதபடி என் ஹ்ருதயத்திலே வந்து புகுந்துவிட்டான்; இனி அவனுடைய ஸ்வரூபம் எப்படிப்பட்டதா யிருந்தால் எனக்கென்ன? என்கிறார். ... ... (௮௫)

உளனாய நான்மறையி னுட்பொருளை * உள்ளத்
துளனாகத் தேர்ந்துணர்வரேலும் *—உளனாய
வண்டாமரை நெடுங்கண் மாயவனை யாவரே *
கண்டா ருகப்பர் கவி. (௮௬)

நால் மறையின்	நான்கு வேதங்களினுடைய	நெடு கண்	நீண்ட திருக்கண்களையுடைய
உள் பொருள்	உள்ளுறை பொருளாக	மாயவன்	ஆச்சர்யபூதனாக
உளனாயவனை	இருக்கின்ற எம்பெருமானை	உளனாயவனை	இருக்கின்ற அப்பெருமானை
தேர்ந்து	(ஜ்ஞாநயோகத்தாலே) ஆராய்ந்து	கண்டார் யாவரே	கண்டு அநுபவிக்கப் பெற்றார் யாவர்? (ஒருவருமில்லை;)
உள்ளத்து உளன் ஆக	நெஞ்சிலே பொருந்தியிருப்பவனாக	கவி உகப்பர்	தோத்திரக் கவிகளை உகந்து வாயாற் சொல்லிக் கொண்டு போது போக்குவர்களத்தனை.
உணர்வர் ஏலும்	(சில ஞானிகள்) அறிய வல்லாரென்றாலும்,		
வண் தாமரை	அழகிய தாமரைப் பூப்போன்ற		

1. திருவாய்மொழி 6—10—9.

* * *—வேதங்களினால் அறியக்கூடியவனான எம்பெருமான் என்னெஞ்சிலுள்ளான் என்னெஞ்சிலுள்ளான் என்று ஒவ்வொருவரும் சொல்லிக் கொண்டிருக்கலாமத்தனை யன்றி அப்புண்டரீகாக்ஷனை நேரே கண்ணாற் கண்டவர் யாவர்? யாருமில்லை. அப்படியானால் எத்தனையோ பக்தர்கள் 'கண்டேனே, கண்டேனே' என்று சொல்லக் காண்கிறோமே, அஃது என்ன? என்று கேட்கில்; உவப்பினால் கவி சொல்லி விடுகிறார்களித்தனை யல்லது வேறில்லை—என்கிறார்.

எம்பெருமானைக் கண்டேனென்று சொல்லிக் கொண்டால் அதனால் தங்களுக்கொரு ஸந்தோஷம் விளைகிறபடியால் கண்டேன் கண்டேனென்று பலரும் கவிப்பாக்கள் கூறுகின்றவளவால் பரம்பொருளை மெய்யே கண்டார்களல்லர் என்றவாறு.

முதலடியில் "உட்பொருளை" என்ற விடத்துள்ள இரண்டாம் வேற்றுமை யுருபைப்பிரித்து 'உளனாய' என்பதோடு கூட்டி யுரைக்கப்பட்டது. மேலிடத்தும் இங்ஙனமே. ... (அச)

கவியினார் கைபுனைந்து கண்ணார் கழல்போய் *
சேவியினார் கேள்வியராய்ச் சேர்ந்தார் *—புவியினார்
போற்றியுரைக்கப் பொலியுமே * பின்னைக்காய்
ஏற்றுயிரை யட்டா னெழில். (அரு)

கவியினார்	தோத்திரக்கவிகளைச் சொல்லுபவராய்க்கொண்டு
கை புனைந்து	அஞ்ஜலிபண்ணி
கண்	தமது கண்கள்
ஆர் கழல் போய்	(அவனது) விலக்ஷணமான திருவடிகளிலே சென்று சேரப்பெற்று
செவியின் ஆர் கேள்வியர் ஆய்	காதுநிறைந்தகேள்விகளை யுடையராய்க் கொண்டு
சேர்ந்தார்	வந்து பணிந்தவர்களான
புவியினார்	பூமியிலுள்ளாரெல்லாரும்
போற்றி உரைக்க	(ஒன்றுகூடிப்) போற்றியுரைத்தாலும்,
பின்னைக்காய் ஏறு உயிரை அட்டான் எழில் பொலியுமே	நப்பின்னைப் பிராட்டிக்காக ரிஷபங்களினுயிரை மாய்த்த பெருமானுடைய அழகு சிறப்புறச் சொல்லப்பட்டதாகுமோ?.

* * *—கீழ்ப்பாட்டில் "மாயவனை யாவரே கண்டார்" என்று பரம்பொருளை உள்ளபடியே காணப்பெற்றாருமில்லை யென்றார்; உள்ளபடியே பேசப்பெற்றவர்களாவது உண்டோவென்ன; இப்பூமியிலுள்ளாரடங்கலும் ஒன்று கூடிப் பேசினாலும் சிறப்புறப்பேசித் தலைக்கட்டலாம்படி யிராது எம்பெருமானுடைய குணசேஷ்டிதங்கள்—என்கிறாரிதில்.

வாயால் பலபல ஸ்தோத்திரங்களைச் சொல்லிக்கொண்டும் கைகளைக் கூப்பிக்கொண்டும் கண்களை வேறொரு விஷயத்திலும் செலுத்தாது அவனது திருவடித்தாமரைகளிலேயே செலுத்திக் கொண்டும் "ஶ்ருத்வா கதா²: ஶோத்ரய! கேஶவஸ்ய" என்கிறபடியே அப்பிரானது புண்யகீர்த்திகளையே செவிமடுத்துக் கொண்டும் இப்பூமியிலுள்ளாரடங்கலும் வந்து பணிந்து எல்லாருமொன்றுசேர்ந்து போற்றியுரைத்தாலும், கண்ணபிரான் நப்பின்னைப் பிராட்டிக்காக ரிஷபங்களை முடித்திட்டு மணக்கோலமும் பெருமிடுக்குமாக நின்ற அழகு பேச்சுக்கு நிலமாகுமோ? என்றவாறு.

பின்னைக்கா யேற்றுயிரை யட்ட வரலாறு:—கும்பனென்னும் இடையர் தலைவனது மகளும், நீளாதேவியின் அம்சமாகப் பிறந்ததனால் நீளா என்ற பெயரால் வழங்கப்பட்டு வருபவளுமான நப்பின்னைப் பிராட்டியை மணஞ்செய்து கொள்ளுதற்காக அவள் தந்தை கந்யாசுல்கமாகக் குறித்தபடி யாவர்க்கும் அடங்காத அஸுராவேசம் பெற்ற ஏழு எருதுகளையும் கண்ணபிரான் ஏழு திருவுருக்கொண்டு சென்று வலியடக்கி அப்பிராட்டியை மணஞ் செய்து கொண்டனன் என்பதாம். ... . (அ௫)

எழில்கொண்ட மின்னுக் கொடியெடுத்து * வேகத்
தொழில்கொண்டு தான்முழங்கித் தோன்றும் *—எழில்கொண்ட
நீர்மேக மன்ன நெடுமால் நிறம்போல *
கார்வானம் காட்டும் கலந்து. (அ௬)

எழில் கொண்ட	அழகையுடைத்தாய்	எழில் கொண்ட மின கொடி எடுத்து	அழகிய மினனற்கொடி படரப்பெற்று
நீர்	நீர்நிறைந்ததான		
மேகம் தான்	மேகமானது		

வேகம் தொழில் கொண்டு	வேகமாகத் திரிதலாகிற வியாபாரத்தைச் செய்யப்பெற்று
முழங்கி தோன்றும்	கர்ஜித்துக்கொண்டு விளங்குதற்கிடமான
கார் வானம்	கார்காலத்து ஆகாசமானது
அன்ன நெடுமால் நிறம் போல கலந்து காட்டும்	அப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருநிறத்தை அநுகரித்திராநின்றது.

* * *—எம்பெருமானுடைய அழகானது ஒருவருடைய பேச்சுக்கு நிலமன்றாகிலும் பேசாதிருக்க முடியாதன்றோ; 'திருவடி அப்படியிருக்கிறது; திருக்கண் இப்படியிருக்கிறது' என்றாற் போலே உவமையிட்டாவது சொல்லிக்கொண்டுதானே யிருக்க வேண்டும்: ஆகவே உபமாந முகத்தால் எம்பெருமானது வடிவைப் பேசி அநுபவிக்கிறார் இப்பாட்டாலும் மேற்பாட்டாலும்.

கார்காலத்து ஆகாசமானது எம்பெருமானுடைய திருமேனி நிறத்தைக் கோட் சொல்லித் தருகின்றது. கார்காலத்து ஆகாசம் எங்ஙனே யிருக்குமென்றால், அழகிய நீர் கொண்டெழுந்த மேகம் மின்னற் கொடியோடு சேர்ந்து வேகமாகத் திரிந்துகொண்டிருக்கவும் கர்ஜித்துக் கொண்டிருக்கவும் பெற்றிருக்கும். எம்பெருமானுடைய காளமேகம்போன்ற திருமேனியும் மின்னற்கொடி போன்ற பெரிய பிராட்டியாரோடு கூடியும், ஸ்ரீ கஜேந்திராழ்வான் போன்ற ஆர்த்தர்களான ஆச்ரிதர்களைக் காத்தருள்வதற்கு வேகமாக ஓடித்திரிந்துகொண்டும், 'ஆனைவரும் பின்னே, மணியோசைவரும் முன்னே' என்கிறாப்போலே அன்பர்களிடம் தான் வருவதற்குமுன்னமே அறிகுறியாக முழக்கத்தைச் செய்து கொண்டிராநின்ற ஸ்ரீபாஞ்சஜந்யத்தை யுடைத்தாகியுமிருக்கும். ஆகவே இங்குச்சொன்ன உபமாநோபமேயபாவம் நன்கு பொருந்துமென்க.

மின் + கொடி ; மின்னுக்கொடி ; புணர்ச்சியில் உகரச்சாரியை பெற்றது. 'மின்னலைக் கொடியாக வெடுத்து' என்றும் பொருள் கொள்ளலாம். முதலடியில் "எழில்கொண்டு" என்ற (வினையெச்சமான) பாடம் பெரும்பான்மையாக வழங்கிவந்தாலும் அது பெரிய வாச்சான்பிள்ளை வியாக்கியானத்திற்கு இணங்காது: "எழிலை

யுடைத்தான மின்னை" என்பது வியாக்கியான வாக்கியமாதலால் "எழில்கொண்ட" என்ற (பெயரெச்சமான) பாடமே பொருந்தும். ... . (அசு)

கலந்து மணியிமைக்கும் கண்ணா * நின்மேனி
மலர்ந்து மரதகமே காட்டும் *—நலந்திகழும்
கொந்தின்வாய் வண்டறையும் தண்டுழாய்க் கோமானை *
அந்திவான் காட்டு மது. (அஎ)

மணி கலந்து	ஸ்ரீகௌஸ்துப மணியோடுகூடி
இமைக்கும்	விளங்காநின்ற
கண்ணா	கண்ணபிரானே !
மரதகம்	மரதகரத்னமானது
மலர்ந்து	ஒளிப்பரப்பை யுடைத்தாய்க் கொண்டு
நின் மேனி காட்டும்	உனது திருமேனியை ஒத்திராநின்றது;
நலம் திகழும்	அழகாக விளங்குகின்ற
கொந்தின் வாய்	கொத்துக்களிலே
வண்டு அறையும்	வண்டுகள் ரீங்காரம் செய்யப்பெற்ற
தண் துழாய்	திருத்துழாய் மாலையணிந்த
கோமானை	ஸர்வேச்வரனாகிய உன்னை
அந்தி வான் அது காட்டும்	ஸந்தியாகாலத்து ஆகாசமானது ஒத்திராநின்றது.

* * *—இப்பாட்டும் உபமானமுகத்தால் அநுபவிப்பதாம். குருமாமணிப்பூண்குலாவித்திகழுந் திருமார்புடைய பெருமானே! மரதகப் பச்சையானது உனது பச்சைமாமலை போன்றமேனியைக் கோட்சொல்லித் தருகின்றது; பசுகுபசுகென்ற திருத்துழாய் மாலை யணிந்திருக்குமழகை ஸந்த்யாராக ரஞ்ஜிதமான ஆகாசம் காட்டுகின்றது என்கிறார். திருத்துழாயின் பசுமையும் "கைவண்ணந் தாமரை வாய் கமலம்போலும் கண்ணிணையுமரவிந்தம் அடியு மஃதே" என்னும்படியான திவ்யாவயவங்களிற் சிவப்புமான பர பாக சோபையை அந்திவான் காட்டுமென்றபடி.

கோமானை = முன்னிலையில்வந்த படர்க்கை.

ஓரடைவிலே இப்பாசுரத்தை அழகிய மணவாளச்சீயர் உபந்யஸித்தருளுமளவில், இதற்கு இங்ஙனேயும் பொருள் சொல்லலாமென்று அருளிச்செய்தபடி;—கண்ணா! நின்மேனியை மரதகமே

மலர்ந்துகாட்டும்; கலந்து மணியிமைக்குந் தண்டுழாய்க் கோமானை வுன்னை அந்திவான் காட்டும் என்று யோஜித்து, பச்சைமாமலைபோல் மேனியானது ஸமுதாயரூபேண மரதகப் பச்சைபோல் விளங்காநின்றது; அதற்குமேல் திருவாபரண ரத்நப்ரபையும் திருத்துழாய் சோபையுமான அழகை உற்று நோக்குங்கால் அந்திவான் போன்றிருக்கின்றது-என்று. "வாக்யபேதஸ்ய கௌரவாத்" என்கிற வடமொழியாளரின் நியாயம் தென்மொழியிலு முண்டாதலால், முதலடியிலுள்ள "**கலந்து மணியிமைக்கும்**" என்றதை மேலே அந்வயித்தல் சாலும். (அஎ)

அதுநன் றிதுதீதென் றையப்படாதே *
மதுநின்ற தண்டுழாய் மார்வன் *—போதுநின்ற
பொன்னங் கழலே தொழுமின் * முழுவினைகள்
முன்னங் கழலும் முடிந்து. (அஅ)

அது நன்று இது தீது என்று ஐயம் படாதே	'அது நல்லதோ? இது கெட்டதோ?' என்று ஸந்தேஹப்பட்டுக் கொண்டிராமல்	பொன் அம் கழலே	விரும்பத்தக்க அழகிய திருவடிகளையே
மது நின்ற தண் துழாய் மார்வன்	தேன்நிறைந்த தண்டுழாய் மாலையைத் திருமார்பிலணிந்த பெருமானுடைய	தொழுமின்	தொழுங்கோள்;
பொது நின்ற	ஸர்வஜந ஸாதாரணமான		(அப்படி தொழுதால்)
		முன்னம்	முந்துறவே
		முழு வினைகள்	ஸமஸ்த பாபங்களும்
		முடிந்து	உருமாய்ந்து
		கழலும்	விட்டு நீங்கும்.

* * *—உலகத்தாரை நோக்கி யுரைக்கிறார். நன்மை தீமைகளைப் பகுத்துணரு முணர்வு உங்களுக் கில்லாமையினால் 'எது நல்லது, எது தீயது' என்று ஸந்தேஹப்பட்டுக் கொண்டே காலங் கழிப்பதைத்தவிர்ந்து, 'பகவத் விஷயத்தில் ப்ராவண்யங் கொண்டிருப்பதே நன்று, ஸம்ஸாரத்தில் ஆசை கொண்டிருப்பது தீது' என்று உங்கட்கு நான் சொல்லும் விஷயத்தைத் திடமாகநம்பி, ஆச்ரித ரக்ஷணத்திற்குத் தனிமாலை யிட்டிருக்கு மெம்பெருமானுடைய ஸர்வஸாதாரணமான திருவடிகளைத் தொழுங்கோள்;

தொழுதால் உங்களுடைய பாபங்களெல்லாம் தொலைந்து போம் என்கிறார்.

முதலடிக்குப் பொருள் ;—அது—பகவத்விஷயமானது, நன்று—நல்லது ; இது—ஸம்ஸாரமானது, தீது—பொல்லாதது ; என்று—என்று நான் சொல்லுமிவ்விஷயத்தில், ஐயப்படாதே— என்னவுமாம்

போதுநின்ற = 'தேவாநாம்தாநவாநாஞ்ச ஸாமாந்யமதிதைவதம்' என்னப்பட்ட எம்பெருமானுடைய திருவடிகள் ஸர்வஸாதாரண மென்னத் தட்டுண்டோ? ராவணசிசுபாலாதிகளு முட்பட வந்து பணிந்தால் அங்கீகரிக்க ஸித்தமாயிருக்குந் திருவடிகளிறே.

முழுவினைகள் முன்னம் கழலும் = தொழவேணுமென்று நினைத்தமாத்திரத்தில் பாவங்கள் தொலையுமென்கை. 'முடிந்து' என்றதனால் அப்பாவங்கள் வேறொருவரிடத்திற் போய்ச்சேர்வதற்கில்லாமே உருமாய்ந்து ஒழியுமென்பது பெறப்படும். .... (அஅ)

முடிந்தபொழுதில் குறவாணர் * ஏனம்
படிந்துழுசால் பைந்தினைகள் வித்த *— தடிந்தெழுந்த
வேய்ங்கழைபோய் விண்திறக்கும் வேங்கடமே * மேலொருநாள்
தீங்குழல்வாய் வைத்தான் சிலம்பு. (அகூ)

முடிந்த பொழுதில் குறவாணர்	மரணமடையும் நிலைமையிலுள்ள கிழவர்களான குறவர்கள்
ஏனம் படிந்து உழு சால்	காட்டுப்பன்றிகள் (தங்கள் செருக்காலே மூங்கில்கள் வேர்பறிந்து விழும்படி) படிந்து உழுத சால்களிலே
பை தினைகள் வித்த	புதிய தினைவிதைகளை விதைக்க
தடிந்து	அறுத்துப்போட்ட பின்பும்
எழுந்த	(நிலவளத்தினால்) ஓங்கிவளர்ந்த

வேய்ங்கழை	மூங்கில் தடிகளானவை
போய்	மேலேசென்று
விண் திறக்கும்	ஆகாசத்தை யளாவப்பெற்ற
வேங்கடம்	திருவேங்கடம்
மேல் ஒருநாள்	முன்பொருநாள்
தீம் குழல்	மதுரமான புல்லாங்குழலை
வாய் வைத்தான்	திருப்பவளத்தில் வைத்து ஊதின கண்ணபிரானுடைய
சிலம்பு	திருமலையாம்.

* * *—திருமலையின் நிலவளத்தையும் ஓக்கத்தையும் ஒரு சமத்காரமாகப் பேசுகிறாரிதில். தேன் திரட்டுதல், வேட்டையாடி மிருகங்களைப் பிடித்துவருதல் முதலியன குறவர்களின் தொழிலாகும்; இத்தொழில்கள் நல்லவயதிலுள்ள குறவர்கட்குச் செய்ய இயலுமேயன்றி, கிழக்குறவர்கட்குச்செய்ய இயலா. ஆகவே அவர்கள் கிருஷியினால் ஜீவிக்கப் பார்ப்பர்கள்; அது தன்னிலும் தாங்களே உழுது பயிரிடுதலும் அவர்கட்கு இயலாது. கலப்பை பிடித்து உழமாட்டாத முடிந்தபோழ்திற்குறவாணராதலால். பின்னை அவர்கள் என் செய்வார்களென்னில்; திருமலையிற் சில பாகங்களிலே காட்டுப்பன்றிகள் தங்கள் செருக்குக்குப் போக்கு வீடாக மூங்கில்கள் வேர் பறியுண்டு விழத் தள்ளி அந்நிலங்களை மூக்காலே உரோசி ஒருசால் உழுதுவைக்கும்; அத்தகைய நிலங்களிலே இக்கிழக்குறவர்கள் தினைகளை விதைத்து ஜீவிப்பார்கள். ஏற்கனவே பன்றிகள் தள்ளியிட்டிருந்த மூங்கில்கள் பயிர்க்குக் களையாக வொண்ணாதென்று அவற்றை இக்குறவர்கள் நன்றாகக் களைந்து போட்டுவிட்டுப் போனாலும் அவை நிலப்பண்பினால் பண்டு போலவே வளர்ந்து ஆகாசத்தை அளாவுகின்றனவாம். இப்படிப்பட்ட நிலவளம் வாய்ந்த திருமலை முன்பு ஸ்ரீக்ருஷ்ணனாய்த் திருவவதரித்து வேணுகானம் பண்ணின பெருமான் வாழுமிடம்— என்றாயிற்று.

குறவர் தங்கள் சாதித்தொழிலை விட்டு க்ருஷியில் இறங்கினதற்குக் காரணங் கூறுவது போலும் 'முடிந்தபோழ்தின்' என்ற அடைமொழி. சரமதசையிலே யிருக்கின்ற குறவர் என்கை. வாணர்—வாழ்நர்; குறவராக வாழ்பவர்கள் என்கை. சால்= 'ஒருசால் உழுதது, இரண்டுசால் உழுதது' என்று உலகவழக்க முள்ளமை உணர்க.

சிலம்பு—மலைக்குப் பெயர். .... (அகூ)

சிலம்பும் செறிகழலும் சென்றிசைப்ப * விண்ணா
றலம்பிய சேவடிபோய் * அண்டம்—புலம்பியதோள்
எண்டிசையும் சூழ இடம்போதாதென்கொலோ *
வண்டுழாய் மாலளந்த மண். (கூ0)

சிலம்பும்	(திருவடிகளில் சாத்தின) நூபுரங்களும்
செறி கழலும்	செறிவாக அணிந்த வீரத்தண்டைகளும்
சென்று இசைப்ப	எங்கும் ஒலிக்க
விண் ஆறு	ஆகாசகங்கையிலே
அலம்பிய	விளக்கப்பட்ட
சே அடி	திருவடிகளானவை
அண்டம் போய்	அண்டபித்தியளவும் நீண்டு போனபோது,
புலம்பிய	(அனைவராலும்) துதிக்கத் தக்க
தோள்	திருத்தோள்கள்
எண் திசையும் சூழ	எட்டுத் திசைகளையும் வியாபிக்க
இடம் போதாது	இடம் போரவில்லை;
வண் துழாய் மால்	அழகிய திருத்துழாய் மாலையணிந்த எம்பெருமான்
அளந்த	அளந்துகொண்ட
மண்	பூமியானது
என கொல்	என்ன பெரிது! [சிறியதே போலும்.]

* * *—கீழ்ப்பாட்டில், திருமலையில் மூங்கிற்பணைகளின் வளர்த்தியைச்சொன்ன ப்ரஸங்கத்தாலே உலகளந்த பெருமானுடைய திருத்தோள்களின் திருவளர்த்தி நினைவுக்குவர, அதனைப் பேசி யநுபவிக்கிறார் இதில். எம்பெருமானளந்த இப்பூமண்டலம் மிகப்பெரிது என்கிறார்களே, அப்படி பெரிதாக எனக்குத்தோன்றவில்லை; அவன் உலகளந்த காலத்து எண்டிசையும் விம்மவளர்ந்த திருத்தோள்கள் நெருக்குண்ணாமல் விசாலமாக அடங்கியிருப்பதற்கு இடம் போதவில்லையே; அப்படியிருக்க, "பெரிது பெரிது புவனம் பெரிது" என்கிறார்களே, இது என்கொல் என்கிறார்.

"வண்டுழாய் மாலளந்தமண்" என்றவிடத்து 'அளந்த' என்பதை 'அளந்தது' என்றதன் குறையாகக்கொண்டும் உரைக்கலாம்: வண்டுழாய்மால் மண்அளந்தது என்கோலோ=அளப்பதாவது அடியை மாறிமாறியிட்டுச் செய்யவேண்டுவது; திருத்தோள் வளர்த்திக்கே இடம் போரவில்லையென்றால் எம்பெருமான் மண்ணளந்தானென்று எப்படி சொல்லமுடியும்? என்கை. (௯௦)

மண்ணுண்டும் பேய்ச்சி முலையுண்டு மாற்றாதாய் *
வெண்ணெய் விழுங்கவெகுண்டு * ஆய்ச்சி—கண்ணிக்
கயிற்றினால் கட்டத் தான் கட்டுண்டிருந்தான் *
வயிற்றினோடாற்றா மகன். (௯௧)

வயிற்றினோடு ஆற்றா மகன	வயிற்றைக் கொண்டு ஆறியிருக்க மாட்டாத (கண்ணனாகிற) பிள்ளை யானவன	விழுங்க	(களவுசெய்து) விழுங்கின அளவிலே
		ஆய்ச்சி	யசோதைப் பிராட்டி
		வெகுண்டு	கோபங்கொண்டு
மண் உண்டும்	(பிரளயத்தில்) உலகங்களை யெல்லாம் அமுதுசெய்தும்	கண்ணி கயிற்றினால்	பல முடிச்சுகளை யுடைய தாம்பினால்
பேய்ச்சி	பூதனையினது	கட்ட	உரைக்கக் கட்டிப் போட,
முலை	(நஞ்சு தீற்றின) முலையை	தான	ஸர்வசக்தனான தான்
உண்டும்	அமுது செய்தும்		
ஆற்றாதாய்	த்ருப்தி பெறாதவனாய்	கட்டுண்டு இருந்தான	(அதற்கொரு பரிஹாரம் செய்து கொள்ளமாட்டாமல்) கட்டுண்டிருந்தான்.
வெண்ணெய்	வெண்ணெயை		

* * *—எம்பெருமானுடைய சில லீலைகளை அநுபவித்துப் பேசுகிறார். இதில் "வயிற்றினோடாற்றாமகன்" என்றருளிச் செய்த அழகை என்சொல்வோம். எத்தனை பொருள்களையிட்டு நிரப்பினாலும் நிரம்பாதே 'இன்னமும் ஏதேனும் கிடைக்குமோ? இன்னமும் ஏதேனும் கிடைக்குமோ?' என்றே எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் வயிறுகையாலே அதை வைத்துக்கொண்டு பரிக்க மாட்டாத மகன் என்றவாறு. அவன் இப்படிப்பட்ட வயிறு படைத்தவனென்பது எங்ஙனே தெரிகின்றதென்ன, முன்னடிகளிலருளிச்செய்கிறார். உலகங்களையெல்லாம் அமுதுசெய்து பார்த்தான்; அதிலும் வயிறு த்ருப்திபெறவில்லை; பெற்றதாய்போல் வந்தபேய்ச்சியின் பெருமுலையைச் சுவைத்துண்டுபார்த்தான்; அதிலும் த்ருப்திபெறவில்லை; ஆய்ச்சிகள் உறிகளிலே சேமித்து வைத்த வெண்ணெயெல்லாம் வாரியுண்டான்; ஒன்றிலும் த்ருப்தி பெற்றிலன்; வெண்ணெய் களவுசெய்த குற்றத்திற்காகக் கண்ணி நுண் சிறுத்தாம்பினால் கட்டுண்டதொன்றினால் த்ருப்திபெற்றானத்தனை.

கண்ணபிரான் வெண்ணெய் களவுசெய்கிற தன்னை யசோதைப்பிராட்டி அடிக்கடி தாம்பினால்கட்டி வருத்துகின்றாளென்று

வீட்டிலுள்ள கயிற்றையெல்லாம் துண்டுதுண்டாக அறுத்துவைத்திட்டுப் பின்பே வெண்ணெய் திருடப்போவன் ; அவள் இவனைப் பிடித்துக்கொண்ட பின்பு துண்டுதுண்டான அக்கயிற்றையெல்லாம் ஒன்றோடொன்று முடிபோட்டு ஒரு தாம்பு வடிவமாக்கி அதுகொண்டு கண்ணனைக்கட்டுவள் ; ஆனதுபற்றிக் கயிற்றுக்குக் **கண்ணி** என்ற அடைமொழி கொடுக்கப்பட்டது. இப்படிப்பட்ட தாம்பினால் கட்டும்போது தன் உடம்புக்கு எட்டம் போராதபடியான அத்தாம்பினால் தன்னைக் கட்டமுடியாதபடி எளிதில் தன்னைத் தப்புவித்துக்கொள்ள வல்லவனாயினும், தனது ஸௌசீல்யம் ஸௌலப்யம் ஆச்ரித பாரதந்திரியம் முதலிய சீலங்களை வெளியிடுவதற்கென்றே பரத்வநிலையைத் தவிர்ந்து மநுஷ்ய ஸஜாதீயனாக அவதரித்திருக்கிற தான் உரலோடு கட்டுண்டிருக்கை முதலிய இவ்வகைகளினால்தான் அக்குணங்களை விளங்கச்செய்துகொள்ளவேணுமென்று கொண்டு, ஒரு சுற்றுக்குப் போராத தாம்பு இரண்டு மூன்று சுற்றுக்குப் போரும்படி உடம்பைச் சுருக்கி அமைத்துக் கொள்வனாதலால் இது தோன்றக் "கட்டுண்டிருந்தான்" எனப்பட்டது.

வெகுண்டு—இத்தனை வெண்ணெயை வாரியுண்டால் ஜரிக்குமோ என்று சீற்றங்கொண்டு. .... (௬௧)

மகனொருவர்க் கல்லாத மாமேனி மாயன் *
மகனா மவன்மகன்றன் காதல்—மகனை *
சிறைசெய்த வாணன்தோள் செற்றான் கழலே *
நிறைசெய்தென் நெஞ்சே நினை. (௬௨)

என் நெஞ்சே — என் மனமே!,
ஒருவற்கு மகன் அல்லாத — (கருமமடியாக) ஒருவனுக்கும் மகனாகப் பிறக்கத் தகாத [ஸர்வலோக பிதாவான]
மா மேனி — சிறந்த திருமேனியையுடைய
மாயன் — ஆச்சர்யபூதனாய்
மகன் ஆம் அவன் — (வஸுதேவர்க்குப்) பிள்ளையாகப் பிறந்தவனாய்
மகன் தன் — தனது மகனான ப்ரத்யும்நனுடைய
காதல் மகனை — இஷ்ட குமாரனான அநிருத்தாழ்வானை
சிறை செய்த — சிறையிலே வைத்த

வாணன்	பாணாஸுரனுடைய	கழலே	திருவடிகளையே
தோள்	தோள்களாயிரத்தையும்	நிறை செய்து	பூர்த்தியாக
செற்றான்	அறுத்தொழித்தவனான பெருமானுடைய	நினை	சிந்தை செய்வாயாக.

* * *—எம்பெருமானென்னில் தாயும், தந்தையுமா யிவ்வுலகினில் வாழுமீசன்; அவன் ஸகலலோக பிதாவாய்க் கொண்டு எல்லாரையும் தனக்கு மக்களாக வுடையவனேயன்றித் தான் ஒருவற்கும் மகனாயிருக்கத் தக்கவனல்லன்; அஸ்மதாதிகளைப் போலே கருமங்காரணமாக அவன் பிறவாவிடினும் "அஜாயமாநோ பஹுதா விஜாயதே। தஸ்ய தீரா: பரிஜாநந்தி யோநிம்." என்கிறபடியே அநுக்ரஹம் காரணமாகப் பலபலயோனிகளிலும் பிறக்குமடைவிலே நந்தன்மகனாக ஒரு பிறவி பிறந்தான்; அப்பிறவியில், "பஶ்யதி புத்ரம் பஶ்யதி பௌத்ரம்॥" என்றாற் போலே தனக்கொரு மகனும் அவனுக்கொரு மகனும் ஆகப் பேரன்வரையில் பெற்றுவிட்டான் [தனமகன்-ப்ரத்யும்நன்; அவனதுமகன்-அநிருத்தன்.] பாணாஸுரனுடைய பெண்ணாகிய உஷையென்பவள் ஒருநாள் அவ்வநிருத்தனோடே தான் கூடியிருந்ததாகக் கனாக்கண்டு தனது தோழியான சித்திரலேகையின் யோகவித்தை மஹிமையினால் அவனை த்வாரகையில் நின்றும் தூக்கிக்கொண்டுவரச் செய்து அவனோடு போகங்களை அநுபவித்துக்கொண்டுவர, இச்செய்தியைக் காவலாளராலறிந்த பாணாஸுரன் தன் ஸேனையுடன் அநிருத்தனை எதிர்த்து மாயையினாலேபொருது நாகாஸ்திரத்தினாற் கட்டிப் போட்டிருக்க, த்வாரகையிலே அநிருத்தனைக்காணாமல் யாதவர்களெல்லாருங் கலங்கியிருந்தபோது நாரதமுனிவனால் சமாசாரமறிந்த கண்ணபிரான் பெரியதிருவடியின் மேலேறிக் கொண்டு பலராமன் முதலானாரோடு பாணபுரத்திற்கு எழுந்தருளிக் கார்த்திகையானுங் கரிமுகத்தானும் கனலும் முக்கண் மூர்த்தியும் மோடியும் வெப்பும் முதுகுகாட்டிப்போகும்படி செய்து சக்ராயுதத்தைப் பிரயோகித்துப் பாணனது தோள்களையும் தாரைதாரையாய் உதிரமொழுக அறுத்தான்; அப்படிப்பட்ட எம்பெருமானுடைய திருவடிகளையே தமது திருவுள்ளத்தில் நிறைத்துக்கொள்ள விரும்பினாராயிற்று. .... (கூஉ)

நினைத்துலகி லார்தெளிவார் நீண்ட திருமால் *
அனைத்துலகு முள்ளொடுக்கி யால்மேல் *—கனைத்துலவு
வெள்ளத்தோர் பிள்ளையாய் மெள்ளத் துயின்றானை *
உள்ளத்தே வை நெஞ்சே யுய்த்து. (௯௫)

நெஞ்சே	ஓ மனமே!,	ஆல் மேல்	ஆலந்தளிரின் மேலே
நீண்ட	(முன்பு உலகங்களை அளப்பதற்காக) வளர்ந்த	மெள்ள துயின்றானை	மெள்ள சயனித்துக் கொண்டவனு மான பெருமானை
திரு மால்	ச்ரிய: பதியானவனும்	உய்த்து	சரணமாக அநுஸந்தித்து
கனைத்து உலவு வெள்ளத்து	கோஷித்துக் கொண்டு எங்கும் பரந்த பிரளய வெள்ளத்திலே	உள்ளத்தே வை	தியானிக்கக் கடவாய்;
		உலகில்	இவ்வுலகத்தில்
ஓர் பிள்ளை ஆய்	ஒப்பற்ற சிறு குழந்தையாய்	நினைத்து	(அப்பெருமானை) அநுஸந்தித்து
அனைத்து உலகும்	உலகங்களை யெல்லாம்	ஆர் தெளிவார்	தெளிவுபெறுவார் ஆரேனு முண்டோ? (ஒருவரு மில்லையே.)
உள் ஒடுக்கி	திருவயிற்றினுள்ளே அடக்கி		

* * *—"ஸதைகரூப-ரூபாய" என்கிறபடியே எம்பெருமான் எப்போதும் ஒருபடிப்பட்டவனென்றிருந்தாலும் கருமமடியாக அவனது வடிவுக்கு ஸங்கோச விகாஸங்களில்லை என்றதத் தனையொழிய, அநுக்ரஹமடியாக வுண்டாகும் ஸங்கோச விகாஸங்களுக்குத் தடைசெய்வாரில்லை. இந்திரனுடைய கண்ணீரைத் துடைப்பதற்காகப் பெரியவடிவாய் வளர்ந்து உலகளந்தான்; உலகத்தாரெல்லாருடையவும் கண்ணீரைத் துடைப்பதற்காக மிகச்சிறிய குழவியுருவாய்க் கொண்டு உலகுண்டான். ஆகவிப்படி ஆச்ரிதர்களுக்காகச் சிறுத்தும் பெருத்தும் வடிவுகொள்ளுகிற எம்பெருமானுடை சீலத்தைநினைத்து 'இவனே நமக்கு ரக்ஷகன்' என்று தெளிவு பெற்றிருப்பார் இவ்வுலகில் யாருமில்லையே!; நெஞ்சே! அக்குறை தீர நீயாகிலும் அநுஸந்திப்பாயோ வென்கிறார்.

நீண்ட திருமால்=அப்ரமேயமான பெருமைபொருந்திய திருமால் என்னவுமாம். ... ... (கூங)

உய்த்துணர் வென்னு மொளிகொள் விளக்கேற்றி *
வைத்தவனை நாடி வலைப்படுத்தேன் *—மெத்தெனவே
நின்றா னிருந்தான் கிடந்தானென் னெஞ்சத்து *
பொன்றாமை மாயன் புகுந்து. (கூச)

உய்த்து உணர்வு என்னும்	விவேக வுணர்ச்சியாகிற	பொன்றாமை	குறைவின்றி
ஒளி கொள் விளக்கு	உஜ்வலமான தீபத்தை	என் நெஞ்சத்து	என்னுடைய ஹ்ருதயத்திலே
ஏற்றி	ஏற்றி	புகுந்து	வந்துசேர்ந்து
அவனை நாடி வைத்து	அவ்வெம் பெருமானைத் தேடிப்பிடித்து	மெத்தென	மெதுவாக
வலைப் படுத்தேன்	ஸ்வாதீனப்படுத்திக் கொண்டேன்;	நின்றான்	(முதலில்) நின்றான்;
மாயன்	அப்பெருமான்	இருந்தான்	(பிறகு) வீற்றிருந்தான்;
		கிடந்தான்	(அதன் பிறகு) பள்ளிகொண்டருளினான்.

* * *—கீழ்ப்பாட்டில் "உள்ளத்தேவை நெஞ்சே! உய்த்து" என்றபடியே பலிக்கப் பெற்றமை பேசுகிறாரிதில். இருளிலே கிடக்கும்பொருளை விளக்கினொளியைத் துணைகொண்டு கண்டுபிடிப்பது போல, இருள் தருமாஞாலத்தில் ஒருவராலும் கண்டுபிடிக்கமுடியாத எம்பெருமானாகிற பரம்பொருளை ஞானமாகிற சிறந்த விளக்கின் ஸஹாயத்தினால் தேடிக் கண்டுபிடித்து நெஞ்சாகிற வலைக்குள்ளே இருத்திவிட்டேன்; அப்பெருமான் அவ்விடம்விட்டுப் பெயர்ந்து போக மாட்டாமையாலே நெஞ்சுதன்னிலேயே சற்று நிற்கிறான் சற்று வீற்றிருக்கிறான், சற்று சயனிக்கிறான்; ஆக நிற்றலிருத்தல் கிடத்தல்களெல்லாம் அவனுக்கு என்னெஞ்சினுள்ளே யாயிற்று என்கிறார்.

உலகத்திற்காணும் விளக்குக்கு எண்ணெய் திரி முதலியவற்றின் சேர்க்கையினால் அழுக்கேறுதலுண்டு; ஞானமாகிற விளக்கு அங்ஙனன்றியே நிர்மலமாயிருக்கு மென்பதைக்காட்டும் 'ஒளி கொள்' என்ற அடைமொழி.

ஊரகமும் பாடகமும் வெஃகாவும் பட்டபாடு படுகிறது என்னெஞ்சு என்கிறார்போலும் பின்னடிகளில்.

போன்றமை—நான் நசித்துப் போகாதபடியாக என்றுமாம்; ஹ்ருதயத்தினுள்ளே நிற்றலிருத்தல் கிடத்தல்களுக்கு விச்சேதமில்லாதபடியாக என்றுமாம். ... ... (கூச)

புகுந்திலங்கு மந்திப் பொழுதத்து - * அரியா
யிகழ்ந்த விரணியன தாகம் *—சுகிர்ந்தெங்கும்
சிந்தப் பிளந்த திருமால் திருவடியே *
வந்தித்தென் னெஞ்சமே வாழ்த்து. (கூரு)

அந்தி புகுந்து	ஸாயங்காலமானது வந்துசேர்ந்து
இலங்கும் பொழுதத்து	விளங்கும் ஸமயத்திலே
அரி ஆய்	நரஸிம்ஹ மூர்த்தியாய்த் திருவவதரித்து,
இகழ்ந்த இரணியனது ஆகம்	நிந்தித்துக் கொண்டிருந்த ஹிரண்யாஸுரனது சரீரத்தை
சுகிர்ந்து	பலகூறாக வகிர்ந்து
எங்கும் சிந்த	(ரத்தம்) எங்கும் சிந்தும்படியாக
பிளந்த	பிளந்தொழித்த
திரு மால்	எம்பெருமானுடைய
திரு அடியே	திருவடிகளையே
என் நெஞ்சமே	எனது மனமே!
வந்தித்து வாழ்த்து	தலையாரவணங்கி வாயாரவாழ்த்து.

* * *—பரமபக்தனான ப்ரஹ்லாதாழ்வானுக்குப் பகைவனாய் நின்று அவனையும் தன்னையும் இகழ்ந்த இரணியனது மார்பை உதிரமொழுகப் பிளந்த திருமாலின் திருவடியையே வாழ்த்துமாறு நெஞ்சுக்கு உரைக்கிறார்.

இரணியன் தான் சாவாமலிருக்குமாறு வரம்வேண்டிக் கொள்ளும்போது, 'இன்ன இன்ன இடங்களில், இன்ன இன்ன காலங்களில் இன்ன இன்ன கருவிகளால் இன்ன இன்ன பிராணிகளால் இறக்கக்கடவேனல்லேன்' என்று தனித்தனி குறிப்பிட்டு வரம் வேண்டிக் கொண்டனனாதலால் அந்தவரத்தில் அடங்காத ஸமயத்தில் அவனைக்கொல்லக்கருதிய திருமால் அந்திப்பொழுதிலே கொன்றனென்க. அந்த ஸமயத்தைச் சிறப்பித்துச் சொல்லவேண்டுவது ஆவச்யகமாதலால் "புகுந்திலங்கு மந்திப்பொழுதத்து" என்றார்.

அரியாய்='அரி' என்பதைத் தற்சம வடசொல்லாகக்கொண்டால் இரணியனுக்கு அடைமொழியாக அந்வயிக்கும்; (வடமொழியில் அரி என்னுஞ்சொல் விரோதியென்னும் பொருளது.) பகவத் பாகவத விரோதியாய்க் கொண்டு தூஷித்து வந்த இரணியன் என்றதாகிறது. இனி, சிங்கமென்னும் பொருளதான ஹரி என்ற வடசொல் அரியெனத் திரிந்ததாகக் கொண்டு 'நரசிங்க மூர்த்தியாகி' என்று எம்பெருமானிடத்து அந்வயித்தலும் பொருந்தும்.

சிந்த=ரத்தவெள்ளம சிந்தும்படியாக: (அன்றியே) உடல் சிந்நபிந்நமாம்படியாக என்றுமாம். .... (சுரு)

வாழ்த்திய வாயராய் வானோர் மணிமகுடம் *
தாழ்த்தி வணங்கத் தழும்பாமே *—கேழ்த்த
அடித்தாமரை மலர்மேல் மங்கை மணாளன் *
அடித் தாமரையா மலர். (சுசு)

கேழ்த்த அடி	பெருத்த தாளையுடைய	வாழ்த்திய வாயர் ஆய்	வாயால் வாழ்த்துகின்ற வாய்க்கொண்டு
தாமரை மலர் மேல்	தாமரைப்பூவிற் பிறந்த	மணி மகுடம்	மணிகளழுத்தின மகுடத்தை
மங்கை	பெரிய பிராட்டிக்கு	தாழ்த்தி	தாழவிட்டு
மணாளன்	வல்லபனான எம் பெருமானுடைய	வணங்க	வணங்குவதனால்
அடி ஆம் தாமரை அலர்	திருவடிகளாகிற தாமரைப் பூக்களை	தழும்பு ஆமே	(அத்திருவடிகள்) தழும்பேறிக் கிடக்கின்றனவே.
வானோர்	தேவர்		

* * *—"வடிவிணையில்லா மலர்மகள் மற்றை நிலமகள் பிடிக்கும் மெல்லடி" என்கிறபடியே புஷ்பஹாஸஸுகுமாரமான திருக்கைகள் படைத்த பிராட்டிமார் பிடித்தாலும் கூசிப்பிடிக்க வேண்டும்படி அவ்வளவு ஸுகுமாரமான திருமால் திருவடிகள்—ஸர்வகாலமும் நித்யஸூரிகள் தமது மணிமகுடங்களைச் சாய்த்து வணங்கப் பெறுதலால் தழும்பாமே என்று வயிறு பிடிக்கிறார்.

பொய்கையாழ்வார் "தழும்பிருந்த தாள் சகடஞ்சாடி" என்று—கிருஷ்ணாவதாரத்தில் சகடத்தைச் சீறி உதைத்ததனால் திருவடி தழும்பேறப் பெற்றதாக அருளிச்செய்தார்; நித்யஸூரிகள் நித்தியம் வணங்குவதால் தழும்பேறி விடுவதாக இவ்வாழ்வாரருளிச்செய்கிறார். கிரீடங்கள் பட்டுப்பட்டுத் திருவடிகள் காய்ப்பு காய்த்தல் தகும்

ஸ்ரீகுணரத்நகோசத்தில் ஸ்ரீரங்க நாச்சியாருடைய திருவடிகளின் ஸௌகுமார்யத்தை வருணிக்கப்புகுந்த பட்டர்—"வாஸாம்போஜ வஸம்ஜஸ்தஸம் ப்ருகுதுஹிதுஸ்திரமோபந்தராயாஸ்தந்தஸ்மாதாப்யஸ்யு ஸம்தீப்ய ஸுதநதுஸ்யா ஹஸ்த லீலாரவிந்தம் ஸந்தோஷம் ஸ்ரீஸ்ருதி ஸ்ரீஸ் ஸக்ஷ்ம தந்தாயிஸ்வம் வாவாஸஸுவிதிலக்ஷம்." [பெரியபிராட்டியாரே! நீர் வஸிக்குமிடமான தாமரைப்பூவின் துகள் திருவடியை நோவு படுத்துகின்றது; தோழிமார் வைத்தகண் வாங்காமே பார்த்துக் கொண்டிருத்தலால் திருமேனி வாடுகின்றது; அதற்குமேல் லீலார்த்தமாக ஒரு தாமரைப்பூவை நீர் திருக்கையில் ஏந்திநிற்பது தானும் பெரியஸாஹஸத் தொழிலாயிராநின்றது; அதற்குமேல் வனமாலையோடுகூட நீர் எம்பெருமானது திருமார்பில் ஊசலாடுவது 'கஷ்டம் கஷ்டம்!' என்னத்தக்கது.] என்று அந்த ஸௌகுமார்யத்தை அற்புதமாக அருளிச்செய்தமை காண்க. அப்படியிருக்கும்போது "வானோர்மணிமகுடம் தாழ்த்தி வணங்கத்தழும்பாமே" என்றவிது அதிசயோக்தியாகா தென்க. ஸ்வபாவோக்தியே.

தழும்பாமே=இப்படி ஓயாமல் வானோர் வணங்கிக் கொண்டிருந்தால் திருவடிகள் தழும்பேறி விடாதோ என்கிறாரென்றுமாம்.

தழும்பு—காய்ப்பு. .... (கசு)

அலரெடுத்த வுந்தியா னாங்கெழி லாய *
மலரெடுத்த மாமேனி மாயன் *—அலரெடுத்த
வண்ணத்தான் மாமலரான் வார்சடையானென்று * இவர்கட்
கெண்ணத்தானாமோ விமை. (கள)

அலர் எடுத்த உந்தியான்	தாமரைப்பூ ஓங்கி யிருக்கப்பெற்ற திருநாபியை யுடையவனும்
எழிலாய மலர் எடுத்த	அழகிய காயாம் பூப்போன்ற
மா மேனி	கரிய திருமேனியை உடையனுமான
மாயன்	எம்பெருமான்,—
அலர் எடுத்த வண்ணத் தான்	காஞ்சிமலர்போன்ற நிறத்தை யுடையனுன இந்திரனென்ன
மா மலரான்	தாமரைப்பூவிற் பிறந்த பிரமனென்ன
வார் சடையான்	நீண்ட ஜடையை யுடையனுன சிவனென்ன
என்ற இவர்கட்கு	ஆகிய இத் தேவர்கட்கு
இமை	சற்றேனும்
எண்ணத் தான் ஆமோ	நெஞ்சால் நினைக்க வுங் கூடியவனே.

* * *—"ஸப்ரஹ்மாஸஶிவஸ்ஸேந்த்ர:" என்று வேதத்தில் சிறப்பித்துக் கூறப்படுகின்ற பிரமன் சிவனிந்திரன் முதலானுர்க்கும் சிந்தைக்கும் கோசரமல்ல னெம்பெருமான் என்கிறுர்.

முதலடியில் அலர் என்றது தாமரைப்பூவைச் சொல்லுகிறது; எம்பெருமானது திருநாபியில் தாமரைப்பூவுள்ளது ப்ரஸித்தமே. இனி இரண்டாமடியில் மலர் என்றது காயாம்பூவைச் சொல்லுகிறது; எம்பெருமானது திருமேனிநிறம் காயாம்பூ வண்ணமென்பதும் ப்ரஸித்தமே.

இனி "அலரெடுத்த வண்ணத்தான்" என்று இந்திரனுக்கு வாசகமானவிதனில் அலர் என்றது காஞ்சிமலரைச் சொல்லுகின்றதென்றுணர்க. திருவிளையாடற்புராணம்—திருவாலவாய்க் காண்டம்—தருமிக்குப் பொற்கிழியளித்தபடலத்தில் (பன்னிரண்டாவது செய்யுள்)—"செங்கதிர் மேனியான் போலவிழ்ந்தன செழும்பலாசம், மங்குலூர்ச் செல்வன்போல மலர்ந்தன காஞ்சி, திங்கட் புங்கவன் போலப் பூத்த பூஞ்சினை மரவம், செங்கையங்கதிராழியான்போ லலர்ந்தன விரிந்தகாயா." என்றதில் இரண்டாமடியில் இந்திரனது நிறம் காஞ்சிமலர் நிறமென்று காட்டப்பட்டிருத்தல் காண்க. (மங்குலூர்ச் செல்வன்—மேகவாஹனனுன இந்திரன்.) காஞ்சிமலரென்பது கறுத்தபயறு நிறங்கொண்டிருக்குமென்று கூறுவர். ... (கஎ)

இமஞ்சூழ் மலையு மிருவிசும்புங் காற்றும் *
அமஞ்சூழ்ந் தறவிளங்கித் தோன்றும் *—நமஞ்சூழ்
நரகத்து நம்மை நணுகாமல் காப்பான் *
துரகத்தை வாய்பிளந்தான் தொட்டு. (கூ௭)

இமம் சூழ் மலையும்	பனியாலே சூழப்பட்டிருக்கிற இமயமலையையும்
இரு விசும்பும்	பெரிய ஆகாயத்தையும்
காற்றும்	வாயுவையும்
அமம் சூழ்ந்து	(பருமனாலும் உயர்த்தியாலும் வேகத்தாலும்) திரஸ்கரித்து
அற விளங்கி தோன்றும்	மிகவும் விளங்கிக் கண்ணெதிரே வந்து தோன்றின
துரகத்தை	குதிரைவடிவு கொண்டு வந்த கேசியென்னு மசுரனை
தொட்டு	திருக்கையால் பற்றி
வாய் பிளந்தான்	(அவனது) வாயைக் கிழித்துப்போட்ட பெருமான்
நம்மை	நம்மை
நமன் சூழ் நரகத்து நணுகாமல் காப்பான்	யமனைத் தலைவனாகக் கொண்ட நரகத்திலே புகவொட்டாமல் ரக்ஷித்தருள்வன்.

* * *—க்ருஷ்ணாவதாரத்தில் தன்னை விழுங்கிக் கொல்லுமாறு கம்ஸனாலேவப்பட்டு மிகப் பெரிய குதிரைவடிவங் கொண்டு வந்த கேசியென்னு மஸுரனை வாய்பிளந்தொழித்த கண்ணபிரானே நரகத்தில் நின்றும் நம்மைக் காத்தருள்வனென்கிறார். முன்னடிகளிரண்டும் அவ்வசுரக் குதிரைக்கு அடைமொழி. பருமனில் மலையை வென்றிருந்ததாம்; உயர்த்தியில் ஆகாயத்தை அதிக்ரமித்திருந்ததாம்; வேகத்தில் (அல்லது, வலிமையில்) வாயுவை வென்றிருந்ததாம். 'மலை' என்று பொதுவாகச் சொன்னால் போராதோ, 'இமஞ் சூழ்மலை' என்று விசேஷித்துச் சொல்லுவானேன்? என்னில்; ஸப்தகுலபர்வதங்களில் இமயமலை முதலிற் கணக்கிடப்பட்டிருப்பதால் இதனை உபலக்ஷணமாகக் கொண்டு குலாசலங்களேழையுங் கொள்ளவேணு மென்பதற்காக வென்க.

அமஞ்சூழ்ந்து = அமமாவது நோய்; மலையும் விசும்பும் காற்றும் நோவுபடும்படியாக, எனவே இவற்றைத் திரஸ்கரித்து மேலாக விளங்குகின்ற குதிரை என்றதாம். துரகம்—வடசொல்; வேகமாகச் செல்வது என்று காரணக் குறி. ... ... (கூஅ)

தோட்டபடை யெட்டும் தோலாத வென்றியான் *
அட்ட புயகரத்தா னந்நான்று *—குட்டத்துக்
கோள்முதலை துஞ்சக் குறித்தெறிந்த சக்கரத்தான் *
தாள்முதலே நங்கட்குச் சார்வு. (கக)

தொட்ட	ஏந்தின	குட்டத்து	நீர்ப் பொய்கையிலே
படை எட்டும்	எட்டு திவ்யாயுதங்களாலும்	கோள் முதலை துஞ்ச	மிடுக்குடைய முதலை முடியும்படியாக
தோலாத	தோல்வி யடையாத	குறித்து எறிந்த சக்கரத்தான்	இலக்குத் தப்பாமல் பிரயோகிக்கப் பட்ட திரு வாழியை யுடைய பெருமானது
வென்றியான்	ஜய சீலனும்		
அட்டபுய கரத்தான்	கச்சித் திருவட்டபுய கரத் திருப்பதியி லுள்ளவனும்	தாள் முதலே	பாதமூலமே
அந்நான்று	முன்பொரு காலத்தில்	நங்கட்கு	எங்களுக்கு
		சார்வு	பரமப்ராப்யம்.

* * *—இப்பாட்டும் மேற்பாட்டும் சாத்துப் பாசுரங்கள் திருக்கச்சிமாநகரில் திருக்கோயில் கொண்டிருக்கும் அஷ்டபுஜத் தெம்பெருமான் திருவடிகளே சரணம் என்கிறார். **தோட்டபடை யெட்டும் தோலாத வென்றியான்**=திருமங்கையாழ்வார் பெரிய திருமொழியில் திருவட்டபுயகரத் தெம்பெருமானை மங்களாசாஸநஞ்செய்யும் திருப்பதிகத்தில்—(2–8–3) "செம்பொ னிலங்கு வலங்கை வாளி திண்சிலை தண்டொடு சங்க மொள்வாள், உம்பரிருசுட ராழியோடு கேடக மொண்மலர் பற்றியெற்றே,.....அட்ட புயகரத்தே னென்றாரே" என்ற பாசுரம் இங்கு அநுஸந்திக்கத் தகும். 1. வாளி, 2. சிலை, 3. தண்டு, 4. சங்கம், 5. வாள், 6. ஆழி, 7. கேடகம், 8. மலர், ஆக திவ்யாயுதங்க ளெட்டையும் திருவுள்ளம் பற்றித் தோட்டபடை யெட்டும் என்கிறாரிங்கு. இப்படைகளைக்கொண்டு எங்கும் வெற்றியே பெற்றுவருவானென்கிறது. இவற்றைத் தரிக்குமிடத்து ஒரு ஆயாஸமின்றியே பூவேந்திநிற்போலே ஏந்தியிருப்பது தோன்ற, 'தோட்ட' எனப்பட்டது.

அட்டபுயகரத்தான்=அட்ட புயகரத்திலுள்ளவன் என்று பொருள். 'அஷ்டபுஜன்' என்பது எம்பெருமானுடைய திருநாமம். எட்டுத்திருக்கைகளையுடையவன் என்று பொருள். க்ருஹம்

என்னும் வடசொல் கரமெனத்திரியும்; ஆகவே, அஷ்டபுஜனுடைய க்ருஹம்—அட்டபுயகரம். (திவ்யதேசத்தைச் சொன்னபடி.) அவ்விடத்திலுள்ளவன் என்றதாயிற்று. 'அட்ட புயவகரம்' என்பது அட்டபுயகரம் என மருவிற்றென்றலும் பொருந்தும். அகரமாவது அக்ரஹாரம். திவ்யதேசத்தை முன்னிட்டே எம்பெருமானைப் பேசவேண்டுமென்னும் நியதி ஆழ்வார்கட்கு உள்ளதாதலால் 'அஷ்டபுஜன்' என்னுமல் 'அட்டபுயகரத்தான்' என்ன வேண்டிற்றென்ப.

குட்டத்துக் கோள்முதலை துஞ்சச் சக்கரமேறிந்த வரலாறு:—இந்திரத்யும்நன் என்னுமோ ரரசன் மஹாவிஷ்ணு பக்தனுயிருந்தான்; அவன் வழக்கப்படி ஒருநாள் விஷ்ணுபூஜை செய்துகொண்டிருந்தபோது அகஸ்திய மஹாமுனிவன் அவனிடம் எழுந்தருளினன்; அப்பொழுது அவ்வரசன் தன் கருத்து முழுவதையும் திருமாலைப் பூஜிப்பதில் செலுத்தியிருந்ததனுல் அம்முனிவனது வருகையை அறியாதவனுய் அவனுக்கு உபசாரமொன்றுஞ் செய்யாதிருந்தான்; அம்முனிவன் இப்படி அரசன் நம்மை அலக்ஷியஞ்செய்தானென்று மாறுகக்கருதிக் கோபித்து 'நீ யானைபோலச் செருக்குற்றிருந்ததனுல் யானையாகக்கடவை' என்று சபிக்க, அங்ஙனமே அவன் ஒரு காட்டில் யானையாகத் தோன்றினன்; ஆயினும் முன்செய்த விஷ்ணுபக்தியின் மஹிமையினுல் அப்பொழுதும் விடாமல் நாள்தோறும் ஆயிரந் தாமரைமலர்களைக்கொண்டு திருமாலை அருச்சித்துப் பூஜித்து வருகையில், ஒருநாள் பெரியதொரு தாமரைத் தடாகத்தில் அர்ச்சனைக்காகப் பூப்பறிக்கப் போய் இறங்கிற்று; (இஃது இப்படியிருக்க:) முன்பொருகால் தேவல னென்னும் முனிவன் ஒரு நீர்நிலையில் நின்று தவஞ்செய்து கொண்டிருந்தபோது 'ஹூஹூ' என்னும் கந்தர்வனொருவன் அம்முனிவனது காலைப் பற்றியிழுக்க, அதனுல் கோபங்கொண்ட அவனது சாபத்தால் முதலையாய்க் கிடந்து தன் சாபமோக்ஷத்திற்காக கஜேந்திரனுடைய வரவை எதிர்பார்த்தவண்ணமாயிருக்கின்றான். தெய்வவசமாக இந்த கஜேந்திராழ்வான் அப்பொய்கையிற் சென்று பூப்பறிக்க இறங்கினவுடனே அம்முதலை இதன் காலைக் கவ்விக்கொள்ள, அதனை விடுவித்துக் கொள்ள முடி

யாமல் கஜேந்திரன் 'ஆதிமூலமே!' என்று கூவியழைக்க, உடனே திருமால் கருடாரூடனாய் அப்பொய்கைக் கரையிலே அரைகுலையத் தலைகுலைய விரைந்தெழுந்தருளித் தனது திருவாழியைப் பிரயோகித்து முதலையைத் துணித்து இறுதியில் அதற்கு முக்தியை அருளினன் என்பதாம்.

அப்பெருமான் பஞ்சேந்திரியங்களாகிற பலமுதலைகளின் வாயிலே அகப்பட்டுத் துடிக்கின்ற நம்மைக் காத்தருள வேண்டித் திருவட்டபுயகரத்திலே வந்து ஸந்நிதிபண்ணி நின்றான்; அவன் திருவடிகளே தஞ்சம்—என்றாராயிற்று. .... (௯௯)

சார்வு நமக்கென்றும் சக்கரத்தான் * தண்டுழாய்த்
தார்வாழ் வரைமார்பன் தான்முயங்கும் *—காரார்ந்த
வானமரு மின்னிமைக்கும் வண்டாமரை நெடுங்கண் *
தேனமரும் பூமேல் திரு. (௧௦௦)

சக்கரத்தான்	திருவாழியைக் கையிலே உடையவனும்
தண் துழாய் தார் வாழ்	குளிர்ந்த திருத்துழாய் மாலை விளங்கப் பெற்ற
வரை மார்பன் தான்	மலைபோன்ற திருமார்பை யுடையனுமான எம்பெருமானால்
முயங்கும்	ஸம்ச்லேஷிக்கப் படுகின்றவளாய்
கார் ஆர்ந்த வான்	மேகங்கள் செறிந்த ஆகாசத்திலே
அமரும்	நிலைத்து நிற்கக் கூடியதான
மின்	மின்னல்போல
இமைக்கும்	விளங்குகின்றவளாய்
வண் தாமரை	அழகிய தாமரைப் பூப்போன்று
நெடு	நீண்ட
கண்	திருக்கண்களை யுடையளாய்
தேன் அமரும் பூ மேல்	தேன் நிறைந்த தாமரைப் பூவில் வஸிப்பவளான
திரு	பெரிய பிராட்டியார்
நமக்கு என்றும் சார்வு	நமக்கு எப்போதும் சரணம்.

* * *—கீழ்ப்பாட்டில் 'எம்பெருமான் திருவடிகளே சரணம்' என்றார்; இப்பாட்டில் 'பிராட்டி திருவடிகளே சரணம்' என்கிறார். எம்பெருமான் திருவடிகளை நேரே பற்றுவதற்கில்லையே; 1. "நீரிலே நெருப்புக் கிளருமாபோலே குளிர்ந்த திரு

1. முமுக்ஷுப்படி ரஹஸ்யம்.—2.

வுள்ளத்திலே அபராதத்தாலே சீற்றம் பிறந்தால் பொறுப்பது இவளுக்காக” என்கிறபடியே ஸர்வாபராதங்களையும் பொறுப் பிக்க வல்ல பெரிய பிராட்டியார் புருஷகாரமாகவே எம்பெருமா னைப் பற்றவேண்டி யிருத்தலால் அப்புருஷகாரவரணத்தை இப் பாட்டால் செய்து இப்பிரபந்தத்தையும் தலைக்கட்டுகிறார்.

“தேனமரும் பூமேல் திரு—நமக்கு என்றும் சார்வு” என்று அந்வயிப்பது. நடுவிலுள்ளவை பிராட்டிக்கு விசேஷணங்கள். “சக்கரத்தான் தண்டுழாய்த் தார்வாழ் வரைமார்பன் தான் முயங் கும்” என்பது ஒரு விசேஷணம்; “காரார்ந்த வானமரும் மின் னிமைக்கும்” என்பது இரண்டாம் விசேஷணம்; “வண்தாமரை நெடுங்கண்” என்பது மூன்றும் விசேஷணம்.

இவளுடைய போக்யதையைக் கண்டு ஒரு நொடிப்பொழுதும் விடமாட்டாமல் எம்பெருமான் இவளை நித்ய ஸம்ச்லேஷம் செய் திருக்கிறானென்பது முதல் விசேஷணத்தின் கருத்து. எம்பெருமா னுடைய வைலக்ஷண்யம் சொல்ல வேண்டில் 1. “அகலகில்லே னிறையுமென்று அலர்மேல்மங்கையுறை மார்பா!” என்று பிராட்டி மேல்விழுந்து அநுபவிப்பதாகச் சொல்லுவர்கள்; பிராட்டிக்கு வைலக்ஷண்யம் சொல்லவேண்டில் இவளை அவன்தான் மேல் விழுந்து அநுபவிப்பதாகச் சொல்லுவர்கள்: இரண்டு படியும் தகுமிறே.

நிலைநின்று விளங்கமாட்டாத மின்னல் போன்றிராதே நிலை நின்று விளங்குவதொரு விலக்ஷணமான மின்னல்போலே பிரகா சிப்பவளென்கிறது இரண்டாம் விசேஷணம். மின்னல் மேகத் திலே ஜ்வலிக்கும்; இவளும் காளமேகத் திருவுருவிலே.

வண்தாமரை நெடுங்கண்=ஸ்த்ரீகளின் கண்ணழகை வர் ணிக்குமிடத்து “குவளையங் கண்ணி” என்றும் “கருங்கண்ணி” என்றும் “அஸிதேக்ஷணா” என்றும் வர்ணிப்பதே பொருத்த முடைத்தென்றும் தாமரைமலர் போன்றதாக வருணித்தல் சிறவா தென்றும், அவ்வுவமை புருஷோத்தமனது திருக்கண்ணுக்கே பொருந்துமென்றும் சிலர் சொல்லுவர்; அது பொருந்தாது: ‘பத்மாக்ஷீ’ ‘பங்கஜாக்ஷீ’ என்ற விசேஷணங்களும் மஹாகவிநிபந்

1, திருவாய்மொழி 6-10-10.

தங்களில் பெரும்பாலுங் காணுகின்றோம்; அன்றியும், ஸ்ரீஸூக்தத்தில் "𑌪𑌦𑍍𑌮𑌾𑌲𑌯𑍇 𑌪𑌦𑍍𑌮𑌿𑌨𑌿 𑌪𑌦𑍍𑌮𑌹𑌸𑍍𑌤𑍇 𑌪𑌦𑍍𑌮𑌪𑍍𑌰𑌿𑌯𑍇 𑌪𑌦𑍍𑌮𑌦𑌳𑌾𑌯தாக்ஷி—பத்மாலயே பத்மிநி பத்மஹஸ்தே பத்மப்ரியே பத்மதளாயதாக்ஷி" என்று ஓதப்பட்டிருத்தலால் அதையடியொற்றின வண்டாமரை நெடுங்கண் என்ற இவ்விசேஷணம் மிகப் பொருத்தமானதென்க. கண்களின் நீட்சிக்குத் தாமரையிதழ்களும் கருமைக்குக் குவளைமலரும் உவமையென்றுணர்க.

ஆக, இப்படிப்பட்ட பெரிய பிராட்டியாரே நமக்குத் தஞ்சம் என்று தலைக்கட்டினாராயிற்று ... ... *

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.

பெருமாள்கோயில் பிரதிவாதிபயங்கரம்
அண்ணங்கராசாரியர் ஸ்வாமி அருளிச்செய்த
திவ்யப்ரபந்த திவ்யார்த்த தீபிகையில்
மூன்றாந்திருவந்தாதி உரை
முற்றுப்பெற்றது.

1. திரு வின்றே மனம் மருந்து மடிவண்ணம்
அழகன் கழல்தொழு நாமங் கண்ணும்
தேசுந்திறலு நன்கோது.

2. நன்கறிவென்னும் படிவட்ட மாற்பால்
பணிந்துயர் வந்துதை சென்றநாள் வாய்மொழி,
அருளாதொழியும் முன்னுலகம் பேசுவார்.

3. பேசுவார் வடிவார் விருப்பி வருங்கால்
தொழுதால் சிறந்தவென் ஆரே அடைந்தது
பேய்ச்சிபால் சேர்ந்ததிருமா லிவையவன்.

4. இவை பாற்கடலும் பாலக னன்றிவ்வுலகம்
காண்காண் கையகன லவற்கடிமை தானுவமன்
இறையா யுளன்விண் மன்னுமணிமுடி.

5. மன்னு கோவலனாய் சினமா வுலகமும்
புரிந்துமத மலைமுகடு நின்றபெருமானே,
நீயன்றே செற்றதுவும் சூழ்ந்ததுழா யவனே.

6. அவனே யெய்தான் முயன்று தாளாற்சகடம்
பெரியவரை நிறம்வெளிது பொலிந்திருண் டெளிந்த,
வாழும்வகை பெற்றம்பிணைமருதம் பண்டெல்லாம்.

7. பண்டு விண்ணகரம் தாழ்சடை யிசைந்த
அங்கற்கிடர் காய்ந்திருளை ஆங்குமலர் பார்த்த
வெற்பென்றுபாடும் புகுமதக் களிறு.

8. களிறு குன்றொன்றின் இடம்வலம் நலமே
சார்ந்தகடு பொருப்பிடை, ஆய்ந்தவரு அரனும்
ஓர்த்தமன நின்றெதிர் நெஞ்சால் நினைப்பரி.

9. நெஞ்சாலுணரில் இனியவ னுளனாய
கவியினா ரெழில்கொண்டு கலந்துமணி யதுநன்று
முடிந்தபொழுதிற் சிலம்பும் மண்ணுண்டும்.

10. மண்ணுண்டும் மகனொருவர் நினைத்துலகி லுய்த்துணர்வு
புகுந்திலங்கு வாழ்த்தியவாய் அலரெடுத் திமஞ்சூழ்
தொட்டபடையெட்டும் சார்வு திருக்கண்டேன்.

ஆழ்வார் திருவடிகளே சரணம்.

எம்பெருமானார் திருவடிகளே சரணம்.

ஜீயர் திருவடிகளே சரணம்.